www.padippakam.com

# கூட்டு அரசாங்கம் பற்றி



மாசேதுங்

படிப்பகம்

www.padippakam.com

# கூட்டு அரசாங்கம் பற்றி

(ஏப்ரல் 24, 1945)

மாசேதுங்

விடியல் பதிப்பகம்
கோவை-641015

படிப்பகம்

www.padippakam.com

பதிப்பு : முதற் பதிப்பு
மே, 1989.

விலை : பத்து ரூபாய்கள்

வெளியீடு : விடியல் பதிப்பகம்,
கோவை—641015.

முகவரி : பெ. சிவஞானம்,
3, மாரியம்மன் கோயில் வீதி,
உப்பிலிபாளையம்,
கோவை—641015.

அச்சு அமைப்பு : பெரியார் அச்சிடுவோர்
வெளியிடுவோர் குழுமம்,
சென்னை—600005.

பிரதிகள் கிடைக்கும்
இதர முகவரிகள் : சமரன் பதிப்பகம்,
52/4, மேட்டுத் தெரு,
சாத்துமா நகர்,
சென்னை—600019.

சிலிக்குயில்,
20, கோதண்டபாணித் தெரு,
கும்பகோணம்—612001.

## உள்ளடக்கம்

1. **சீனமக்களின் அடிப்படைத் தேவைகள்** 1

2. **சர்வதேச, உள்நாட்டு நிலைமை** 3

3. **ஜப்பானிய எதிர்ப்பு யுத்தத்தில் இரண்டு நெறிகள்** 8

சீனாவின் பிரச்சினைக்கான திறவு கோல் 8
வரலாறு நெளிந்து வளைந்து செல்லும் பாதையில் செல்கிறது 10
மக்கள் யுத்தம் 17
இரு போர் முனைகள் 24
சீனாவின் விடுதலையாக்கப்பட்ட பகுதிகள் 28
கோமிங்டாங் பகுதிகள் 30
ஒரு வேறுபாடு 34
"ஜப்பானிய எதிர்ப்பு யுத்தத்தை உள்ளிருந்தே நாசப் படுத்துவதும், அரசை அபாயத்திற்கு உள்ளாக்குவதும்" யார்? 37
"அரசாங்க, இராணுவக் கட்டளைகளுக்குப் பணியாமை" 39
உள்நாட்டுப் போர் அபாயம் 40
பேச்சு வார்த்தைகள் 41
இரு சாத்தியப் பாடுகள் 42

4. **சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கை** 46

நமது பொது வேலைத் திட்டம் 48
நமது குறிப்பான வேலைத் திட்டம் 61

படிப்பகம்

www.padippakam.com



1. ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களை முற்றாக அழிப்பது, இடைவழிச் சமரசம் எதையும் அனுமதிக்கக் கூடாது 69
2. கோமிங்டாங் ஒரு கட்சி சர்வாதிகாரத்தை ஒழித்து ஜனநாயகக் கூட்டு அரசாங்கமொன்றை நிறுவுதல் 70
3. மக்களுக்குச் சுதந்திரம் 75
4. மக்களின் ஐக்கியம் 78
5. மக்கள் படை 80
6. நிலப்பிரச்சினை 84
7. தொழிற்துறைப் பிரச்சினை 94
8. கலாச்சாரம் கல்வி மற்றும் அறிவு ஜீவிகளின் பிரச்சினை 98
9. சிறுபான்மை தேசிய இனங்களின் பிரச்சினை 100
10. வெளி விவகாரக் கொள்கை பற்றிய பிரச்சினை 103
கோமிங்டாங் பகுதிகளிலான பணிகள் 106
ஜப்பானியர் ஆக்கிரமித்துள்ள பகுதிகளிலான பணிகள் 109
விடுதலையாக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பணிகள் 111
5. கட்சி முழுவதும் ஐக்கியப்படட்டும், தன் பணிகளை நிறைவேற்ற போராடட்டும் 117

# 1. சீன மக்களின் அடிப்படைத் தேவைகள்

நமது மாநாடு பின்வரும் சூழ்நிலைமைகளில் நடைபெற்றுக் கொண்டுள்ளது. சீன மக்களால் ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக எண்ணற்ற தியாகங்களோடும் சொல்லி முடியாத துன்பங்களுக்கு இடையிலும் நடத்தப்பட்ட சுமார் எட்டு ஆண்டுக்கால உறுதியான, வீரமிக்க, தளர்வுறாத போராட்டத்திற்குப் பின்னர் ஒரு புதிய நிலைமை தோன்றியுள்ளது; உலகம் முழுவதும் பாசிஸ்ட் ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிரான, நியாயமான, புனிதமான யுத்தத்தில் தீர்மானகரமான வெற்றி பெறப்பட்டுள்ளது. மேலும் ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களை நேசநாடுகளின் ஒத்துழைப்புடன் சீனமக்கள் தோற்கடிக்கப் போகும் தருணமும் நெருங்கியுள்ளது. ஆனால் சீனா ஒற்றுமையற்றும், ஒரு கடுமையான நெருக்கடியை எதிர்நோக்கியும் உள்ளது. இந்தச் சூழ்நிலைகளில் நாம் என்ன செய்ய வேண்டும்? ஐயத்திற்கே இடமின்றி அவசர தேவையானது ஜனநாயக சீர்திருத்தங்களை ஏற்படுத்துவதும், தற்போதைய நெருக்கடியைக் கடப்பதும், ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களைத் தோற்கடிப்பதற்காக நேச நாடுகளுடன் ஒத்துழைத்துப் போரிட நாட்டில் உள்ள ஜப்பானிய எதிர்ப்புச் சக்திகளையெல்லாம் அணிதிரட்டுவதும், ஒன்று படுத்துவதும் இதன் மூலம் சீன மக்கள் தங்களைஜப்பானிய ஆக்கிரப்பாளர்களின் பிடியிலிருந்து விடுவித்துக் கொள்ளக் கூடிய நோக்கத்திற்காக எல்லா அரசியல் கட்சிகள், மற்றும் கோஷ்டிகளின் பிரதிநிதிகளையும், எக்கட்சியையும் சாராத மக்களின் பிரதிநிதிகளையும் ஒன்று சேர்த்துத் தற்காலிக ஜனநாயகக் கூட்டு அரசாங்கம் ஒன்றை நிறுவுவதும் ஆகும். அதன் பின்னர் ஒரு பரந்த ஜனநாயக அடிப்படையைக் கொண்ட ஒருதேசிய சட்டசபையைக் கூட்டுவதும் கூட்டுத்

படிப்பகம்

www.padippakam.com



தன்மை கொண்ட எல்லாக் கட்சிகள், கோஷ்டிகள் அல்லது எக்கட்சிச் சார்பும் இல்லாதவர்களின் இன்னும் பரந்த பிரதிநிதித்துவத்தையுடைய சுதந்திரமான, விடுதலையடைந்த, ஜனநாயகமான, ஐக்கியமடைந்த, வளம் நிறைந்த, சக்தி மிக்க புதிய சீனா ஒன்றைக் கட்டியெழுப்புவதில் விடுதலையடைந்த நாட்டு மக்கள் அனைவருக்கும் தலைமை தாங்கக் கூடிய முறைப்படியமைந்த ஜனநாயக அரசாங்கம் ஒன்றை நிறுவுவதும் அவசியமாய் இருக்கும். சுருங்கச் சொன்னால் நாம் ஒற்றுமையும் ஜனநாயகமும் உடைய பாதையை மேற்கொள்ள வேண்டும்; ஆக்கிரமிப்பாளர்களைத் தோற்கடிக்க வேண்டும்.

இது ஒன்று மட்டுமே சீன மக்களின் அடிப்படைத் தேவைகளை வெளிப்படுத்த முடியும் என நாம் நம்புகிறோம். எனவே, எனது அறிக்கை பிரதானமாக இத்தகைய தேவைகளுடன் தொடர்பு கொண்டதாகும். ஜனநாயகக் கூட்டு அரசாங்கம் நிறுவப்பட வேண்டுமா, வேண்டாமா என்பது சீன மக்களுக்கும், நேச நாடுகளில் உள்ள ஜனநாயகப் பொது மக்களின் அபிப்பிராயத்திற்கும் ஆழ்ந்த அக்கறைக்குரிய விஷயமாகி உள்ளது. ஆகவே எனது அறிக்கை இந்த பிரச்சினையைத் தெளிவுபடுத்துவதற்குக் குறிப்பான அழுத்தம் தரும்.

ஜப்பானிய எதிர்ப்பு யுத்தத்தின் எட்டு ஆண்டுகளில் சீனக் கம்யூனிஸ்டு கட்சி பல இடர்களைக் கடந்தும், பெரும் சாதனைகளை ஈட்டியும் உள்ளது. எனினும் தற்போதைய சூழ்நிலையில் இன்னும் நமது கட்சியையும், மக்களையும் மிகக் கடுமையான இடர்கள் எதிர் நோக்குகின்றன. நமது கட்சி இன்னும் அதிக உறுதியாகவும் உக்கிரமாகவும் வேலை செய்ய வேண்டும் என்றும் அது தொடர்ந்து இடர்களைக் கடக்கவும் சீன மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முயலவும் வேண்டுமென்றும் தற்போதைய நிலைமை கோருகின்றது.

## 2. சர்வதேச, உள்நாட்டு நிலைமை

சீன மக்களால் இந்த அடிப்படைத் தேவைகளை அடைய முடியுமா? இது அவர்களின் அரசியல் உணர்வின் மட்டம், அவர்களது ஒற்றுமை, அவர்களது முயற்சிகள் ஆகியவற்றைச் சார்ந்ததாகும். அதே சமயத்தில், தற்போதைய சர்வதேச, உள்நாட்டு நிலைமைகள் மிக மிகச் சாதகமான வாய்ப்புகளை அளிக்கின்றன. சீன மக்களால் இந்த வாய்ப்புகளை நன்கு பயன்படுத்தவும், திடமாகவும், வீறுடனும் விடாப்பிடியாகவும் தொடர்ந்து போரிடவும் முடியுமானால் அவர்கள் ஐயத்திற்கிடமின்றி ஆக்கிரமிப்பாளர்களைத் தோற்கடித்துப் புதிய சீனா ஒன்றையும் கட்டி எழுப்ப முடியும். அவர்கள் தம் துரித பணிகளை நிறைவேற்றுவதற்கான தம் போராட்டத்தில் தம் முயற்சிகளை இரட்டிப்பாக்க வேண்டும்.

### தற்போதைய சர்வதேச நிலைமை என்ன?

தற்போதைய ராணுவ நிலைமையானது சோவியத் படை பெர்லினைத் தாக்குவதும், பிரிட்டன், அமெரிக்கா, பிரான்சு ஆகியவற்றின் கூட்டுப் படைகள் சோவியத்தின் முன்னேறித் தாக்குதலுக்கு ஒத்துழைக்கும் வகையில் ஹிட்லரிச மிச்ச சொச்சங்களைத் தாக்குவதும், இதே வேளையில் இத்தாலிய மக்கள் எழுச்சிகளைத் தொடுத்துக் கொண்டிருப்பதும் ஆகும். இவையாவும் ஹிட்லரை ஒரேடியாக ஒழித்துக் கட்டும். ஹிட்லர் ஒழித்துக் கட்டப்பட்ட பின்னர், ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களை முறியடிப்பதானது வெகு தூரத்தில் இல்லை. சீன, அன்னிய பிற்போக்காளர்களின் முன் கூற்றுகளுக்கு மாறாக பாசிஸ்ட் ஆக்கிரமிப்புச் சக்திகள் ஐயத்திற்கிடமின்றி வீழ்த்தப்படும்; மக்களின் ஜனநாயக சக்திகள் ஐயத்திற்கிடமின்றி வெற்றி ஈட்டும். உலகம் கேள்விக்கிடமின்றி

படிப்பகம்

www.padippakam.com



முன்னேற்றப்பாதையையே தேர்ந்தெடுக்கும். பிற்போக்குப் பாதையை அல்ல. உண்மையில் நாம் மிக மிக விழிப்புடன் இருக்க வேண்டும்: சம்பவங்களின் போக்கில் சிற்சில தற்காலிகமான அல்லது ஒரு வேளை தீவிரமான நெளிவு சுளிவுகளும் ஏற்படும் சாத்தியப் பாட்டைக் கணக்கிலெடுக்கவும் வேண்டும்: பல நாடுகளில் உள்ள பலமான பிற்போக்குச் சக்திகள் தம் சொந்த நாட்டிலும், அயல் நாடுகளிலும் உள்ள மக்கள் ஒற்றுமை, முன்னேற்றம், விடுதலை ஆகியவற்றை அடைவதை விரும்பாதவைகளாக உள்ளன. இந்தச் சாத்தியப் பாட்டைக் காண தவறும் எந்த ஒரு நபரும் அரசியல் தவறுகள் இழைப்பர். இருப்பினும் வரலாற்றின் பொதுவான போக்கு ஏற்கனவே தெளிவாக முடிவாகி விட்டது. இனி மாற்ற முடியாது. இது பாஸிஸ்டுகளுக்கும் உண்மையில் அவர்களின் உதவியாளர்களேயான அனைத்து நாடுகளினுடைய பிற் போக்காளர்களுக்கும் மட்டுமே தீயது: ஆனால் அனைத்து நாடுகளிலுமுள்ள மக்களுக்கும் அமைப்பு ரீதியாகத் திரண்ட ஜனநாயக சக்திகளுக்கும் இது ஒரு நன்மை பயப்பதாகும் மக்களே மக்கள் மட்டுமே, உலக வரலாற்றின் இயக்கு சக்தி ஆவர். சோவியத் மக்கள் மகத்தான பலத்தை உருவாக்கியுள்ளனர். பாசிசத்தைத் தோற்கடிப்பதில் பிரதான சக்தியாக உள்ளன. பாசிசத்தின் தகர்ப்பைச் சாத்தியமாக்குபவை, பிற பாசிச விரோத நேச நாடுகளிலுள்ள மக்களின் முயற்சிகளோடு, சோவியத் மக்களின் முயற்சிகளுமாகும். யுத்தம் மக்களுக்குக் கல்வி புகட்டியுள்ளது. மக்களே யுத்தத்தில் வெல்வர், சமாதானத்தையும் முன்னேற்றத்தையும் அடைவதில் வெற்றி பெறுவர்.

இந்தப் புதிய நிலைமை முதல் உலக யுத்தத்திலிருந்த நிலைமையிலிருந்து மிகவும் வேறுபாடானது. அப்போது சோவியத் யூனியன் தோன்றி இருக்க வில்லை: மக்களும் இன்று பல நாடுகளில் விழிப்புற்றிருப்பது போல் அரசியல் ரீதியில் அப்போது விழிப்புற்றிருக்கவில்லை. உலக யுத்தங்கள் இரண்டு முற்றிலும் வேறான இரு சகாப்தங்களைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்றன.



பாசிச ஆக்கிரமிப்பு நாடுகள் தோற்கடிக்கப்பட்ட பின்னர் இரண்டாம் உலக யுத்தம் முடிந்த பின்னர், சர்வ தேச சமாதானம் நிலைநாட்டப்பட்ட பின்னர் அதற்கு மேல் போராட்டங்கள் எதுவும் இராது என்று இதற்கு அர்த்தமல்ல. இன்னும் பரவலாகச் சிதறியுள்ள மிச்ச சொச்ச பாசிஸ்டு சக்திகள் நிச்சயமாகத் தொடர்ந்து தொல்லை விளைவிக்கும்; அதே சமயம் பாசிஸ்டு ஆக்கிரமிப்பிற்கு எதிராகப் போரிடும் முகாமிற்குள்ளும் ஜனநாயகத்தை எதிர்ப்பவையும் பிற தேசங்களையும் ஒடுக்குபவையுமான சக்திகள் உள்ளன; இவை தொடர்ந்து பல்வேறு நாடுகளிலும் காலனி, அரை காலனிகளிலுமான மக்களை ஒடுக்கிவிடும். எனவே, சர்வதேச சமாதானம் நிலைநாட்டப் பட்ட பின்னர் இன்னும் உலகின் பெரிய பாகத்தில் எண்ணற்ற போராட்டங்கள்—பாசிச விரோத மக்கள் திரளுக்கும் பாசிசத்தின் மிச்ச சொச்சங்களுக்கிடையிலும், தேசிய விடுதலைக்கும் தேசிய அடக்குமுறைக்கு இடையிலும்—இருக்கும். மக்கள் நீண்ட நிலையான முயற்சிகளின் மூலம், எஞ்சியுள்ள பாசிச சக்திகளையும், ஜனநாயக விரோத சக்திகளையும் எல்லா ஏகாதிபத்திய சக்திகளையும் வெற்றி கொள்ளும் போது மட்டுமே மிகப்பரந்த அளவில் வெற்றியை ஈட்டுவர். நிச்சயமாக அந்நாள் மிக விரைவாகவும் எளிதாகவும் வராது, ஆனால் கட்டாயம் வந்தே தீரும். பாசிச விரோத இரண்டாம் உலக யுத்தத்தில் பெறப்படும் வெற்றி, யுத்தத்திற்குப் பின் மக்கள் நடத்தும் போராட்டங்களில் அவர்களுடைய வெற்றிக்குப் பாதை அமைக்கும். இந்தப் போராட்டங்களில் வெற்றி ஈட்டப்படும் போது மட்டுமே நிலையான, நிரந்தரமான ஒரு சமாதானம் உறுதிப் படுத்தப்படும். தற்போதைய உள்நாட்டு நிலை என்ன?

படிப்பகம்

www.padippakam.com



சீனாவின் நீண்ட யுத்தம் சீன மக்களிடம் பெரும் தியாகங்களைப் பிழிந்து எடுத்துள்ளது. தொடர்ந்தும் பிழிந்தெடுக்கும்; ஆனால் அதே நேரத்தில் இந்த யுத்தமே அவர்களைப் புடமிட்டுமுள்ளது. இது சீன மக்களைக் கடந்த நூறு ஆண்டுகளில் நடந்த அவர்களின் பெரும் போராட்டங்கள் எல்லாம் செய்ததை விடப் பெரிய அளவிற்கு விழிப்புறுத்சியும், ஐக்கியப் படுத்தியுமுள்ளது. சீன மக்கள் பலமிக்க ஒரு தேசியவிரோதியை மட்டுமின்றி உண்மையில், விரோதிக்கு உதவி செய்கின்ற சக்தி மிக்க உள்நாட்டுப் பிற்போக்குச் சக்திகளையும் எதிர் கொண்டுள்ளனர்; இது சித்திரத்தின் ஒரு பக்கம் தான், ஆனால் மற்ற பக்கம் சீன மக்கள் முன் எப்போதையும் விட அதிகம் அரசியல் ரீதியில் உணர்வு பெற்றும், வலுவான விடுதலைப் பகுதிகளை நாளுக்கு நாள் வளர்த்து வரும் ஒரு நாடு தழுவிய ஜனநாயக இயக்கத்தைத் தட்டி எழுப்பியுமுள்ளனர் என்பதாகும். இவை சாதகமான உள்நாட்டுச் சூழ்நிலைகளை ஏற்படுத்துகின்றன. சீன மக்களின் கடந்த நூறு ஆண்டுகளின் போராட்டங்களிலான தோல்விகளுக்கும் பின்னடைவுகளுக்கும் காரணம் சிற்சில அவசியமான சர்வதேச உள்நாட்டுச் சூழ்நிலைகள் அப்போது இல்லை என்பதாகும். இன்று நிலைமை வேறு விதமாக உள்ளது. தற்சமயம் அவசியமான சூழ்நிலைகள் எல்லாம் உள்ளன. தோல்வியைத் தவிர்க்கவும் வெற்றியை ஈட்டவும் அனைத்துச் சாத்தியங்களும் உள்ளன. நம்மால் மக்கள் அனைவரையும் உறுதியான போராட்டத்தில் ஒன்று படுத்தவும் அவர்களுக்குத் தகுந்த தலைமை அளிக்கவும் முடிந்தால் நாம் வெற்றி அடைவோம்.

சீன மக்கள் இப்போது தங்கள் ஆக்கிரமிப்பாளர்களைத் தோற்கடிப்பதற்கும் புதிய சீனா ஒன்றைக் கட்டி எழுப்புவதற்கும் ஒன்றுபட இயலும் என மிகப் பெரிய நம்பிக்கை கொண்டுள்ளனர். அவர்கள் அனைத்து இடர்களைக் கடப்பதற்கும் உன்னதமானதும் வரலாற்று முக்கியத்



துவம் உடையதுமான தமது விருப்பங்களாக உள்ள அடிப்படை கோரிக்கைகளை வென்றடையவும் நேரம் வந்துள்ளது. இது பற்றி ஐயம் ஏதும் உள்ளதா? இல்லை என்றே நான் நினைக்கிறேன்.

இன்று பொதுவான சர்வதேச, உள்நாட்டு நிலைமை இப்படித்தான் உள்ளது.

படிப்பகம்

www.padippakam.com

# 3. ஜப்பானிய எதிர்ப்பு யுத்தத்தில் இரண்டு நெறிகள்

### *சீனாவின் பிரச்சினைக்கான திறவுகோல்*

உள் நாட்டு நிலைமையைப் பற்றிப் பேசும் போது நாம் சீனாவின் ஜப்பானிய எதிர்ப்பு யுத்தத்தைப் பற்றி ஒரு குறிப்பான ஆய்வு செய்ய வேண்டியுள்ளது.

சீனா பாசிசத்திற்கு எதிரான யுத்தத்தில் பங்கு பெறும் ஐந்து மிகப் பெரிய நாடுகளில் ஒன்றாகும்; அத்துடன் அது ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக ஆசியக் கண்டத்தில் சண்டையிடும் பிரதான நாடுமாகும். சீன மக்கள் ஜப்பானுக்கு எதிரான யுத்தத்தில் மிகப் பெரிய ஒரு பங்கை வகித்துள்ளனர் என்பது மட்டுமல்ல, அவர்கள் யுத்தத்திற்கு பின்னர் உலகில் சமாதானத்தைப் பாதுகாப்பதில் ஒரு மிகப் பெரிய பங்கையும், கிழக்கில் சமாதானத்தைப் பாதுகாப்பதில் தீர்க்கமான ஒரு பங்கையும் வகிப்பர். ஜப்பானுக்கு எதிரான எதிர்ப்பு யுத்தத்தின் எட்டு ஆண்டுகளின் போது சீனா தன்னை விடுவித்துக் கொள்ளவும் நேச நாடுகளுக்கு உதவி செய்யவும் மிகப்பெரும் முயற்சிகளை எடுத்துள்ளது. இந்த முயற்சிகள் முதன்மையாகச் சீனாவின் மக்களாலேயே எடுக்கப்பட்டன. சீனாவின் சேனைகளில் உள்ள பெருந்தொகையான தளபதிகளும், வீரர்களும் போர் முனையில் சண்டையிட்டு இரத்தம் சிந்தியும் உள்ளனர். சீனாவின் தொழிலாளர்களும், விவசாயிகளும், அறிவு ஜீவுகளும் தொழிலதிபர்களும் பின்புலத்தில் கடுமையாக உழைத்துள்ளனர்; கடல் கடந்து வாழும் சீனர்கள் யுத்தத்திற்கு ஆதரவாக நன்கொடைகள் அளித்துள்ளனர்; ஜப்பானிய எதிர்ப்பு அரசியல் கட்சிகள் எல்லாம், மக்களுக்கு எதிரானவர்களான அவற்றின் சில அங்கத்தினர்



கள் நீங்கலாக, யுத்தத்தில் தம் பங்கை ஆற்றியுள்ளன. சுருங்கச் சொன்னால் சீன மக்கள் தம் வியர்வையையும், இரத்தத்தையும் சிந்தி ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக நீண்ட எட்டு வருடகாலமாக வீரத்துடன் போரிட்டுள்ளனர். ஆனால் பல ஆண்டுகளாகச் சீனப் பிற்போக்காளர்கள் யுத்தத்தில் சீன மக்கள் ஆற்றிய பங்கு பற்றிய உண்மையை உலகம் அறிய விடாமல் தடுக்கவேண்டி வதந்திகளைப் பரப்பியும் பொதுமக்கள் அபிப்பிராயத்தைப் பிழையான வழியில் இட்டுச் சென்றும் வந்துள்ளனர். போர் நடைபெற்ற இந்த எட்டு ஆண்டுக்காலப் பகுதியில் சீனாவால் பெறப்பட்ட மாறுபாடான அனுபவத்தின் ஒட்டு மொத்த தொகுப்பு ஏதும் இன்னும் இல்லை. ஆகவே, இந்த மாநாடு, மக்களுக்குப் போதனை யூட்டவும் நமது கட்சிக்குக் கொள்கையை உருவாக்குவதற்கான அடிப்படையொன்றைத் தரவும் வேண்டி, இந்த அனுபவம் அனைத்தையும் தக்க விதத்தில் தொகுத்துக் கொள்ளுதல் வேண்டும்.

இப்படித் தொகுத்துக் காணும் போது, சீனாவில் இரு வேறுபட்ட வழி நடத்தும் நெறிகள் உள்ளன என்பது அனைவருக்கும் தெளிவு ஒன்று ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களைத் தோற்கடிப்பதற்கு இட்டுச் செல்கையில், மற்றது அவர்களைத் தோற்கடிப்பதை அசாத்தியமாக்குவது மட்டுமல்லாமல் சில வகைகளில் உண்மையில் உதவியும் செய்து நமது எதிர்ப்பு யுத்தத்தையும் வேரறுக்கிறது.

ஜப்பானுக்கு செயலற்ற எதிர்ப்பான கோமின்டாங் அரசாங்கத்தின் கொள்கையையும், மக்களைத் தீவிரமாக அடக்குவதான அதன் பிற்போக்கான உள்நாட்டுக் கொள்கையையும், ராணுவப் பின்னடைவுகளையும், பிரமாண்டமான பிரதேச இழப்புகளையும், நிதி, பொருளாதார நெருக்கடிகளையும், மக்களுக்கு அடக்கு முறையையும், கஷ்டத்தையும், தேசிய ஒற்றுமையின் சிதைவையும் விளைவித்திருக்கின்றன,

படிப்பகம்

www.padippakam.com



இந்தப் பிற்போக்கு கொள்கையானது போரைச் சக்தி வாய்ந்த விதத்தில் நடத்துவதற்குச் சீன மக்களிடையேயுள்ள ஜப்பானிய எதிர்ப்புச் சக்திகள் எல்லாவற்றையும் அணிதிரட்டுவதற்கும், ஐக்கியபடுத்துவதற்கும் ஒரு தடையாகவும், மக்கள் விழிப்படைவதையும், ஐக்கியப்படுவதையும் தடை செய்வதாகவும் உள்ளது. ஆயினும் இந்த அரசியல் விழிப்படைதலும், ஐக்கியமடைதலும், அபிவிருத்தி அடைவதும் ஒருபோதும் நின்றுவிடவில்லை; ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களதும்' கோமிங்டாங் அரசாங்கத்தினதும் இரட்டை அடக்குமுறையின் கீழ் நெளிந்து, வளைந்து செல்லும் சிரமமிக்க பாதையில் முன்னேறியுள்ளது. சீனாவில் நீண்டகாலமாகவே இரு நெறிகள் தெளிவாக உள்ளன ஒன்று மக்களை ஒடுக்குவதும், செயலற்ற எதிர்ப்பும் என்ற கோமிங்டாங் அரசாங்கத்தின் நெறி; இன்னொன்று, தங்களின் சொந்த உணர்வு மட்டத்தை உயர்த்திக் கொள்வதும், மக்கள் யுத்தத்தை நடத்துவதற்கான ஐக்கியமும் என்ற சீன மக்களின் நெறி— இதில்தான் சீனாவின் பிரச்சினைகள் அனைத்திற்குமான திறவுகோல் உள்ளது.

### *வரலாறு நெளிந்து வளைந்து செல்லும் பாதையில் செல்கிறது*

இந்த இரு நெறிகள் பற்றிய பிரச்சினை ஏன் சீனாவின் பிரச்சினைகளுக்கெல்லாம் திறவு கோலாக உள்ளது என்பதை மக்கள் புரிந்து கொள்ள உதவும் பொருட்டு நமது ஜப்பானிய எதிர்ப்பு யுத்தத்தின் வரலாற்றை விரித்துரைப்பது அவசியமாகும்.

சீன மக்களின் எதிர்ப்பு யுத்தம் ஒரு சிரமமிக்க பாதை வழியே சென்றுள்ளது. நீண்டகாலத்துக்கு முன்பே அதாவது 1931ஆம் ஆண்டிலேயே இது தொடங்கி விட்டது. அந்த ஆண்டு செப்டம்பர் 18ஆம் தேதி ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்கள் ஷென்யாங்கைக் கைப்பற்றினர் ; ஒரு சில மாதங்



களுக்குள் அவர்கள் வடகிழக்கு மாகாணங்கள் மூன்றையும் பிடித்துக் கொண்டனர். கோமிங்டாங் அரசாங்கம் எதிர்ப்பின்மைக் கொள்கையைக் கடைபிடித்தது. ஆனால் கோமிங்டாங் அரசாங்கத்தின் விருப்பத்திற்கும் மாறாக, சீனக் கம்யூனிஸ்டு கட்சியால் தலைமை தாங்கபட்டோ அல்லது அதன் உதவியுடனோ இம் மாகாணங்களின் மக்களும் துருப்புகளின் ஒரு தேசபக்த பிரிவும் ஜப்பானிய எதிர்ப்புத் தொண்டர் படையையும், ஜப்பானிய எதிர்ப்பு ஐக்கிய சேனையையும் அமைத்து வீரமிக்கக் கொரில்லாப் போரில் ஈடுபட்டனர். ஒரு சமயம் இந்த வீரமிக்க கொரில்லாப் போர் மிகப் பெருமளவில் வளர்ந்தது ; பல துன்பங்களும் பின்னடைவுகளும் ஏற்பட்ட போதிலும் எதிரியால் இதை ஒரு போதும் அடக்க முடியவில்லை. 1932-இல் ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்கள் ஷாங்காயைத் தாக்கியபோது கோமிங்டாங்கிலிருந்த ஒரு தேசபக்த பிரிவினர் மீண்டும் ஒரு முறை கோமிங்டாங் அரசாங்கத்தின் விருப்பத்தையும் மீறி, ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களை எதிர்ப்பதில் 19-ஆவது வழி இராணுவத்துக்குத் தலைமை தாங்கினர். 1933-ஆம் ஆண்டில் ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்கள் ஜெஹோல் மற்றும் கேஹர்மாகாணங்களின் மீது படையெடுத்தனர் ; மூன்றாவது முறையாக கோமிங்டாங்கிலிருந்த தேசபக்த பிரிவு ஒன்று கோமிங்டாங்கின் விருப்பத்தையும் மீறி பகைவனை எதிர்ப்பதற்கு ஜப்பானிய-எதிர்ப்புக்கூட்டு இராணுவத்தை அமைப்பதில் கம்யூனிஸ்ட் கட்சியுடன் ஒத்துழைத்தது. ஆனால் ஜப்பானுக்கு எதிரான சண்டைக்குச் சீன மக்களிடமிருந்தும், சீனக் கம்யூனிஸ்ட் கட்சியிடமிருந்தும், இதர ஜனநாயக சக்திகளிடமிருந்தும், வெளிநாட்டிலிருந்த சீன தேசபக்தர்களிடமிருந்தும் முழுமையான ஆதரவு கிடைத்தது ; அதே சமயம் கோமிங்டாங் அரசாங்கம் எதிர்ப்பின்மைக் கொள்கையைக் கடைபிடித்துச் செயலற்று இருந்தது. ஷாங்காயிலும், கேஹரிலும் ஜப்பானிய-எதிர்ப்பு நடவடிக்கைகள் கோமிங்டாங் அரசாங்கத்தினாலேயே நாசம் செய்யப்பட்டன,

படிப்பகம்

www.padippakam.com



19-ஆவது வழி இராணுவத்தால் ஃபூகினில் அமைக்கப்பட்ட மக்கள் அரசாங்கத்தையும் 1933-இல் அது அழித்தது.

அந்நாளைய கோமிங்டாங் அரசாங்கம் எதிர்ப்பின்மைக் கொள்கையை ஏன் மேற்கொண்டது? கோமிங்டாங்-கம்யூனிஸ்ட் கூட்டுறவையும், சீன மக்களின் ஒற்றுமையையும், 1927-இல் அது சேதப்படுத்தியிருந்தது என்பதே பிரதான காரணமாகும்.

1924-இல் டாக்டர் சன்-யாட்-சென் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் பிரேரணைகளை ஏற்று, கோமிங்டாங்கின் முதல் தேசியக் காங்கிரசைக் கூட்டினார்; அதில் கம்யூனிஸ்ட் கட்சி பங்கெடுத்துக் கொண்டது; ரஷியாவுடன் ஒத்துழைப்பு, கம்யூனிஸ்ட் கட்சியுடன் கூட்டுறவு, விவசாயிகள் மற்றும் தொழிலாளர்களுக்கு உதவி என்ற மூன்று பெரும் கொள்கைகளை அவர் மேற்கொண்டார்; வாம்போவா இராணுவக் கலாசாலையை நிறுவினார்; கோமிங்டாங், கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் மக்களின் அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கிய தேசிய ஐக்கிய முன்னணியை உருவாக்கினார். இதன் விளைவாக, குவாங்டங் மாகாணத்தில் பிற்போக்குச் சக்திகள் 1924-25-இல் அழிக்கப்பட்டன; 1926-27-இல் வெற்றிகரமான வடக்குப் படையெடுப்பு நடத்தப்பப்பட்டது; யாங்ட்சே மற்றும் மஞ்சள் நதி நெடுக பெரும்பாலான பகுதிகள் பிடித்துக் கொள்ளப்பட்டன; வடக்கு யுத்தப் பிரபு அரசாங்கம் தோற்கடிக்கப் பட்டது; சீன வரலாற்றில் இதற்குமுன் கண்டிராத அளவில் விடுதலைக்கான மக்கள் போராட்டம் கட்டவிழ்த்துவிடப்பட்டது. ஆனால் 1927 வசந்த காலத்தின் கடைசியிலும் கோடைக் காலத்தின் ஆரம்பத்திலும் வடக்குப் படையெடுப்பு முன்னேறிக் கொண்டிருந்த ஒரு நெருக்கடியான நேரத்தில், ''கட்சிக் களையெடுப்பு'' என்னும் துரோகத்தனமான பிற்போக்கான கொள்கைகளும், கோமிங்டாங் ஆட்சியாளர்களால் மேற்



கொள்ளப்பட்ட படுகொலையும், இந்தத் தேசிய ஐக்கிய முன்னணியையும் - கோமிங்டாங், கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் சீன மக்களின் விடுதலை லட்சியத்துக்கு அர்ப்பணித்துக் கொண்ட அனைத்துத் தரப்பு மக்களையும் உள்ளடக்கிய ஐக்கிய முன்னணி- அதன் அனைத்துப் புரட்சிகரக் கொள்கைகளையும் நாசமாக்கின. நேற்றைய கூட்டாளிகளான சீனக் கம்யூனிஸ்ட் கட்சியும், சீனமக்களும் இன்றைய எதிரிகளாகக் கருதப்பட்டனர்; நேற்றைய எதிரிகளான ஏகாதிபத்தியவாதிகளும் நிலப்பிரபுக்களும் இன்றைய கூட்டணிகளாகக் கருதப்பட்டனர். எனவே, கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் மக்களுக்கு எதிரான ஒரு திடீர்த் தாக்குதல் அபரிமிதமாகத் தொடுக்கப்பட்டது; மாபெரும், சக்தி வாய்ந்த மற்றும் வீரியமிக்க புரட்சி நசுக்கப்பட்டது. இதன்மூலம் ஒற்றுமை போய் உள்நாட்டுப் போர் வந்தது; ஜனநாயகம் போய் சர்வாதிகாரம் வந்தது; ஒளிமயமான சீனா போய் இருள் சூழ்ந்த சீனா வந்தது. ஆனால், சீனக் கம்யூனிஸ்ட் கட்சியோ, சீன மக்களோ பணியவுமில்லை, வெற்றிக் கொள்ளப்படவுமில்லை, அழிக்கப்படவுமில்லை. அவர்கள் மீண்டும் சக்தி பெற்று, இரத்தத்தைத் துடைத்துக் கொண்டு, வீர மரணமுற்ற தோழர்களைப் புதைத்து விட்டு, மீண்டும் போரில் குதித்தனர். புரட்சியின் மாபெரும் உன்னதத்தை உயர்த்திப் பிடித்து, ஆயுதப் போராட்டத்தில் நுழைந்தனர்; சீனாவில் ஒரு பரந்த பிரதேசத்தில் அவர்கள் மக்கள் அரசாங்கங்களை நிறுவினர்; நிலச்சீர்திருத்தம் செய்தனர்; ஒரு மக்கள் சேனையை— சீனச் செஞ்சேனையை—அமைத்தனர். சீன மக்களின் புரட்சிகரச் சக்திகளைப் பாதுகாத்து விரிவாக்கினர். கோமிங்டாங் பிற்போக்குவாதிகளால் வெறுக்கப்பட்டிருந்த டாக்டர் சன்-யாட்-சென்னின் புரட்சிகர மூன்று மக்கள் கோட்பாடுகள் மக்களாலும், கம்யூனிஸ்ட் கட்சியாலும் பிற ஜனநாயக வாதிகளாலும் முன்னெடுத்துச் செல்லப்பட்டன.

ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களால் மூன்று வடகிழக்கு மாகாணங்கள் கைப்பற்றப்பட்ட பின்னர், 1933-இல் சீனத்

படிப்பகம்

www.padippakam.com



கம்யூனிஸ்ட் கட்சி, அப்போது கம்யூனிஸ்ட் தளப்பிரதேசங்களையும், செஞ்சேனையையும் தாக்கிக் கொண்டிருந்த கோமிங்டாங் படைகள் அனைத்துக்கும், ஜப்பானுக்கு எதிரான ஒரு ஐக்கியப்பட்ட எதிர்ப்பை உருவாக்கும் பொருட்டு ஒரு போர் நிறுத்த ஒப்பந்தம் செய்யப்பட வேண்டும் என்ற பிரேரணையை முன்வைத்தது. மூன்று நிபந்தனைகளுடன் அந்தப் பிரேரணை முன் வைக்கப்பட்டது. அவையாவன :- தாக்குதல்கள் நிறுத்தப்பட வேண்டும், மக்களுக்கு ஜனநாயக உரிமைகள் அளிக்கப்பட வேண்டும், மக்கள் ஆயுதபாணிகளாக்கப்பட வேண்டும். ஆனால் கோமிங்டாங் ஆட்சியாளர்கள் அதை நிராகரித்தனர்.

அதன் பிறகு உள்நாட்டுப் போரில் கோமிங்டாங் அரசாங்கத்தின் கொள்கையில் நாளுக்கு நாள் வஞ்சகம் அதிகரித்துக் கொண்டிருந்தது ; அதே வேளையில், உள்நாட்டுப் போரை ஒரு முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் மற்றும் ஜப்பானுக்கு எதிராக ஒரு ஐக்கியப்பட்ட எதிர்ப்பைக் காட்ட வேண்டும் என்னும் சீன மக்களின் குரல் நாளுக்கு நாள் ஓங்கி ஒலித்தது. ஷாங்காயிலும் இதர பல இடங்களிலும் எல்லா வகையான பொது ஜன தேசபக்த ஸ்தாபனங்கள் அமைக்கப்பட்டன. 1934-36 க்கு இடையில் நமது கட்சியின் மத்தியக் கமிட்டியின் தலைமையின் கீழ் வடக்கிலும் யாங்ட்சே நதியின் தெற்கிலும் செஞ்சேனையின்பிரதானபடைகள் சொல்லொணாத் துயரங்களுக்கு ஆளாகி வடமேற்குச் சீனாவுக்கு நகர்ந்து அங்கிருந்த செஞ்சேனைப் படைப் பிரிவுகளுடன் இணைந்து உரமூட்டின. அந்த இரண்டு ஆண்டுகளில் தான் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி, புதிய சூழ்நிலைமையைக் கணக்கில் கொண்டு ஒரு புதிய விரிவான அரசியல் நெறியை—ஜப்பானுக்கு எதிரான தேசிய ஐக்கிய முன்னணி, ஜப்பானுக்கு எதிரான ஐக்கியப்பட்ட எதிர்ப்புப் போராட்டம், போராட்டத்தின் குறிக்கோளாக ஒரு புதிய ஜனநாயகக் குடியரசை நிறுவுதல் என்கிற நெறியை—முடிவு செய்துநிறைவேற்றியது. 1935, டிசம்பர், 9 அன்று



திரளான மாணவர்கள் நமது கட்சித் தலைமையின் கீழ்ப் பீக்கிங்கில் ஒரு வீரமிக்கத் தேசபக்த இயக்கத்தைத் துவக்கினர். அவர்கள் சீனத் தேசிய விடுதலை முன்னணிப் படையை அமைத்து, அந்த இயக்கத்தைச் சீனாவின் எல்லாப் பெரிய நகரங்களிலும் பரப்பினர். 1936, டிசம்பர், 19 அன்று ஜப்பானுக்கான எதிர்ப்பை ஆதரித்த இரண்டு கோமிங்டாங் பிரிவுகளான வடகிழக்குச் சேனையும், 17-வது வழிச் சேனையும், ஒன்றிணைந்து, ஜப்பானுடன் சமரசம் மற்றும் உள்நாட்டில் மக்களைக் கொன்று குவிப்பது என்ற பிற்போக்குக் கோமிங்டாங் கொள்கைக்குத் துணிகரமாக எதிர்ப்பு தெரிவித்துப் புகழ்மிக்க சியான் சம்பவத்தை நிகழ்த்தினர். கோமிங்டாங்கிலிருந்து இதர தேசபக்தர்கள் அந்த நேரத்தில் இதே போல் கோமிங்டாங் ஆட்சியாளர்களின் கொள்கையின்பால் அதிருப்தியுற்றிருந்தனர். கோமிங்டாங் அதிகாரிகள் தங்களது உள்நாட்டுக் கொள்கையைக் கைவிடவும் மக்களின் கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ளவும் நிர்ப்பந்திக்கப்பட்ட சூழ்நிலைகள் இவைதான். சியான் சம்பவத்தின் சமதானத் தீர்வு திருப்புமுனையானது புதிய சூழ்நிலைமைகளின் கீழ் உள்நாட்டு ஒத்துழைப்பு உருப்பெற்று நாடு தழுவிய ஜப்பானிய எதிர்ப்பு யுத்தம் ஆரம்பமாகியது. லுகெளசியாவோ சம்பவத்திற்குச் சிறிது முன்பாக, 1937, மே யில் நமது கட்சி 1935 முதல் கட்சியின் மத்தியக் கமிட்டியால் கடைபிடிக்கப்பட்டு வந்த புதிய அரசியல் நெறியை அங்கீகரித்த வரலாற்றுச் சிறப்புமிக்க தேசிய மாநாட்டைக் கூட்டியது.

1937, ஜூலை,7 லுகெளசியாவோ சம்பவத்துக்குபின் 1938, அக்டோபரில் ஹூகான் வீழ்ச்சியடையும் வரை கோமிங்டாங் அரசாங்கம் ஜப்பானுக்கு எதிரான போரில் ஒப்பீட்டு ரீதியில் செயல்முனைப்போடு இருந்தது. அந்தக் காலப்பகுதியில் பெரும் அளவிலான ஜப்பானியத் தாக்குதல்களும் மக்கள் அனைவரது பொங்கிப் பெருகிக் கொண்டிருந்த ஆத்திரமும் கோபா

படிப்பகம்

www.padippakam.com



வேசமும், கோமிங்டாங் அரசாங்கத்தை, ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களை எதிர்ப்பதைத் தனது கொள்கையின் மையமாக ஆக்குமாறு நிர்ப்பந்தித்தன ; இது ஜப்பானுக்கு எதிரான முழுச் சேனையினதும் மக்களினதும் போராட்டத்தில் ஒரு பேரெழுச்சியை ஏற்படுத்துவதைஇலகுவாக்கியது ; அத்துடன் சிறிது காலத்திற்குப் புதிய செயல்மிக்க சூழலொன்று நிலவியது கம்யூனிஸ்டுகளும் இதர ஜனநாயகவாதிகளும் உட்பட மக்கள் அனைவரும், நாடு ஆபத்தில் சிக்கித்தவிக்கிற இந் நேரத்தில், மக்களிடையே ஆர்வம் பொங்கி வழியும் இந் நேரத்தில் ஜனநாயக சீர்திருத்தங்களைக் கொண்டு வரவும் டாக்டர் சன்-யாட்-சென்னின் மூன்று மக்கள் கோட்பாடுகளை நடைமுறைப்படுத்தவும் கோமிங்டாங் அரசாங்கம் வாய்ப்பை நழுவ விடாது என ஆர்வத்துடன் எதிர்பார்த்தனர். ஆனால் அவர்களது நம்பிக்கை இலவு காத்த கிளியானது. ஒப்பீட்டு ரீதியில் எதிர்ப்பில் தீவிரமாக இருந்த அந்த இரண்டு ஆண்டுகளில் கூட கோமிங்டாங் அதிகாரிகள், ஒரு மக்கள் போருக்கு வெகுஜனங்களைத் திரட்டுவதைத் தொடர்ந்து எதிர்த்து வந்தனர்; ஜப்பானிய எதிர்ப்பு மற்றும் ஜனநாயக நடவடிக்கைக்கு ஒன்றிணைவதற்கு மக்கள் தன்னெழுச்சியாக முயன்ற போது அதற்குப் பல தடைகள் விதித்தனர். கோமிங்டாங் அரசாங்கம், சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின்பால் மற்றும் இதர ஜப்பானிய விரோதக் கட்சிகளின்பால் தனது முந்தைய போக்கை ஓரளவு மாற்றிக் கொண்ட அதே வேளையில் அவற்றுக்குச் சம அந்தஸ்து அளிக்க மறுத்து அவற்றின் நடவடிக்கைகளுக்குத் தடைகள் விதித்தே வந்தது. தேசபக்த அரசியல் கைதிகள் இன்னமும் பெருமளவில் சிறையில் வைக்கப்பட்டனர். அனைத்திற்கும் மேலாக 1927 இல் உள்நாட்டுப்போர் தொடங்கிய பின்னர் ஒரு சர்வாதிகாரத்தை நிறுவி இன்னமும் அதைப் பராமரித்து வந்ததால் நாட்டின் ஒட்டு மொத்த விருப்பத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தக் கூடிய ஒரு ஜனநாயகக் கூட்டு அரசாங்கத்தை அமைப்பது சாத்தியமில்லாமற் போனது.



இக்கால கட்டத்தின் ஆரம்பத்திலேயே கம்யூனிஸ்டுகளாகிய நாம், ஜப்பானிய எதிர்ப்புப் போரில் இரு மாற்று நெறிகள் -ஒன்று, வெற்றிக்கு இட்டுச் செல்லக் கூடிய அனைத்தையும் தழுவிய மக்கள் யுத்தம், இன்னொன்று, தோல்விக்கு இட்டுச் செல்லக் கூடிய மக்கள் ஒடுக்கப்பட்ட நிலையிலேயே இருக்கக் கூடிய ஓர் அரைகுறை யுத்தம்—இருப்பதாகச் சுட்டிக் காட்டினோம். இந்த யுத்தம் மிக நீண்டதாக இருக்கும் என்றும் தவிர்க்க முடியாதபடி பல தடைகளையும் சிரமங்களையும் அது சந்திக்கும் என்றும், எனினும் சீன மக்கள் தம் பெரு முயற்சிகளால் இறுதி வெற்றியை அடைந்தே தீருவர் என்றும் சுட்டிக் காட்டினோம்.

### மக்கள் யுத்தம்

இதே காலகட்டத்தில் வடகிழக்குச் சீனாவிற்குள் நுழைந்திருந்த பிரதான படையாகிய கம்யூனிஸ்ட் தலைமையிலான செஞ்சேனைக்குச் சீனத் தேசியப் புரட்சிகர இராணுவத்தின் எட்டாவது வழிச் சேனை என மாற்றிப் பெயரிடப்பட்டது ; யாங்ட்சி நதியின் இருபக்கமும் பல்வேறு இடங்களில் இருந்து வந்த சீனச் செஞ்சேனைக் கொரில்லாக் குழுக்களுக்குச் சீனத் தேசியப் புரட்சிகர இராணுவத்தின் நான்காவது வழிச் சேனை என மாற்றிப் பெயரிடப்பட்டது. முன்னது வட சீன முனையில் போரிடச் சென்றது; பின்னது மத்திய சீன முனைக்குச் சென்றது. உள்நாட்டுப்போர் காலகட்டத்தின் போது, வாம்போவா இராணுவக் கலாசாலையினதும், வடக்குப் படையெடுப்புக் காலத்தியத் தேசியப் புரட்சிகர இராணுவத்தினதும் ஜனநாயகப் பாரம்பரியத்தைப் பேணிப் பாதுகாத்து விருத்தி செய்து வந்த சீன செஞ்சேனை ஒரு சமயம் பல லட்சம் வீரர்களடங்கியதாக வளர்ந்திருந்தது. ஆனால் ஜப்பானிய எதிர்ப்புப் போரின் ஆரம்பத்தில் அது ஒரு சில பத்தாயிரம் வீரர்களைக் கொண்டதாகக் குறைந்து போயிருந்தது; நமது



படிப்பகம்

www.padippakam.com



தெற்கத்திய தரைப்பகுதிகளில் கோமிங்டாங் அரசாங்கம் ஈவிரக்கமற்ற அழிப்பை மேற்கொண்டதும், நீண்ட பயணத்தின் போது நமக்கு ஏற்பட்ட இழப்புகளும் வேறு சில காரணங்களுமே இதற்குக் காரணமாகும். இதன் விளைவாக சிலர் நம் இராணுவத்தை இழிவாக நோக்கி ஜப்பானை எதிர்ப்பதற்குக் கோமிங்டாங்கின் மீதுதான் பிரதான நம்பிக்கையை வைக்க வேண்டும் என நினைத்தனர். ஆனால் மக்களே சிறந்த மதிப்பீட்டாளர்கள். எட்டாவது வழிச் சேனையும், புதிய நான்காவது வழிச்சேனையும் அந்நேரத்தில் சிறியவையாக இருந்த போதிலும் தரத்தில் உயர்ந்தவையாக இருந்தன என்பதையும், அவைகள்தான் உண்மையான மக்கள் போரை நடத்த முடியும் என்பதையும், ஜப்பானிய எதிர்ப்புப் போர்முனைகளை அவை அடைந்து அங்குள்ள வெகுஜனங்களுடன் இணைந்தவுடன் அவைகளுக்கு முன்னால் ஏராளமான வாய்ப்புகள் உண்டாகும் என்பதையும் மக்கள் அறிந்திருந்தனர். நான் இந்த அறிக்கையைச் சமர்ப்பிக்கும் இந்நேரத்தில் நமது இராணுவம் ஏற்கனவே 9,10,000 ஆட்களைக் கொண்டிருக்கிறது; வழக்கமான உற்பத்திப் பணியிலிருந்து விடுபடாதவர்களைக் கொண்ட கிராமப்புற குடிபடைகளிலிருந்த நபர்களின் எண்ணிக்கை 22,00,000-க்கும் அதிகமாக வளர்ந்துள்ளது. கோமிங்டாங் படைகளுடன் (ஸ்தல மற்றும் மத்திய கட்டுப்பாட்டிலுள்ள கோமிங்டாங் படைப் பிரிவுகளையும் சேர்த்து) ஒப்பிட்டுப் பார்க்கையில் அதை விட நமது முறையான இராணுவம் இன்னமும் எண்ணிக்கை ரீதியில் மிகச் சிறியதாகவே உள்ளது என்ற உண்மைக்கும் மாறாகப் போரில் அது எதிர்கொள்ளும் ஜப்பானிய மற்றும் பொம்மைப் படைகளின் எண்ணிக்கை மற்றும் போர் முனைகளின் விரிவையும், அதன் போரிடும் வீரியத்தையும், அது தன் நடவடிக்கைகளில் பெற்றுள்ள மக்கள் ஆதரவையும், அதன் அரசியல் தரம், உறுதி மற்றும் ஒற்றுமை ஆகியவற்றையும் கணக்கிட்டுப் பார்க்கையில் அது ஏற்கனவே சீனாவின் ஜப்பானிய எதிர்ப்புப் போரில் பிரதான சக்தியாக ஆகியிருக்கிறது.



இச்சேனை சக்தி மிக்கது; ஏனெனில் அதன் அங்கத்தினர்கள் அனைவரும் அரசியல் உணர்வை அடிப்படையாகக் கொண்ட ஒரு கட்டுப்பாட்டைப் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் ஒன்றுபட்டிருப்பதும் போராடுவதும் ஒரு சில தனி நபர்களின் நலன்களுக்காகவோ, அல்லது ஒரு சிறு கும்பலின் நலன்களுக்காகவோ அல்ல; பரந்துபட்ட மக்களின் நலன்களுக்காகவும், தேசம் முழுவதின் நலன்களுக்காகவும்தான். இந்தச் சேனையின் ஒரே நோக்கம் சீன மக்களுடன் உறுதியாக ஒன்றுபட்டு நிற்பதும் அவர்களுக்கு முழு மனத்துடன் சேவை செய்வதும்தான்.

இந்த நோக்கத்தால் வழி காட்டப்படும் இச்சேனை அசைக்க முடியாத உணர்வை உடையதாகவும், எதிரிகள் அனைவரையும் வெல்ல உறுதி பூண்டுள்ளதாகவும், ஒரு போதும் பணியாததாகவும் உள்ளது. கஷ்டங்களும் துன்பங்களும் ஒரு பொருட்டல்ல; ஒரே ஒருவன் எஞ்சியிருக்கும் வரை அவன் தொடர்ந்து போரிடுவான்.

இந்த நோக்கத்தால் வழி காட்டப்படும் இச்சேனை தன் சொந்த அணிகளிடையிலும் வியக்கத்தக்கதொரு ஐக்கியத்தை ஏற்படுத்தியுள்ளது. உள்ளே அதிகாரிகளுக்கும் சிப்பாய்களுக்கும் இடையிலும், உயர் அணிகளுக்கும் கீழ்மட்ட அணிகளுக்கும் இடையிலும், இராணுவப் பணி, அரசியல் பணி ஆகியவற்றுக்கும் போர்க்களப் பணிகளுக்கும் சேவை பணிகளுக்கும் இடையிலும் ஐக்கியம் உள்ளது; வெளியே இராணுவத்துக்கும் மக்களுக்கும் இடையிலும் இராணுவத்துக்கும் அரசாங்க ஸ்தாபனங்களுக்கும் இடையிலும், நமது இராணுவத்துக்கும் நட்பு இராணுவங்களுக்கும் இடையிலும் ஐக்கியம் உள்ளது. இந்த ஐக்கியத்தைக் கெடுக்கின்ற எதையும் வெற்றி கொள்வது காலத்தின் கட்டளையாகும்.

இந்த நோக்கத்தால் வழி காட்டப்படும் இச்சேனை எதிரி அதிகாரிகளையும் வீரர்களையும் தன்பால் வென்றெடுப்ப

படிப்பகம்

www.padippakam.com



பதற்கும், போர்க்கைதிகளைக் கையாள்வதற்கும் ஒரு சரியான கொள்கையைக் கொண்டுள்ளது. நமது பக்கம் வருபவர்களும் தமது ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டுப் பொது எதிரியை எதிர்த்துப் போரிட இணைவதற்கு விரும்புகின்றவர்களும் வரவேற்கப்படுகின்றார்கள்; முறையான கல்வி அளிக்கப்படுகின்றார்கள். போர்க் கைதி எவரையும் கொல்லுவதோ தவறாக நடத்துவதோ அல்லது இழிவுபடுத்துவதோ தடை செய்யப்படுகிறது.

இந்த நோக்கத்தால் வழி காட்டப்படுகின்ற இச்சேனை, மக்கள் யுத்தத்துக்கு அத்தியாவசியமான போர்த்தந்திரம் மற்றும் செயல் தந்திரங்களுக்கான ஒரு முறையை வகுத்தமைத்துள்ளது. ஸ்தூலமான நிலைமைகள் மாறுவதற்கு ஏற்றவாறு நடத்தப்படுகின்ற நெளிவு சுளிவான கொரில்லாப் போர்முறைகளில் அது திறமை மிக்கதாக உள்ளது; நகர்ந்து செல்லும் போர் முறையிலும் கூட அது திறமை மிக்கதாக உள்ளது.

இந்த நோக்கத்தால் வழிகாட்டப்படுகின்ற இச்சேனை மக்கள் யுத்தத்துக்கு அத்தியாவசியமான அரசியல் பணிக்கான ஒரு முறையை வகுத்தமைத்துள்ளது; தனது சொந்த அணிகளிடையிலும், நட்பு இராணுவங்களிடையிலும், மக்களுக்கிடையிலும் ஐக்கியத்தை உயர்த்துவதையும், எதிரி இராணுவங்களைக் கலைப்பதையும் போர்க்களத்தில் வெற்றியை உறுதிப்படுத்துவதையும் குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

இந்த நோக்கத்தால் வழிகாட்டப்படுகின்ற கொரில்லாப் போர்முறை சூழ்நிலைமைகளின் கீழ்ச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற இராணுவம் முழுவதும், போர்களுக்கிடையிலான இடைவெளிகளையும், தானியங்களையும் இதர தேவைகளையும் உற்பத்தி செய்வதற்கான பயிற்சிக் காலப் பகுதிகளுக்கு



இடையிலான இடைவெளிகளையும் பயன்படுத்திக் கொள்ளும் திறமையுடையதாக உள்ளது, உண்மையில் பயன்படுத்தியுமிருக்கிறது; இதன் மூலம் பொருளாதாரக் கஷ்டங்களை கடந்து செல்லவும், வாழ்நிலைமைகளைச் சிறப்பாக்கவும், மக்கள் மீதான சுமையைக் குறைக்கவும், முழுமையாகவோ, பாதியாகவோ அல்லது குறைந்தபட்சம் ஓரளவிற்கோ சுயதேவையைப் பூர்த்தி செய்து கொள்வதாக ஆகியுள்ளது. பல்வேறு இராணுவத் தளப் பிரதேசங்களில் சிறு அளவிலான பல ஆயுதச் சாலைகள் நிறுவுவதற்கு ஒவ்வொரு வாய்ப்பும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

மேலும் இந்த இராணுவம் சக்தி வாய்ந்தது. ஏனெனில் அது தன்னுடன் சேர்ந்து போராடிக் கொண்டிருக்கின்ற மக்கள் சுயபாதுகாப்புப் படையையும், குடிபடையையும்-இவை இரண்டும் வெகு ஜன மக்களின் மிகப் பெரிய ஆயுத அமைப்புகளாகும் — பெற்றிருக்கிறது. விடுவிக்கப்பட்ட சீனப் பகுதிகளில் இளைஞர்கள் முதல் நடுத்தர வயதுடையோர் வரை ஆண்கள், பெண்கள் அனைவரும் அவர்களது விருப்பு மற்றும் ஜனநாயக அடிப்படையிலும், உற்பத்தியில் அவர்களது பணிகளைக் கைவிடாமலும், மக்களின் ஜப்பானிய எதிர்ப்புச் சுயப் பாதுகாப்புப் படையில் அணி திரண்டுள்ளனர். ராணுவம் அல்லது கொரில்லாப் படைப் பிரிவுகளில் சேர்பவர்களைத் தவிர சுய பாதுகாப்புப் படையில் உள்ள சிறந்த அங்கத்தினர்கள் குடிபடையில் சேர்க்கப்படுகின்றனர். வெகு ஜனங்களின் ஆயுதந்தரித்த இந்தப் படைகளில் ஒற்றுமை இல்லா விட்டால், எதிரிகளைத் தோற்கடிப்பது சாத்தியமில்லை.

இறுதியாக இந்த இராணுவம் சக்தி வாய்ந்ததாக உள்ளது. ஏனென்னில் பிரதான படை எனவும், பிரதேசப் படை எனவும் இரு பகுதிகளாக அதன் பிரிவு பிரிக்கப்பட்டுள்ளது. பிரதானப் படை தேவை ஏற்படும் பொழுதெல்லாம் எந்தவொரு பிரதேசத்திலும் நடவடிக்கையில் ஈடுபடும். பிரதேசப் படை தனது சொந்தப் பகுதிகளில் உள்ள மக்களை

படிப்பகம்

www.padippakam.com



பாதுகாப்பதிலும், அங்குள்ள உள்ளூர்க் குடிபடைகளுடனும்
சுய பாதுகாப்புப் படைகளுடனும் ஒன்று சேர்ந்து
எதிரியைத் தாக்குவதிலும் தனது சக்தியைக்
குவிக்கும். இந்த வேலைப் பிரிவினை மக்களின் மனப்பூர்வ
மான ஆதரவைப் பெற்றுள்ளது. சரியான இந்த வேலைப்
பிரிவினையின்றி — உதாரணமாகப் பிரதேசப் படைகளின்
பாத்திரம் புறக்கணிக்கப்பட்டுப் பிரதான படைகளின் பாத்திரத்
துக்கு மட்டும் கவனம் செலுத்தப்பட்டிருந்தால் — விடுவிக்கப்
பட்ட சீனப் பகுதிகளில் நிலவும் சூழ்நிலைகளில் எதிரியைத்
தோற்கடிப்பது சாத்தியமாகியிருக்காது. பிரதேசப் படை
களின் கீழ் நன்கு பயிற்சி பெற்றவையும் அதனால் இராணுவ,
அரசியல் மற்றும் வெகுஜனப் பணிகளுக்கு நன்கு தகுதி
பெற்றவையுமான எண்ணற்ற ஆயுதந் தாங்கிய வேலைக்
குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன; அவை எதிரிப் படை
யணிகளுக்குப் பின்னால் மிகப் பின்புறமுள்ள பகுதிகள் வரை
ஊடுருவிச் சென்று எதிரியைத் தாக்கி, ஜப்பானிய-எதிர்ப்புப்
போராட்டத்திற்கு வெகுஜனங்களைத் தட்டியெழுப்பு
கின்றன. இவ்வாறாகப் பல்வேறு விடுதலைப் பிரதேசங்களில்
இராணுவ நடவடிக்கைகளுக்கு ஆதரவு அளிக்கின்றன.
இவ்வனைத்திலும் அவை மாபெரும் வெற்றியை ஈட்டி
யுள்ளன.

ஆயுதப் படைகளுக்கு ஆதரவாக முழு மனத்துடன் பல்
வேறு பணிகளை ஆற்றி வருகின்ற தொழிலாள, விவசாய,
இளைஞர் மற்றும் மாதர் ஸ்தாபனங்களிலும் கலாச்சார
உத்தியோக மற்றும் இதர ஸ்தாபனங்களிலும் தங்கள் ஜன
நாயக அரசாங்கங்களின் தலைமையின் கீழ்ச் சீனாவின்
விடுவிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள ஜப்பானிய-எதிர்ப்பு
மக்கள் அனைவரும் சேருமாறு அழைக்கப்படுகின்றனர்.
இராணுவத்தில் சேர்ப்பதற்கு மக்களைத் திரட்டுவது, அதற்
காகத் தானியங்களை எடுத்துச் செல்வது, இராணுவ வீரர்
களின் குடும்பங்களைக் கவனித்துக் கொள்வது, படைவீரர்
களுக்குப் பொருளாயுத உதவி செய்வது ஆகியவற்றோடு



மட்டும் இந்தப் பணிகள் குறுக்கப்படுவதில்லை. எதிரிக்கு
எதிராகப் பரவலான தாக்குதல் நடத்தவும், வெடிகுண்டுகளைப்
புதைத்து வைக்கவும் எதிரியைப் பற்றித் தகவல் சேகரிக்கவும்,
துரோகிகளையும், உளவாளிகளையும் கண்டுபிடிக்கவும்,
காயமடைந்தவர்களை எடுத்துச் சென்று பாதுகாக்கவும்,
ராணுவ நடவடிக்கைகளில் நேரடியாகப் பங்கு கொள்ளவும்,
கொரில்லாக் குழுக்களையும், குடிபடைகளையும், சுய பாது
காப்புப் படைகளையும் அணி திரட்டுதலையும் இவை உள்ள
டக்குகின்றன. அதே சமயம் விடுதலையாக்கப்பட்ட பகுதி
கள் அனைத்திலும் பல்வேறு வகையான அரசியல், பொருளா
தார, கலாச்சார மற்றும் சுகாதாரப் பணியில் மக்கள்
உற்சாகமாகப் பங்கெடுத்துக் கொள்கின்றனர். இது விஷயத்
தில் மிக மிக முக்கியமானவை என்னவெனில் ஒவ்வொருவரை
யும் தானியம் மற்றும் இதர தேவைகளின் உற்பத்திக்காகத்
திரட்டுவதும் விசேஷ காரணம் உள்ளவை நீங்கலாக எல்லா
அரசாங்க நிறுவனங்களும், பள்ளிகளும், சேனையினதும், மக்
களினதும் சுய தேவை உற்பத்தி இயக்கங்களுக்குத் தமது
ஆதரவைத் தரும் பொருட்டு உற்பத்தி செய்வதற்குத் தம் ஓய்வு
நேரத்தை அர்ப்பணிப்பதை உறுதிப்படுத்துவதும் நீண்ட எதிர்த்
தாக்குதல் யுத்தத்தைத் தாக்குப் பிடிக்க ஒரு பெரிய எழுச்சியை
உருவாக்க உதவுவதும் ஆகும். சீனாவின் விடுதலையாக்
கப்பட்ட பகுதிகளில் எதிரி பேரழிவை ஏற்படுத்தியுள்ளான்;
வெள்ளங்களும், வறட்சிகளும் அற்ப ஜந்துக்களால் ஏற்படும்
சேதங்களும் அடிக்கடி நிகழ்ந்து வந்திருக்கின்றன. ஆயினும்
அங்குள்ள ஜனநாயக அரசாங்கங்கள் ஒரு ஸ்தாபன ரீதியில்
இந்தச் சிரமங்களைக் கடப்பதில் வழி காட்டி வந்திருக்கின்றன.

இவ்வாறாக ஜப்பானிய எதிர்ப்பு யுத்தத்தில் தாக்குப்
பிடித்து நிற்பதைச் சாத்தியமாக்க முடிந்தது. ஒரே வார்த்
தையில் சொன்னால், எல்லாமே போர் முனைக்காக,
எல்லாமே ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களைத் தோற்கடிப்ப
தற்காக, எல்லாமே சீன மக்களை விடுவிப்பதற்காக

படிப்பகம்

www.padippakam.com



என்பதே விடுதலையாக்கப்பட்ட சீனப் பகுதிகளில் இராணுவத்தினர் அனைவரின், மக்கள் அனைவரின் பொது முழக்கமாக, பொதுக் கொள்கையாக இருக்கிறது.

ஓர் உண்மையான மக்கள் யுத்தம் இப்படித்தான் இருக்கும். இத்தகையதொரு மக்கள் யுத்தத்தை நடத்துவதின் மூலம் தான் தேசிய எதிரியை நம்மால் தோற்கடிக்க முடியும். கோமிங்டாங் தோல்வியடைந்திருப்பதற்கு உண்மையான காரணம் யாதெனில் அது மக்கள் யுத்தத்தை முழு மூச்சுடன் எதிர்ப்பதே ஆகும். சீன விடுதலைப் பகுதிகளில் உள்ள இராணுவம் நவீன ஆயுதங்களைப் பெற்று விட்டால் அக்கணமே அது, மேலும் சக்தி வாய்ந்ததாக மாறிவிடும்; ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களை இறுதியாகத் தோற்கடிக்கக் கூடியதாக இருக்கும்.

### *இரு போர் முனைகள்*

ஆரம்பத்திலிருந்தே ஜப்பானிய - எதிர்ப்புப் போரில் கோமிங்டாங் போர்முனை, விடுவிக்கப்பட்ட பகுதிகளின் போர்முனை என இருமுனைகள் இருந்து வந்துள்ளன.

1938 அக்டோபரில் ஹாங்கான் வீழ்ச்சியடைந்த பிறகு ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்கள், கோமிங்டாங் போர்முனைக்கு எதிரான தங்களது போர்த்தந்திர ரீதியான தாக்குதலை நிறுத்தி விட்டனர்; விடுவிக்கப்பட்ட பகுதிகளின் போர்முனைக்குத் தங்கள் பிரதான படைகளைப் படிப்படியாக இடம் மாற்றினார். அதே நேரத்தில் கோமிங்டாங் அரசாங்கத்தின் தோல்வி மனப்பான்மையைச் சாதகமாக எடுத்துக் கொண்டு அதனுடன் ஒரு சமரச உடன்பாட்டை அடைவதற்கான தங்களது விருப்பத்தைப் பிரகடனம் செய்தனர்; சீன தேசத்தை வஞ்சிப்பதை நோக்கமாகக் கொண்ட ஒரு கொள்கையை மேற்கொண்டு, துரோகி வாய்-சிங்-வெய்யை, சுங்கிங்கை விட்டு வெளியேறி நான்கிங்கில் ஒரு பொம்மை அரசாங்கத்தை நிறுவுமாறு தூண்டினார். கோமிங்டாங் அரசாங்



கம் பிறகு தனது கொள்கையை மாற்றிக் கொள்ளத் தொடங்கியது; அதாவது படிப்படியாக அது ஜப்பானிய எதிர்ப்புக்குக் கொடுத்த அழுத்தத்தைக் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் மக்களின் எதிர்ப்புக்கு இடம் மாற்றியது. இந்த இடமாற்றம் முதலில் இராணுவத்துறையில் தோன்றியது. கோமிங்டாங் அரசாங்கம் தனது சொந்த இராணுவ பலத்தைப்பாதுகாத்துக் கொள்வதற்காக ஜப்பானுக்கு எதிராகச் செயலற்ற எதிர்ப்புக் கொள்கையை மேற்கொண்டது; அது ஜப்பானிய ஆக்ரமிப்பாளர்களை முழு பலத்தையும் கொண்டு விடுதலையாக்கப்பட்ட பகுதிகளைத் தாக்குவதற்கு அனுமதித்துக் கொண்டு அது ''புலிகள் சண்டையிடுவதைப் பார்க்க மலையுச்சியில் அமர்ந்து கொண்டதன்'' மூலம் ஜப்பானுக்கு எதிராகப் போராடும் சுமையை விடுதலையாக்கப்பட்ட பகுதிகளின் மீது சுமத்தி விட்டது.

1939-இல் கோமிங்டாங் அரசாங்கம், ''பிற கட்சிகளின் செயல்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள்'' என்ற பிற்போக்குச் செயலை மேற்கொண்டு, ஜப்பானுக்கு எதிரான கட்சிகளிடமிருந்து, அவை எதிர்ப்பு யுத்தத்தின் ஆரம்ப காலகட்டத்தில் வென்றெடுத்திருந்த உரிமைகள் அனைத்தையும் முற்றாகப் பறித்து விட்டது. அப்போதிருந்து கோமிங்டாங் பகுதிகளில் எல்லா ஜனநாயகக் கட்சிகளும், முதலாவதாகவும் முக்கியமாகவும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியும் கோமிங்டாங் அரசாங்கத்தினால் இரகசியமாகச் செயல்பட நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளன. இந்தப் பகுதிகளில் ஒவ்வொரு மாகாணத்திலும் சிறைகளிலும், கைதி முகாம்களிலும் கம்யூனிஸ்டுகளும், இளம்தேச பக்தர்களும் பிற ஜனநாயகப் போராளிகளும் நிரம்பி வழிகின்றனர். 1939 லிருந்து 1943 இலையுதிர் காலம் வரையிலான ஐந்து ஆண்டுகளில் ஐக்கியத்தைப் பிளவுபடுத்துவதற்காகக் கோமிங்டாங் அரசாங்கம், மூன்று பெரிய அளவிலான கம்யூனிச எதிர்ப்புத் தாக்குதல்களைத் [3] தொடுத்து இவ்வாறாகக் கடுமையான உள்நாட்டு

படிப்பகம்

www.padippakam.com



யுத்த அபாயத்தைத் தோற்றுவித்தது. இந்தக் கால கட்டத்தில் தான் புதிய நான்காம் சேனை ''கலைக்கப்படுவதற்கு'' உத்தரவிடப்பட்டது; தெற்கு அன்ஹ்வெய்யிலான அதன் துருப்புகளில் ஒன்பதாயிரத்துக்கும் அதிகமானோர் அழித்தொழிக்கப்பட்ட—உலகைக் குலுக்கிய—சம்பவம் நடைபெற்றது. இக்கணம் வரை விடுதலையாக்கப்பட்ட பகுதிகளுடைய படைகளின் மீதான கோமிங்டாங் துருப்புகளின் தாக்குதல்கள் நிற்கவுமில்லை; அவை நிற்கும் என்பதற்கான எந்த அறிகுறியும் தென்படவுமில்லை. அதே நேரத்தில் கோமிங்டாங் பிற்போக்காளர்கள் சகல விதமான அவதூறுகளையும், பழிகளையும் பொழிந்து வந்துள்ளனர். இவர்கள் தான் கம்யூனிஸ்ட் கட்சியையும், எட்டாவது வழிச் சேனையையும், புதிய நான்காவது படைகளையும், விடுதலையாக்கப்பட்ட பகுதிகளையும் அவதூறு செய்யும் நோக்கத்திற்காகத் ''தேசத் துரோகக் கட்சி'', ''தேசத் துரோகச் சேனை'', ''தேசத் துரோகப் பகுதிகள்'', ''எதிர்த் தாக்குதல் யுத்தத்துக்குக் குழி பறித்தல் மற்றும் அரசை ஆபத்திற்குள்ளாக்குதல்'' என்பன போன்ற முத்திரைகளையும் வார்த்தைக் கோவைகளையும் புனைந்துள்ளனர். நெருக்கடியைச் சமாளிப்பதற்காக 1939 ஜூலை 7 ஆம் தேதி சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டி பின்வரும் முழக்கங்களை முன்வைத்துக் கொள்கை அறிக்கையொன்றை விடுத்தது: ''எதிர்ப்பில் விடாப்பிடியாக இருப்போம், சரணாகதியை எதிர்ப்போம்! ஒற்றுமையில் விடாப்பிடியாக இருப்போம், பிளவை எதிர்ப்போம்! முன்னேறுவதில் விடாப்பிடியாக இருப்போம், பின்னடைவதை எதிர்ப்போம்!'' இந்த ஐந்து ஆண்டுகளில் உரிய நேரத்தில் வைக்கப்பட்ட இந்த முழக்கங்களின்படி, நமது கட்சி செயலாற்றி பிற்போக்குத் தாக்குதல், மக்கள் எதிர்ப்புத் தாக்குதல், கம்யூனிச எதிர்ப்புத் தாக்குதல் ஆகிய மூன்று தாக்குதல்களையும் வீறுடன் முறியடித்து ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நெருக்கடியைக் கடந்தது.

அந்த ஆண்டுகளில் உண்மையில் கோமிங்டாங் போர் முனையில் கடுமையான சண்டை எதுவும் நடைபெறவில்லை.



ஜப்பானிய ஆக்கிரமிப்பின் வாள்முனை பிரதானமாக விடுதலையாக்கப்பட்ட பகுதிகளுக்கு எதிராகவே திருப்பப்பட்டிருந்தது. 1943ஆம் ஆண்டுக்குள் விடுதலையாக்கபட்ட பகுதிகளின் சேனையும் மக்களும் சீனாவிற்குள் நுழைந்திருந்த ஜப்பானியப் படைகளில் 64 சதவீதத்தையும், கைப்பொம்மைத் துருப்புகளில் 95 சதவீதத்தையும் தடுத்து வைத்திருந்த அதே சமயம் கோமிங்டாங் அணி முன்னதில் 36 சதவீதத்தையும் பின்னதில் 5 சதவீதத்தை மட்டுமே சந்தித்திருந்தது.

1944 இல் ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்கள், போக்குவரத்துக்காக சீன வட-தென் ரயில் பாதைகளைத் திறக்குமாறு நிர்ப்பந்திக்கத் தாக்குதல்களைத் தொடுத்தனர். பீதியடைந்த கோமிங்டாங் படைகள் எதிர்ப்பு காண்பிக்க இயலாதவாறு முற்றிலும் வலுவிழந்திருந்தன. ஒரு சில மாதங்களுக்குள்ளாகவே, ஹோனான், ஹூனான், குவாங்கி, குவாங்டாங் ஆகிய மாகாணங்களின் பரந்த பகுதிகள் எதிரியின் வசமாயின. அதுவரை, இரு போர்முனைகளிலும் ஈடுபட்டிருந்த எதிரிப் படைகளின் விகிதாச்சாரத்தில் எந்த மாற்றமும் ஏற்படாதிருந்தது. அப்படியும் கூட, இந்த அறிக்கையைச் சமர்ப்பிக்கும் இச்சமயத்தில், சீனாவில் (வடகிழக்கு மாகாணங்கள் மூன்றிலும் உள்ளவற்றைக் கணக்கிடாமல்) உள்ள 5,80,000 ஜப்பானிய வீரர்களைக் கொண்ட 40 படைப்பிரிவுகளில் 3,2000 வீரர்களைக் கொண்ட 22.5 படைப்பிரிவுகளும், அல்லது மொத்தப்படைகளில் 56 சதவீதமும், விடுதலையாக்கப்பட்ட பகுதிகளில் சண்டையில் ஈடுபட்டிருக்கின்றன; 2,60,000 வீரர்களைக் கொண்ட அல்லது 44 சதவீதம் வீரர்களைக் கொண்ட 17.5க்கும் அதிகமான படைப்பிரிவுகள் கோமிங்டாங் முனையில் சண்டையில்ஈடுபட்டுள்ளன. இரு போர் முனைகளிலும் சண்டையில் ஈடுபட்டுள்ள பொம்மைத் துருப்புகளைப் பொறுத்த வரையில் விகிதாசாரம் மாறவேயில்லை

படிப்பகம்

www.padippakam.com



80,00,000 வீரர்களுக்கு மேற்பட்ட (நிரந்தர, ஸ்தல படைகள் இரண்டிலும்) பொம்மைத் துருப்புகள், தங்கள் கோமிங்டாங் தளகர்த்தர்களுடன் சரணாகதியடைந்த பிரிவுகளிலோ அல்லது கோமிங்டாங் அதிகாரிகள் சரணாகதி அடைந்த பின் அணி திரட்டிய பிரிவுகளிலோ பிரதானமாக இருந்தனர் என்பது சுட்டிக் காட்டப்பட வேண்டும். கோமிங்டாங் பிற்போக்காளர்கள் இந்த துருப்புகளுக்கு முன்கூட்டியே ''தேசத்தை ஒரு குறுக்கு வழியில் காப்பாற்றுவது'' என்ற பொய்யான, தேசத் துரோகத் தத்துவத்தைக் கொடுத்தும், அவற்றின் சரணாகதிக்குப் பின்னர் ஜப்பானிய ஆக்ரமிப்பாளர்களுக்கு இசைவாக சீன மக்களின் விடுதலையாக்கப்பட்ட பிரதேசங்களைத் தாக்கும்படிக் கட்டளையிட்டு அவற்றுக்கு தார்மீக மற்றும் ஸ்தாபன ரீதியான ஆதரவுக் கொடுத்துள்ளனர். இந்தப் பிற்போக்காளர்கள் 'ஷென்ஸி-கான்ஸு-நிங்ஸியா எல்லைப் பிரதேசத்தையும் பிற விடுதலையாக்கப்பட்ட பிரதேசங்களையும் முற்றுகையிடவும், தாக்கவும் மொத்தம் 7,97,000 வீரர்களுக்குக் குறையாத பெரும் படைகளைத் திரட்டியும் உள்ளனர். இந்த மோசமான நிலைமை கோமிங்டாங் அரசாங்கத்தின் செய்திகளை அமுக்குவது என்ற கொள்கையால் பல சீனர்களுக்கும் வெளிநாட்டவர்களுக்கும் தெரியாதபடி வைக்கப்படுகிறது.

*சீனாவின் விடுதலையாக்கப்பட்ட பகுதிகள்*

கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையிலான சீனாவின் விடுதலையாக்கப்பட்ட பகுதிகள் இப்போது 9,55,00,000 ஜனத்தொகையைக் கொண்டுள்ளன. அவை வடக்கேயுள்ள மங்கோலியாவிலிருந்து தெற்கே ஹைனான் தீவு வரையும் உள்ளன; எதிரி எங்குச் சென்றாலும் கிட்டத்தட்ட அங்கெல்லாம் அவன் எட்டாவது வழிச் சேனையோ, புதிய நான்காவது வழிச் சேனையோ, வேறு ஏதாவது மக்கள் படைகாளே செயல்பட்டுக் கொண்டிருப்பதைக்காண்கிறான். இந்தப்பரந்த விடுதலையாக்கப்பட்ட பிரதேசம் லியாவோனிங், ஜேஹோல்,



சாஹார், ஸுய்யுவான், ஷென்ஸி, கான்ஸு, நிங்ஸியா, ஷான்ஸி, ஹோபெய், ஹோனான், ஷான்டுங், கியாங்ஸு செகியாங், அன்ஹ்வெய், கியாங்ஸி, ஹுபே, ஹுனான், குவாங்டுங், ஃபூகியென் மாகாணங்களின் பெரிய அல்லது சிறிய பகுதிகளை உள்ளடக்கியுள்ளது. அனைத்து விடுதலையாக்கப்பட்ட பகுதிகளுக்கும் வழிகாட்டுகின்ற மையமாக யேனான் உள்ளது. கிழக்கு செகியாங்கில் உள்ள ஒன்றும், ஹைனான் தீவில் உள்ள மற்றொன்றும் நீங்கலாக, சீனாவின் பரந்த விடுதலையாக்கப்பட்ட இந்தப் பகுதியை உருவாக்குகின்ற பத்தொன்பது பகுதிகளில் ஒன்றான ஷென்ஸி-கான்ஸு—நில்ஸியா எல்லைப் பிரதேசம் மஞ்சள் நதியின் மேற்கில் உள்ளது; அது 15,00,000 ஜனத்தொகையை மட்டுமே கொண்ட மிகச் சிறிய பிரதேசமாகும். இதை அறியாத சிலர் சீனாவின் விடுதலையாக்கப்பட்ட பிரதேசம் பிரதானமாக ஷென்ஸி-கான்ஸு-நிங்சியா எல்லைப் பிரதேசம் தான் என நினைக்கின்றனர். இந்த தப்பபிப்ராயம் கோமிங்டாங் அரசாங்கத்தின் முற்றுகையால் ஏற்படுகிறது. விடுதலையாக்கப்பட்டப் பகுதிகள் ஒவ்வொன்றிலும் ஜப்பானிய-எதிர்ப்பு தேசிய ஐக்கிய முன்ணணிக்குத் தேவையான கொள்கைகள் அனைத்தும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன; மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட கம்யூனிஸ்டுகளும் பிற ஜப்பானிய எதிர்ப்புக் கட்சிகளைச் சேர்ந்த, அல்லது கட்சி சார்பற்ற, பிரதிநிதித்துவமுடைய நபர்களும் ஒத்துழைக்கின்ற அரசாங்கங்கள், அதாவது, ஸ்தல கூட்டு அரசாங்கங்கள் நிறுவப்பட்டுள்ளன; அல்லது நிறுவப்பட்டு வருகின்றன. விடுதலையாக்கப்பட்ட பகுதிகளில் மக்களின் முழு பலமும் அணி திரட்டப்பட்டுள்ளது. இதன் விளைவாக, எதிரியின் பெரும் தாக்கும், கோமிங்டாங் இராணுவ முற்றுகையும் தாக்குதல்களும், வெளியுதவியின்மையும் இருந்தும் கூடச் சீனாவின் விடுதலையாக்கப்பட்ட பகுதிகள் உறுதியாக நின்றும், நிலையாக வளர்ந்தும், எதிரியால் கைப்பற்றப்பட்ட பிரதேசத்தைக் குறைத்தும், தம் சொந்தப் பிரதேசத்தை விஸ்தரித்தும் உள்

படிப்பகம்

www.padippakam.com



ளன்; அவை ஒரு ஜனநாயக சீனாவுக்கான முன்மாதிரியாகவும், நேச நாடுகளுடன் இராணுவ ரீதியில் ஒத்துழைத்து ஜப்பானிய ஆக்ரமிப்பாளர்களை விரட்டியடிப்பதும், சீன மக்களை விடுதலையாக்குவதுமான பிரதான சக்தியாகவும் ஆகியுள்ளன. சீனாவின் விடுதலையாக்கப்பட்ட பகுதிகளின் ஆயுதப்படைகளான எட்டாவது வழிச் சேனையும், புதிய நான்காவது வழிச் சேனையும், மக்களின் பிற ஆயுதப் படைகளும் ஜப்பானுக்கு எதிராகப் போராடுவதில் ஒரு வீரத்தின் உதாரணமாகத் திகழ்வது மட்டுமல்லாமல், ஜப்பானிய-எதிர்ப்புத் தேசிய ஐக்கிய முன்னணியின் ஜனநாயகக் கொள்கைகளை நிறைவேற்றுவதிலும் ஓர் உதாரணமாகத் திகழ்கின்றது. ''டாக்டர் சன்-யாட்-சென்னின் மூன்று மக்கள் கோட்பாடு' களே சீனாவுக்கு இன்றும் தேவையாக இருப்பதால் நமது கட்சி அவற்றின் முழுமையான செயலாக்கத்திற்காகப் போராடத் தயாராயுள்ளது என்பதை உறுதிபடுத்திச் சீன கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக்கமிட்டியால் 1927, செப்டம்பர், 22ஆம் தேதி விடுக்கப்பட்ட பிரகடனமானது சீனாவின் விடுதலையாக்கப்பட்ட பகுதிகளில் முற்றாக அமுலாக்கப்பட்டுள்ளது.

### கோமிங்டாங் பகுதிகள்

கோமிங்டாங்கின் பிரதான ஆளும் கும்பல் தன் சர்வாதிகார ஆட்சியில் ஜப்பானிய எதிர்ப்பில் ஒரு செயலற்ற எதிர்ப்புக் கொள்கையையும், மக்களுக்கு எதிரானதொரு உள்நாட்டுக் கொள்கையையும் விடாப்பிடியாகப் பின்பற்றி வந்துள்ளது. இதன் விளைவாக அதன் ஆயுதப் படைகள் ஆரம்பத்திலிருந்த அதன் அளவில் பாதிக்கும் குறைவாகச் சுருங்கியும், அவற்றில் பெரும்பகுதி தனது போர்த்திறனைக் கிட்டத்தட்ட இழந்தும் விட்டன; இந்தக் கும்பலுக்கும் பரந்துபட்ட வெகுஜனங்களுக்குமிடையில் ஆழமான பிளவு ஒன்றும், வெகுஜனங்களுக்கிடையிலான வறுமையும், குமுறும் அதிருப்தியும்; புரவலான கிளர்ச்சியுமான நெருக்கடி ஒன்றும் உள்ளன; யுத்தத்தில் இக்கும்பலின் பங்கு மிகவும்



குறைந்துள்ளது மட்டுமல்லாமல், இது சீன மக்களின் ஜப்பானிய எதிர்ப்புச் சக்திகள் அனைத்தும் அணிதிரட்டப்படுவதற்கும் அவற்றின் ஐக்கியத்திற்கும் ஒரு தடங்கலாகவும் ஆகியுள்ளது.

கோமிங்டாங் பிரதான ஆளும் கும்பலின் தலைமையின் கீழ் இத்தகைய மோசமான நிலைமையொன்று ஏன் தோன்றியுள்ளது ? அந்தக் கும்பல் சீனாவின் நிலப்பிரபுக்களுடைய, பெரும் வங்கி முதலாளிகளுடைய நலன்களைப் பிரதிநிதித்துவம் செய்வதால் இது தோன்றியுள்ளது. இந்தப் பிற்போக்கு அடுக்காக அமைந்துள்ள விரல்விட்டு எண்ணத்தக்க நபர்கள் கோமிங்டாங் அரசாங்கத்தின் கீழ் உள்ள முக்கியமான இராணுவ, அரசியல், பொருளாதார, கலாச்சார ஸ்தாபனங்கள் அனைத்தையும் ஏகபோகமாக்கிக் கொண்டுள்ளனர். அவர்கள் தங்களது சொந்த நலன்களைப் பேணுவதை, ஜப்பானை எதிர்ப்பதை விட உயர்வாகக் கருதுகின்றனர். அவர்களும் கூட ''அனைத்துக்கும் மேலாக தேசம்'' என்று கூறுகிறார்கள்; ஆனால் அவர்களது செயல்கள் நாட்டின் பெரும்பான்மையான மக்களது கோரிக்கைகளுக்கு இசைவாக இல்லை. அவர்களும் கூட ''அனைத்திற்கும் மேலாக அரசு'' என்கின்றனர்; ஆனால் அவர்கள் மனத்தில் கொண்டிருப்பது பெரும் நிலப்பிரபுக்களுடைய, பெரும் வங்கி முதலாளிகளுடைய, பெரும் தரகு முதலாளிகளுடைய அரசையே; ஒரு மக்கள் ஜனநாயக அரசை அல்ல. எனவே, அவர்கள் மக்களின் எழுச்சியைக் கண்டு அஞ்சுகின்றனர்; ஜப்பானுக்கு எதிரான போருக்கு அனைத்து மக்களையும் அணிதிரட்டுவதற்கு அஞ்சுகின்றனர். இதில்தான் ஜப்பானுக்கு அவர்கள் காட்டும் செயலற்ற எதிர்ப்புக் கொள்கைக்கும், மக்கள், ஜனநாயகம் மற்றும் கம்யூனிஸ்ட் கட்சிக்கு எதிரான அவர்களது உள்நாட்டுக் கொள்கைக்குமான மூலக்காரணம் அடங்கியுள்ளது. அவர்கள் ஒவ்வொரு விஷயத்திலும் இரட்டைக் கொள்கையைப் பின்பற்று

படிப்பகம்

www.padippakam.com



கின்றனர். உதாரணமாக, ஒரு புறம் அவர்கள் ஜப்பானை எதிர்க்கின்றனர்; மறு புறம் செயலற்ற யுத்த எதிர்ப்புக் கொள்கையைக் கடைப்பிடிக்கின்றனர்; மேலும் சரணாகதி அடைவதற்கான ஜப்பானியத் தூண்டுதல்களுக்கு அவர்கள் தொடர்ந்து பலியாகி வருகின்றனர். அவர்கள் சீனப் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வது பற்றிப் பேசுகின்றனர், ஆனால் உண்மையில் தங்களது சொந்த அதிகார வர்க்க மூலதனத்தையே, அதாவது, பெரும் நிலப்பிரபுக்கள், வங்கி முதலாளிகள், தரகு முதலாளிகள் ஆகியோரின் மூலதனத்தையே வளர்க்கின்றனர்; சீனப் பொருளாதாரத்தின் ஜீவநாடிகளை ஏகபோகமாக்கிக் கொண்டுள்ளனர்; விவசாயிகளையும், தொழிலாளர்களையும், சிறு முதலாளித்துவ வர்க்கத்தையும் ஏகபோகமற்ற முதலாளித்துவ வர்க்கத்தையும் ஈவிரக்கமின்றி ஒடுக்கியும் வருகின்றனர். அவர்கள் "ஜனநாயகத்தை" நடைமுறைப்படுத்துவது' பற்றியும், "அரசு அதிகாரத்தைத் திரும்ப மக்களிடம் அளிப்பது" பற்றியும் பேசுகின்றனர், ஆயினும் அவர்கள் ஜனநாயகத்திற்கான மக்களின் இயக்கத்தை ஈவிரக்கமின்றி அடக்கியும், மிகச் சிறிய ஜனநாயகச் சீர்திருத்தத்தைக் கொண்டு வருவதைக் கூட மறுத்தும் வருகின்றனர். அவர்கள், "கம்யூனிஸ்ட் பிரச்னை ஒரு அரசியல் பிரச்சினை, அது அரசியல் ரீதியில் தீர்க்கப்பட வேண்டும்" என்கின்றனர்; ஆயினும், சீனக் கம்யூனிஸ்ட் கட்சியை "முதல் எதிரியாகவும்," ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களை "இரண்டாவது எதிரியாகவும்" கணித்து, சீனக் கம்யூனிஸ்ட் கட்சியை இராணுவ, அரசியல் மற்றும் பொருளாதார ரீதியில் ஈவிரக்கமின்றி அடக்கியும் நாளும் பொழுதும் ஒரு உள்நாட்டுப் போருக்கான தயாரிப்பில் ஈடுபடுவதிலும், கம்யூனிஸ்ட் கட்சியை அழித்தொழிப்பதற்கான திட்டங்களைத் தீட்டுவதிலும் மும்முரமாகச் செயல்பட்டு வருகின்றனர். அவர்கள் ஒரு "நவீன அரசை" ஸ்தாபிக்கப் போவதாகக் கூறுகின்றனர்; ஆனால், பெரும் நிலப்பிரபுக்கள், வங்கி முதலாளிகள், தரகு முதலாளிகள்



ஆகியோரின் பாசிச சர்வாதிகாரத்தை நீடித்து வைத்திருக்க முழுமூச்சாக வேலை செய்கின்றனர். அவர்கள் சோவியத் யூனியனுடன் முறையான ராஜதந்திர உறவுகளை வைத்துக் கொண்டிருக்கும் அதே நேரத்தில், அதனிடம் உண்மையில் அவர்கள் பகைமை கொண்டுள்ளனர். சீன மக்களின் மீதான தங்கள் சொந்த பாசிச ஆட்சி உட்பட எங்கெங்கும் உள்ள பாசிஸ்டுகளின் வாழ்க்கையை நீடிப்பதற்கு ஒப்பான ஜெர்மனியப் பாசிச வாழ்க்கையை நீடிக்கும் பொருட்டு அமெரிக்கத் தனிமைவாதிகளுடன் சேர்ந்து "ஐரோப்பாவுக்கு முன்பாக ஆசியா" என கோஷ்டி கானம் இசைக்கின்றனர்; ஆயினும் அதேசமயம் பாசிச விரோத வீரர்களாகப் பாசாங்கு செய்து ராஜதந்திர உபாயங்களைக் கையாளுகின்றனர். இந்த முரண்பாடான இரட்டைக் கொள்கைகளின் மூல காரணத்தைத் தேடினீர்களானால் இவையெல்லாம் பெரும் நிலப் பிரபுக்கள், வங்கி முதலாளிகள், தரகு முதலாளிகள் ஆகியோரின் சமூக அடுக்கிலிருந்தே தோன்றுவதைக் காண்பீர்கள்.

ஆயினும், கோமிங்டாங் ஒரே சீரான தன்மை கொண்ட அரசியல் கட்சி அல்ல. அது பெரும் நிலப்பிரபுக்கள், வங்கி முதலாளிகள், தரகு முதலாளிகள் ஆகியோரை உள்ளடக்கிய ஒரு பிற்போக்குக் கும்பலால் கட்டுப்படுத்தப்பட்டுத் தலைமை தாங்கப்படுகிறது என்றாலும் கூட, அக்கட்சியில் அவர்கள் மட்டுமே உள்ளனர் என அர்த்தமல்ல; சில கோமிங்டாங் தலைவர்கள் இந்தக் கும்பலைச் சேர்ந்தவர்கள் அல்ல; ஆதலால் அவர்கள் அக்கும்பலால் ஒதுக்கித் தள்ளப்படுகின்றனர், தாக்கப்படுகின்றனர். அதன் ஊழியர் மற்றும் அணியில் பலரும் மூன்று மக்கள் கோட்பாட்டு இளைஞர் கழக உறுப்பினர்களில் பலரும் இந்தக் கும்பல் தலைமை மீது அதிருப்தி கொண்டிருக்கின்றனர். சிலர் எதிர்க்கவும் செய்



படிப்பகம்

www.padippakam.com



கின்றனர். இந்தப் பிற்போக்குக் கும்பல் கட்டுப்படுத்துகின்ற கோமிங்டாங் படைகள், அரசாங்கத் துறைகள் பொருளாதார மற்றும் கலாச்சார நிறுவனங்கள் எல்லாவற்றிற்கும் இதுவே பொருந்தும். அவை எல்லாவற்றிலும் ஒரு கணிசமான அளவு ஜனநாயக சக்திகள் உள்ளன. மேலும், பல போட்டிப் பிரிவுகளாகப் பிளவுப்பட்டுள்ள இந்தப் பிற்போக்குக் கும்பல் நன்கு பிணைக்கப்பட்ட ஒரு உறுப்பல்ல. கோமிங்டாங்கைப் பிற்போக்காளர்களை மட்டுமே கொண்ட ஒருபடித் தன்மை கொண்டதாகக் கருதுவது சந்தேகத்துக்கிடமின்றித் தவறாகும்.

## ஒரு வேறுபாடு

விடுதலையாக்கப்பட்ட பகுதிகளுக்கும் கோமிங்டாங் பகுதிகளுக்கும் இடையிலான கூர்மையான வேறுபாட்டைச் சீன மக்கள் காணவேண்டியுள்ளது.

உண்மைகள் போதிய அளவு தெளிவாக இல்லையா? இரு நெறிகள் உள்ளன, ஒன்று மக்கள் யுத்த நெறி, இன்னொன்று ஒரு மக்கள் யுத்தத்துக்கு எதிரான செயலற்ற தன்மையுடைய எதிர்ப்பு நெறி. ஒன்று வெளியுதவி முற்றாக இல்லாத சீனாவின் விடுதலையாக்கப்பட்ட பகுதிகளில் நிலவும் சிரமமான சூழ்நிலைகளில் கூட வெற்றிக்கு இட்டுச் செல்கிறது; இன்னொன்று அந்நிய உதவி கிடைக்கக்கூடிய கோமிங்டாங் பகுதிகளில் நிலவும் மிகச் மிகச் சாதகமான சூழ்நிலைகளில் கூடத் தோல்விக்கு இட்டுச் செல்கிறது.

கோமிங்டாங் அரசாங்கம் தன் தோல்விகளுக்கு ஆயுதப் பற்றாக்குறையைக் காரணமாகக் காட்டுகின்றது. கோமிங்டாங் துருப்புகள், விடுதலையாக்கப்பட்டப் பகுதிகளில் உள்ள துருப்புகள் ஆகிய இரண்டில் எதற்கு ஆயுதப் பற்றாக்குறை உள்ளது என ஒருவர் கேட்கலாம். சீனப் படைகள் அனைத்திலும், விடுதலையாக்கப்பட்ட பகுதிகளில் உள்ள படைகளே மிகக் கடுமையான ஆயுதப்பற்றாக்



குறையில் உள்ளன; அவற்றின் ஆயுதங்கள் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டவையும் மிகவும் பாதகமான சூழ்நிலைமையின் கீழ் அவைகளே தயாரித்தவையுமாகும்.

நேரடியாகக் கோமிங்டாங் மத்திய அரசாங்கத்தின் கீழ் உள்ள படைகள் மாகாணப் படைகளை விட மிக நன்கு ஆயுத பாணியாக்கப்பட்டவையாக உள்ளவை என்பது உண்மையல்லவா? ஆயினும் போர்த் திறனில் மத்தியப் படைகளில் பெரும்பாலானவை மாகாணப் படைகளை விடத் தாழ்வாகவே உள்ளன.

கோமிங்டாங்கிடம் பிரம்மாண்டமான மனித சக்தி கையிருப்பில் உள்ளது; இருப்பினும் அதன் தவறான ஆள் சேர்ப்புக் கொள்கையின் காரணமாக இழக்கப்பட்ட ஆள் சக்தியை மீண்டும் நிரப்புவது கடினமானதாகிறது. எதிரியால் ஒன்றிலிருந்து ஒன்று துண்டிக்கப்பட்டும் இடையறாது சண்டை செய்வதில் ஈடுபட்டும் இருந்தாலும் கூட சீனாவின் விடுதலையாக்கப்பட்ட பகுதிகளில்-மக்களின் தேவைகளுக்கு மிகப் பொருத்தமான குழுபடைகள், தற்காப்புப் படை முறைகள் எங்கும் அமலாக்கப்படுவதும் மனித சக்தியின் துஷ்பிரயோகமும் விரயமும் தவிர்க்கப்படுவதும் காரணமாக— முடிவற்ற மனித சக்தியை அணிதிரட்ட முடிகின்றது.

கோமிங்டாங், தானியம் ஏராளமாக உள்ள பரந்த பகுதிகளைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்ற போதிலும், மக்கள் அதற்கு ஆண்டுதோறும் 7 கோடி முதல் 10 கோடி டன் வரை தானியம் தருகின்ற போதிலும் தானியத்தில் பெரும்பகுதி அது யார் கைகளூடாகச் செல்கிறதோ அவர்களால் கையாடப் பட்டுவிடுவதால் அதன் படை எப்போதும் உணவுப் பற்றாக்குறை உடையதாகவும், அதன் படை வீரர்கள் பட்டினியால் வாடி மெலிந்தவர்களாகவும் உள்ளனர். எதிரிப் போர்முனையின் பின்புறத்தில்அமைந்துள்ள சீனாவின்

படிப்பகம்

www.padippakam.com



விடுதலையாக்கப்பட்ட பகுதிகளில் பெரும்பாலானவை ''அனைத்தையும் எரி; அனைவரையும் கொல்; அனைத்தை கொள்ளையடி'' என்ற எதிரியின் கொள்கையால் நாசம் செய்யப்பட்டுள்ள போதிலும், வட் சென்ஷி போன்ற சில பிரதேசங்கள் வறட்சியானவை என்ற போதிலும், நாம் நமது சொந்த முயற்சிகளின் மூலம் விவசாய உற்பத்தியை அதிகரிப்பதைக் கொண்டு தானியப் பிரச்சினையை வெற்றிகரமாகத் தீர்த்துள்ளோம்.

கோமிங்டாங் பகுதிகள் மிக மோசமானதொரு நெருக்கடிக்கு ஆளாகியுள்ளன, பெரும்பாலான தொழில்கள் திவாலாகிவிட்டன; துணி போன்ற அத்தியாவசியப் பொருட்களைக் கூட அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டியுள்ளது. ஆனால் சீனாவின் விடுதலையாக்கப்பட்ட பகுதிகளை தொழிற்சாலைகளை அபிவிருத்தி செய்து துணி மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் ஆகியவற்றில் தன் சொந்தத் தேவையைப் பூர்த்தி செய்து கொள்ள முடிகின்றது.

கோமிங்டாங் பகுதிகளில் தொழிலாளர்கள், விவசாயிகள் கடைச் சிப்பந்திகள், அரசாங்க ஊழியர்கள், அறிவு ஜீவிகள், கலாச்சார ஊழியர்கள் ஆகியோர் கடுமையான துன்பத்தில் வாழ்கின்றனர். விடுதலையாக்கப்பட்ட பகுதிகளில் மக்கள் அனைவருக்கும் உணவும், உடையும், வசிப்பிடமும் உள்ளன.

தேசிய நெருக்கடியைக் கொள்ளை லாபமடிக்கும் நோக்கங்களுக்குப் பயன்படுத்திக் கொண்டு அதிகாரிகள் சற்றும் வெட்கம், மானமின்றி வியாபாரிகளாகவும் வழக்கமான ஊழல் நடத்துபவர்களாகவும் ஆகியுள்ளது கோமிங்டாங் பகுதிகளின் குணாம்சமாகும். எளிய வாழ்க்கைக்கும் கடும் உழைப்புக்கும் முன்னுதாரணமாகத் திகழும் ஊழியர்கள் தங்களது வழக்கமான கடமைகளுடன் கூடுதலாக உற்பத்தியில் பங்கெடுத்துக் கொள்வதும், ஊழல் மிக்க் கறாராகத் தடைசெய்யப்படுவதும், நேர்மை உயர்வாகக் கருதப்படுவதும்



தான் சீனாவின் விடுதலையாக்கப்பட்ட பகுதிகளின் குணாம்சமாகும்.

கோமிங்டாங் பகுதிகளில் மக்களுக்குச் சுதந்திரம் அறவே கிடையாது. விடுதலையாக்கப்பட்ட பகுதிகளில் மக்கள் முழுச் சுதந்திரத்தை அனுபவிக்கின்றனர்.

கோமிங்டாங் ஆட்சியாளர்களிடம் காணப்படுகின்ற தாறுமாறுகளுக்கெல்லாம் யாரைப் பழி கூறுவது? பிறரைப் பழி கூறுவதா அல்லது அவர்களையே பழி கூறுவதா? போதிய அளவு உதவி தரவில்லையென அந்நிய நாடுகளைப் பழி கூறுவதா அல்லது கோமிங்டாங் அரசாங்கத்தின் ஊழலையும், கையாலாகாத்தனத்தையும் சர்வாதிகார ஆட்சியையும் பழி கூறுவதா? விடை மிகத் தெளிவாக உள்ளது அல்லவா?

*''ஜப்பானிய எதிர்ப்பு யுத்தத்தை உள்ளிருந்தே நாசப்படுத்துவதும், அரசை அபாயத்திற்கு உள்ளாக்குவதும்'' யார்?*

மறுக்கமுடியாத சான்றுகளை வைத்துப் பார்க்கும்போது, சீன மக்களின் ஜப்பானிய எதிர்ப்பு யுத்தத்தை நாசப்படுத்தியும் நமது நாட்டை ஆபத்திற்குள்ளாக்கியும் வந்துள்ளது கோமிங்டாங் அரசாங்கமே என்பது தெரிகிறதல்லவா? முழுதாகப் பத்து ஆண்டுகளாக இந்த அரசாங்கம் தேசியப் பாதுகாப்பை அறவே புறக்கணித்துவிட்டுத் தன் வாள் முனையை மக்களுக்கு எதிராகத் திருப்பி முழுமையாக உள்நாட்டு யுத்தத்தில் ஈடுபட்டிருந்தது; தனது எதிர்ப்பின்மைக் கொள்கையால் அது நான்கு வடகிழக்கு மாகாணங்களைப் பறிகொடுத்தது. ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்கள் பெருஞ்சுவருக்குத் தெற்கே படையெடுத்து வந்தபோது, அது எதிர்ப்புச் சலசலப்பு காட்டிவிட்டு லூகௌசியா ஓவிலிருந்து குவெய்சோ மாகாணம் வரை பின்வாங்கியது. ஆயினும்

படிப்பகம்

www.padippakam.com



கோமிங்டாங், "கம்யூனிஸ்ட் கட்சி எதிர்ப்பு யுத்தத்தை நாசப்படுத்தி அரசை அபாயத்துக்குள்ளாக்குகிறது" எனக் குறை கூறுகிறது (1943, செப்டம்பரில் நடைபெற்ற கோமிங்டாங் மத்திய செயற்குழுவின் பதினோராவது விரிவடைந்த கூட்டத் தொடரின் தீர்மானங்களைப் பார்க்கவும்). கம்யூனிஸ்ட் கட்சி ஜப்பானை வீரத்துடன் எதிர்த்துப் போராடுகின்ற விடுதலையாக்கப்பட்ட பகுதிகளைச் சிருஷ்டிப்பதற்கு அனைத்துத் தரப்பு மக்களையும் ஐக்கியப்படுத்தியுள்ளது என்பது வெளிப்படையான ஒன்று. கோமிங்டாங்கின் தர்க்கவியல் சீன மக்களுடையதிலிருந்து இவ்வளவு வேறுபடுவதால் பல பிரச்சினைகளில் ஒரு பொது அடிப்படையை அடைய முடியாமற் போனதில் வியப்பொன்றுமில்லை.

இங்கு இரு கேள்விகள் உள்ளன.

முதலாவது, ஹெய்லுங்கியாங் மாகாணத்திலிருந்து லூகௌசியா ஒவி வரைக்கும், லூகௌசி ஓவிலிருந்து குவெய்சோ வரைக்கும் விரிந்துள்ள இவ்வளவு பெரிய, இவ்வளவு பெரும்பான்மையான ஜனத்தொகை கொண்ட பிரதேசத்தைக் கைவிடும்படிக் கோமிங்டாங் அரசாங்கத்தைச் செய்ததுதான் எது? முதலில் அதன் எதிர்ப்பின்மைக் கொள்கையும் அதன் பிறகு செயலற்ற எதிர்ப்பும், மக்களுக்கு எதிரான அதன் உள்நாட்டுக் கொள்கையும் தவிர வேறு ஏதாவது இருக்க முடியுமா?

இரண்டாவது, பொம்மைப் படைகளின் கவிரக்கமற்ற நீண்ட தாக்குதல்களைத் தூளாக்கவும், தேசிய எதிரியின் பிடியிலிருந்து இவ்வளவு பரந்த பிரதேசங்களைத் திரும்பப் பெறவும் இவ்வளவு பிரம்மாண்டமான ஜனத்தொகையை விடுவிக்கும் வல்லமையைச் சீனாவின் விடுதலையாக்கப்பட்ட பகுதிகளுக்கு அளித்தது எது? நமது சரியான நெறியை



விட அதாவது மக்கள் யுத்த நெறியை விட வேறு ஏதுவாகவும் அது இருக்க முடியுமா?

### "அரசாங்க, இராணுவக் கட்டளைகளுக்குப் பணியாமை"

கோமிங்டாங் அரசாங்கம் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மீது "அரசாங்க, இராணுவக் கட்டளைகளுக்குப் பணிவதில்லை" என்று தொடர்ந்து குற்றம் சாட்டி வருகின்றது. நாம் கூற உள்ளதெல்லாம், உண்மையில் சீன மக்கள் ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து பெரும் கஷ்டங்களுக்கும் தொல்லைகளுக்கும் மத்தியில் திரும்பக் கைப்பற்றியிருந்த விடுதலையாக்கப்பட்ட பகுதிகளை ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களிடமே கொடுத்து விடுவதாக இருந்திருக்கக் கூடியவையான "அரசாங்க, இராணுவக் கட்டளைகளுக்குச்" சீனக் கம்யூனிஸ்டுகள் சீன மக்களின் பொதுப் புரிதலுடன் ஒன்றுபட்டவர்களாய்க் கீழ்படியாதிருந்தது நல்லதிர்ஷ்டம் என்பதே. 1939 இல் "எதிர்க் கட்சிகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள்", 1941 இல் "புதிய நான்காம் சேனை கலைக்கப்படவும்" அது "மஞ்சள் நதியின் பழைய படுகைக்கு வடக்கே வாபஸாகவும்" ஆகிய கட்டளைகள், 1943 இல் "சீனக் கம்யூனிஸ்ட் கட்சியைக் கலைக்கும்படியான" கட்டளை, கோமிங்டாங்கின் சர்வாதிகார அரசாங்கத்தில் (நாம்) ஒரு சில பதவிகள் பெறுவதற்குப் பதிலாகக் கூட்டு அரசாங்கம் ஒன்று அமைக்கப்படாமல் நம்மை நமது ஆயுதப் படைகளையும் ஸ்தல அரசாங்கங்களையும் தாரை வார்த்துக் கொடுத்துவிடக் கோருவதான, கோமிங்டாங் அரசாங்கம் நம்முடனான சமீபத்திய பேச்சுவார்த்தைகளில் "ஒரு சலுகை" என அழைத்த அதன் பிரேரணை, ஆகியவை சில உதாரணங்களாகும். அதிர்ஷ்ட வசமாக நாம் இந்த வகையான காரியத்துக்குப் பணிந்து போகவில்லை; இவ்வாறாகச் சீன மக்களுக்கு மாசுபடாத ஒரு நிலப்பரப்பையும் வீரமிக்க

படிப்பகம்

www.padippakam.com



ஜப்பானிய எதிர்ப்புச் சேனை ஒன்றையும் பேணி வைத்துள்ளோம். சீன மக்கள் இத்தகைய ''கீழ்ப்படியாமை'' குறித்துத் தங்களைத் தாங்களே பாராட்டிக் கொள்ள அல்லவா வேண்டும். கோமிங்டாங் அரசாங்கம் தன் சொந்தப் பாசிச அரசாங்க ஆணைகள் மூலமும், தோல்விவாத இராணுவ ஆணைகள் மூலமும் ஹெய்லுங்கியாங்கிலிருந்து குவெய்சா வரையிலான பரந்த மக்கள் வாழ்கின்ற பிரதேசத்தை ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களுக்குப் பரிசளித்துவிட்ட பின்னரும் கூடத் தான் செய்தது போதும் என எண்ணவில்லையா? ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களும் பிற்போக்காளர்களும் இந்த ''அரசாங்க இராணுவக் கட்டளைகளை'' வரவேற்கின்றனர்; ஆனால் இந்த விதமான காரியங்கள் எந்த நேர்மையான சீனத் தேசபக்தனாலும் வரவேற்கப்பட முடியுமா? வடிவத்தில் மட்டும் இல்லாமல் உண்மையில் ஒரு கூட்டு அரசாங்கம், பாசிச சர்வாதிகாரம் இல்லாமல் ஒரு ஜனநாயக அரசாங்கம் இருந்தாலொழிய, சீன மக்கள் சுதந்திரத்தை வென்றெடுத்துள்ள விடுதலையாக்கப்பட்ட பகுதிகளையும் எதிர்ப்பு யுத்தத்திற்குத் தனித்தியங்கும் சேவை ஆற்றியுள்ள மக்கள் சேனைகளையும் தற்போதுள்ள தோல்விவாத, பாசிசவாத, சர்வாதிகார கோமிங்டாங் அரசாங்கத்திடம் தாரை வார்த்துக் கொடுக்க சீனக் கம்யூனிஸ்ட் கட்சியை அனுமதிப்பர் என எண்ணவும் இடமுண்டா? விடுதலையாக்கப்பட்ட பிரதேசங்களும் மக்கள் சேனைகளுமின்றிச் சீன மக்களின் ஜப்பானிய-எதிர்ப்பு லட்சியம் இன்றுள்ள நிலையிலிருக்க முடியுமா? சீனத் தேசத்தின் எதிர்காலம் எப்படி இருக்குமென யாராவது கற்பனை தான் செய்து பார்க்க முடியுமா?

### உள்நாட்டுப் போர் அபாயம்

இது நாள் வரை கோமிங்டாங்கிலுள்ள பிரதான ஆளும் கும்பல் சர்வாதிகாரமும் உள்நாட்டுப் போருமாகிய அதன்



பிற்போக்குக் கொள்கையில் விடாப்பிடியாகவே இருந்து வருகிறது. ஒரு நேசநாட்டின் படைகள் சீனப் பெருநிலத்தின் கணிசமான பகுதியிலிருந்து ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களை வெளியேற்றிய மறு கணமே உள்நாட்டுப் போர் ஒன்றைக் கட்டவிழ்த்துவிடுவதற்கான தயாரிப்புகளை அது நீண்ட காலமாகச் செய்து வருகிறது என்பதற்கும், இப்போது தீவிரப்படுத்துகிறது என்பதற்கும் பல அறிகுறிகள் தென்படுகின்றன. சில நேச நாடுகளின் தளபதிகள் கிரேக்க நாட்டில் பிரிட்டிஷ் தளபதி ஸ்கோபி* செய்து வந்துள்ள அதே வேலையைச் சீனாவிலும் செய்வார்கள் என அது நம்பியிருக்கிறது. அது ஸ்கோபியாலும் பிற்போக்குக் கிரேக்க அரசாங்கத்தாலும் இழைக்கப்பட்ட படுகொலையைப் பாராட்டி ஆரவாரம் செய்கிறது. அது 1927 - 37 ஐப் போல் சீனாவை மீண்டும் உள்நாட்டுப் போர்ப் புயலில் ஆழ்த்தத் திட்டமிடுகிறது. ''தேசிய சபையைக் கூட்டுவது'' ''அரசியல் தீர்வு என்ற திரைமறைவில் அது இரகசியமாக உள்நாட்டுப் போருக்குத் தயாராகிறது. நமது நாட்டு மக்கள் இதை கவனிக்கத் தவறினால், அதன் திட்டங்களை அம்பலப்படுத்தவும் இத்தயாரிப்புகளுக்கு முடிவு கட்டவும் தவறினால், பிறகு திடீரென ஒரு நாள் அவர்கள் உள்நாட்டுப் போரின் பீரங்கி வேட்டுகளைக் கேட்க நேரிடும்,

### பேச்சு வார்த்தைகள்

பிற ஜனநாயகக் கட்சிகளின் சம்மதத்தைப் பெற்ற பின்னர் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி 1944 செப்டம்பரில் மக்கள் அரசியல் கவுன்சிலில் ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களைத் தோற்கடிக்கவும், புதிய சீனா ஒன்றைக் கட்டியெழுப்பவும் உள்நாட்டுப் போரைத் தடுக்கவுமான நோக்கத்திற்காகக் கோமிங்டாங்கின் ஒரு-கட்சிச் சர்வாதிகாரம் உடனடியாக ரத்து செய்யப்பட வேண்டும் எனவும், ஜனநாயகக் கூட்டு அரசாங்கம் ஒன்று உருவாக்கப்பட வேண்டுமெனவும் கோரிக்கை ஒன்றை

படிப்பகம்

www.padippakam.com



முன் வைத்தது. அது சந்தேகத்துக்கிடமின்றி உரிய நேரத்தில் முன்வைக்கப்பட்ட கோரிக்கையாகும்; ஒரு சில மாதங்களுக்குள்ளாகவே அது பரந்து பட்ட வெகுமக்களின் உற்சாகமான ஆதரவைப் பெற்றுள்ளது.

ஒரு கட்சிச் சர்வாதிகாரத்தை ரத்து செய்யவும் கூட்டு அரசாங்கம் ஒன்றை அமைக்கவும் அத்தியாவசியமான ஜனநாயகச் சீர்திருத்தங்களைச் செய்யவுமான பிரச்சினையில் நாம் கோமிங்டாங் அரசாங்கத்துடன் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடத்தியுள்ளோம்; ஆனால் அது நமது பிரேரணைகள் அனைத்தையும் நிராகரித்துள்ளது. கோமிங்டாங் ஒரு-கட்சிச் சர்வாதிகாரத்தை ரத்து செய்து கூட்டரசாங்கம் ஒன்றை அமைக்க மனமின்றி இருப்பது மட்டுமல்லாமல், இரகசிய போலீஸ் முறையை ஒழிப்பது, மக்களின் சுதந்திரத்தை ஒடுக்குகின்ற பிற்போக்குச் சட்டங்களையும், விதிகளையும் ரத்தாக்குவது, அரசியல் கைதிகளை விடுதலை செய்வது, அரசியல் கட்சிகளின் சட்ட பூர்வ அந்தஸ்தை அங்கீகரிப்பது, விடுதலையாக்கப்பட்ட பகுதிகளை அங்கீகரிப்பது, அவற்றை முற்றுகையிட்டும் தாக்கியும் வரும் சேனைகளை வாபஸ் பெறுவது ஆகிய அவசரமாகத் தேவைப்படும் ஜனநாயக சீர்திருத்தங்களில் ஒன்றைக் கூடச்செய்வதற்கு மனமின்றி இருக்கிறது. இதன் விளைவாகச் சீனாவில் அரசியல் உறவுகள் மிகவும் சிரமமிக்கவையாக ஆகியுள்ளன.

### இரு சாத்தியப்பாடுகள்

முழுமையான நிலைமையினதும் உண்மையிலுள்ள சர்வதேசிய, உள்நாட்டு விவகாரங்களின் நிலை பற்றிய மேற்கண்ட ஆய்வினதும் ஒளியில் நான் இங்குள்ள அனைவரையும் விழிப்புடனிருக்கும்படியும், நமது இலட்சியம் சிக்கலின்றியும் இலகுவாயும் நிறைவேறும் என எதிர்பார்க்க வேண்டாமென்றும் கேட்டுக் கொள்



கிறேன். இல்லை, அப்படி இருக்காது. உண்மையில் இரு சாத்தியக் கூறுகள், இரு சாத்தியப்பாடுகள், நல்லதொன்றும், தீயதொன்றும் உள்ளன. ஒரு சாத்தியக் கூறு அல்லது வாய்ப்பு, பாசிச சர்வாதிகாரம் தொடர்வதும், ஜனநாயக சீர்திருத்தங்கள் அனுமதிக்கப்படாதிருப்பதும், அழுத்தம் ஜப்பானிய ஆக்ரமிப்பாளர்களை எதிர்ப்பதில் இருப்பதற்குப் பதிலாக மக்களை எதிர்ப்பதிலேயே இருப்பதும், ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்கள் தோற்கடிக்கப்பட்ட பின்னர் உள்நாட்டுப் போர் கூட வெடித்துச் சீனாவைச் சுதந்திரமோ, விடுதலையோ, ஜனநாயகமோ, ஐக்கியமோ, சுபீட்சமோ, பலமோ இல்லாத அதன் பழைய பரிதாப நிலைக்கு மீண்டும் இழுத்துச் செல்வதும் ஆகும். இந்தச் சாத்தியக் கூறு அல்லது வாய்ப்பு இன்னும் உள்ளது. வெறுமனே சாதகமான சர்வதேச நிலைமைகள் எமது மக்களின் அதிகரித்துள்ள அரசியல் உணர்வு, ஸ்தாபன பலம் ஆகியவற்றின் காரணமாக அந்த வாய்ப்பு இல்லாமற் போய்விடவுமில்லை. தானாக மறைந்து விடவுமில்லை இந்தச் சாத்தியக் கூறு அல்லது வாய்ப்பு சீனாவில் யதார்த்தமாகும் என ஆசையுடன் நம்பிக் கொண்டிருப்பவர்கள் உள்நாட்டில் கோமிங்டாங்கிற்கு உள்ளே உள்ள பிற்போக்குக் கும்பலும் வெளிநாட்டில் ஏகாதிபத்திய எண்ணங்கொண்ட பிற்போக்காளர்களுமேயாவர். இது கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவேண்டிய ஒரு அம்சம்.

ஆனால், இன்னொரு அம்சமும் உள்ளது. இதிலும் முழுமையான நிலைமையினதும், சர்வதேச, உள்நாட்டு விவகாரங்களின் நிலை பற்றிய மேற்கண்ட ஆய்வினதும் ஒளியில் நாம் இரண்டாவது சாத்தியக் கூறு அல்லது வாய்ப்பிற்குப் பாடுபடுவதில் மேலும் நம்பிக்கையும் துணிவும் பெறலாம். அது கஷ்டங்களையெல்லாம் கடப்பதும் மக்கள் அனைவரையும் ஒன்றுபடுத்துவதும், கோமிங்டாங்கின் பாசிச சர்வாதிகாரத்தை ரத்து செய்வதும், ஜனநாயகச் சீர்திருத்தங்கள் செய்

படிப்பகம்

www.padippakam.com



வதும், ஜப்பானிய-எதிர்ப்புச் சக்திகளை உறுதிப்படுத்துவதும் விரிவாக்குவதும், ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களை முற்றாகத் தோற்கடிப்பதும், சுதந்திரமான, விடுதலையான, ஜனநாயக, ஐக்கிய, சுபிட்சமான, சக்திமிக்க சீனா ஒன்றைக் கட்டியெழுப்புவதுமான சாத்தியக்கூறு அல்லது வாய்ப்பாகும். இந்தச் சாத்தியக் கூறு அல்லது வாய்ப்பு சீனாவில் யதார்த்தமாகும் என நம்புபவர்கள் உள்நாட்டில் வெகு ஜனங்களும் கம்யூனிஸ்ட் கட்சியும் பிற ஜனநாயகக் கட்சிகளும், வெளிநாடுகளில் நம்மைச் சமமாக நடத்துகின்ற எல்லாத் தேசங்களும் முற்போக்காளர்களும் வெகுஜனங்களுமாவர்.

சீனக் கம்யூனிஸ்டுகளாகிய நாம் சீன மக்கள் அனைவருடனும் இன்னும் பெரும் கஷ்டங்களையும் தடங்கல்களையும் எதிர்நோக்குகின்றோம். நாம் கடந்து செல்வதற்கு நீண்டதும் சிரமமிக்கதுமானதொரு பாதை உள்ளது என்பதை நாம் நன்கறிவோம். அனைத்துச் சீனமக்களுடனும் நாம் ஒன்றுபட்டு எல்லாக் கஷ்டங்களையும் தடங்கல்களையும் கடப்போம். வரலாறு சீனாவிடம் ஒப்படைத்துள்ள பணியைச் செய்து முடிப்போம் என்பதையும் நாம் அதே அளவு நன்கு அறிவோம். நமக்கும் முழு சீன மக்களுக்கும் உள்ள பெரும் பணி முதலாவது சாத்தியப்பாட்டைத் தவிர்ப்பதும இரண்டாவது சாத்தியப்பாட்டுக்காக தமது சக்தி முழுவதையும் பிரயோகித்துப் பாடுபடுவதுமாகும் சாராம்சத்தில் சர்வதேச உள்நாட்டு நிலைமை கம்யூனிஸ்டுகளாகிய நமக்கும் முழுச் சீன மக்களுக்கும் சாதகமாக உள்ளது. இதை நான் ஏற்கனவே முற்றாகத் தெளிவாக்கியுள்ளேன். கோமிங்டாங் அதிகாரிகள் பொதுவான உலகப் போக்கையும் சீனாவிலுள்ள பொதுஜன உணர்ச்சியையும் கருத்தில் கொண்டு, யுத்தம் வெல்லப்படவும், சீன மக்களின் துன்பங்கள் குறைக்கப்படவும் நவ சீனா ஒன்று விரைவில் உருவாக்கப்படவும் வேண்டி, தற்போதைய தங்களது தவறான கொள்கைகளை மாற்றிக்



கொள்ளத் துணிவுடையவர்களாயிருப்பார்கள் என நாம் நம்புகிறோம். பாதை எவ்வளவுதான் சிரமமிக்கதாய் இருந்தாலும் சீன மக்கள் நிச்சயமாகச் சுதந்திரத்தையும் விடுதலையையும் அடைந்தே தீருவார்கள். அவர்கள் அவ்வாறு செய்வதற்கான காலம் வந்துவிட்டது. கடந்த நூற்றாண்டில் எண்ணிறந்த தியாகிகள் நெஞ்சில் பாராட்டிய உன்னத அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் பணி நமது சந்ததியினருக்குக் கிடைத்திருக்கிறது; நம்மைத் தடுப்பதற்கான எந்த முயற்சியும் சந்தேகத்திற்கு இடமின்றித் தோல்வியில்தான் முடியும்.

படிப்பகம்

www.padippakam.com

## 4. சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கை

நான் சீனாவின் ஜப்பானிய — எதிர்ப்பு யுத்தத்திலான இரு நெறிகளையும் ஆராய்ந்துள்ளேன். இத்தகையதொரு ஆய்வு மிகவும் அவசியம். ஏனெனில், இந்தக் கணம் வரை சீன மக்கள் பலர் இந்த யுத்தத்தில் உண்மையில் என்ன நடக்கிறது என அறியாதிருக்கின்றனர். கோமிங்டாங் பகுதிகளிலும் வெளிநாடுகளிலும் உள்ள பலர் கோமிங்டாங் அரசாங்கத்தின் முற்றுகைக் கொள்கையால் அறிய விடாமல் வைக்கப்பட்டுள்ளனர். 1944 இல் சீன மற்றும் அந்நிய நாட்டு நிருபர்கள் கோஷ்டியொன்று பார்வையிடும் சுற்றுப் பயணம் ஒன்றில் இங்கு வரும் வரை அவர்கள் சீனாவின் விடுதலையாக்கப்பட்ட பகுதிகளைப் பற்றிக் கிட்டதட்ட எதுவுமே அறியாதிருந்தனர். அந்தக் கோஷ்டி திரும்பிச் சென்றவுடனே, விடுதலையாக்கப்பட்ட பகுதிகளிலுள்ள உண்மை நிலைமை வெளியே தெரிய வருவது பற்றி மிகவும் பயங்கொண்டிருந்த கோமிங்டாங் அரசாங்கம் கதவைத் தாளிட்டு, வேறெந்த நிருபரையும் இங்கு வருவதற்கு அனுமதி தர மறுத்துவிட்டது. இதே போல் அது கோமிங்டாங் பகுதிகளைப் பற்றிய உண்மையையும் அமுக்கிவிட்டது. ஆகவே ''இரு பகுதிகளையும்'' பற்றிய உண்மையான விவரங்களை எந்த அளவு சாத்தியமோ அந்த அளவுக்குப் பொதுமக்கள் அறியும் படிச் செய்யும் கடமை நமக்கு உள்ளது என நான் நினைக்கிறேன். சீனாவிலுள்ள நிலைமை முழுவதையும் மக்கள் தெளிவாகக் காணும்போது மட்டுமே அவர்கள் சீனாவிலுள்ள மிகப் பெரிய இரு அரசியல் கட்சிகளான கம்யூனிஸ்ட் கட்சிக்கும் கோமிங்டாங்கிற்கும்



இடையில் ஏன் இத்தகையதொரு போராட்டம் நடக்கிறது என்பதையும் புரிந்து கொள்வார்கள். இரு கட்சிகளுக்கும் இடையிலான தகராறு சிலர் கூறியுள்ளதைப் போல் அநாவசியமான அல்லது முக்கியமில்லாத அல்லது வெறுமனே முட்டையில் மயிர் பிடுங்கும் தகராறு அல்லது கோடிக்கணக்கான மக்களின் வாழ்வு பற்றிய கோட்பாட்டுத் தகராறு என்பதை மக்கள் புரிந்து கொள்வார்கள்.

சீனாவின் தற்போதைய மோசமான நிலைமையில், உள் நாட்டிலுள்ள மக்களும், ஜனநாயகவாதிகளும் ஜனநாயகக் கட்சிகளும், பிற நாடுகளிலுள்ள, சீன நிலைமை பற்றி அக்கறை கொண்டவர்களும் எல்லாம் ஐக்கியமின்றி இருப்பது நீங்கி ஐக்கியமேற்படுமென்றும் ஜனநாயகச் சீர்திருத்தங்கள் புகுத்தப்படுமென்றும் ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர். இன்றைய பல ஜீவாதாரமான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கை என்ன என்று அறியவும் விரும்புகின்றனர். இயல்பாகவே நமது கட்சி அங்கத்தினர்கள் இந்த விஷயங்களில் இன்னும் ஆழ்ந்த அக்கறை கொண்டுள்ளனர்.

யுத்தத்திலான ஜப்பானிய-எதிர்ப்புத் தேசிய ஐக்கிய முன்னணி பற்றிய நமது கொள்கைகள் எப்போதும் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் இருந்து வந்துள்ளன. அவை எட்டு ஆண்டுகளின் யுத்தத்தில் பரிட்சிக்கப்பட்டுள்ளன. நமது மாநாடு நமது எதிர்காலப் போராட்டங்களுக்கான ஒரு வழி காட்டியாகக் கொண்டு அவற்றிலிருந்து முடிவுகளைப் பெற வேண்டும்.

இனி நான் சீனாவின் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான பிரதான கொள்கைகள் சம்பந்தமாக நமது கட்சி வந்தடைந்த பல திட்டவட்டமான கொள்கைகளை விளக்குகிறேன்.

படிப்பகம்

www.padippakam.com



## நமது பொது வேலைத்திட்டம்

சீன மக்களின் ஜப்பானிய-எதிர்ப்புச் சக்திகள் அனைத்தையும் அணி திரட்டுவதற்கும் ஐக்கியப்படுத்துவதற்கும், ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களை முற்றாக அழித்தொழிப்பதற்கும், சுதந்திரமான, விடுதலையான, ஜனநாயகமான சுபீட்சமான, சக்தி மிக்க நவசீனா ஒன்றை கட்டியெழுப்புவதற்குமான நோக்கத்திற்காகச் சீன மக்களுக்கும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சிக்கும், ஜப்பானிய எதிர்ப்பு ஜனநாயகச் சக்திகளுக்கும் இணக்கமான பொது வேலைத்திட்டம் ஒன்று அவசரமாகத் தேவைப்படுகின்றது.

இத்தகையதொரு பொது வேலைத் திட்டம் பொதுவானதும் குறிப்பானதுமென இரு பகுதிகளாகப் பிரிக்கப்படலாம். நாம் முதலில் பொதுவான வேலைத் திட்டத்தையும் பின்னர்க் குறிப்பானதையும் எடுத்துக் கொள்வோம்.

ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்கள் முற்றாக அழிக்கப்படவும் புதிய சீனா ஒன்று கட்டியெழுப்பப்படவும் வேண்டுமென்ற பிரதான கருத்தில், கம்யூனிஸ்டுகளாகிய நாமும் ஜனத்தொகையில் மிகுந்த பெரும்பான்மையோரும் சீன அபிவிருத்தியின் தற்போதைய கட்டத்தில் பின்வரும் அடிப்படைக் கருத்துகளில் இணக்கமாக உள்ளோம். முதலாவதாகச் சீனா பெரும் நிலப்பிரபுக்களினதும் பெரும் முதலாளித்துவ வர்க்கத்தினதும் சர்வாதிகாரத்தின் கீழான நிலப்பிரபுத்துவ, பாசிச, மக்கள்-விரோத அரசு அமைப்பு ஒன்றைக் கொண்டிருக்கக் கூடாது, ஏனெனில் கோமிங்டாங்கின் பிரதான ஆளும் கும்பலின் பதினெட்டாண்டு அரசாட்சி ஏற்கனவே அதன் முற்றான ஓட்டாண்டித்தனத்தை நிரூபித்துள்ளது. இரண்டாவதாகச் சீனா பழைய ரக ஜனநாயக சர்வாதிகாரத்தை — சுத்த தேசிய முதாலளித்துவ அரசொன்றை - ஸ்தாபிப்பது என்பது அசாத்தியம்; ஆகவே



அது அவ்வாறு செய்ய முயலக் கூடாது; ஏனெனில் ஒருபுறம் சீனத் தேசிய முதலாளித்துவ வர்க்கம் தன்னைப் பொருளாதார ரீதியிலும், அரசியல் ரீதியிலும் சொத்தையானதாக நிரூபித்துக் கொண்டுள்ளது; மறுபுறம் இப்போது நீண்ட காலமாகப் புதிய அம்சமொன்று, அதாவது, விவசாய வெகுமக்களுக்கும் நகர்ப்புறச் சிறு முதலாளித்துவ வர்க்கத்திற்கும் அறிவு ஜீவிப் பிரிவுக்கும் பிற ஜனநாயகச் சக்திகளுக்கும் தலைமையேற்றுள்ள சீனத் தொழிலாளி வர்க்கம் அதன் தலைவனான சீனக் கம்யூனிஸ்ட் கட்சியுடன் சேர்ந்து அரசியல் அரங்கில் பெரும் வல்லமையை நிரூபித்துள்ளது. மூன்றாவதாக வெளிநாட்டு ஒடுக்குமுறையையும் நிலப்பிரபுத்துவ ஒடுக்குமுறையையும் எதிர்த்துப் போராடுவதே சீன மக்களின் பணியாக இன்னும் உள்ள இந்தக்கட்டத்தில், ஒரு சோசலிச அரசிற்கு அவசியமான சமூக, பொருளாதாரச் சூழ்நிலைகள் இன்னும் இல்லாமலுள்ள தற்போதைய கட்டத்தில் சோசலிச அரசு அமைப்பு ஒன்றை நிறுவுவதும், அவ்வாறே அசாத்தியம்.

அப்படியானால் நாம் எதை முன்வைப்பது? ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களை முழுமையாக நாம் தோற்கடித்த பின்னர் புதிய ஜனநாயகம் என நாம் அழைக்கின்ற அரசு அமைப்பொன்று, அதாவது, தொழிலாளி வர்க்கத் தலைமையின் கீழ் ஏகப்பெரும்பான்மை மக்களை அடித்தளமாகக் கொண்ட ஒரு ஐக்கிய முன்னணி - ஜனநாயகக் கூட்டணி ஒன்று நிறுவப்படுவதை முன்வைக்கிறோம்.

இந்த வகையான அரசு அமைப்புதான் ஏகப் பெரும்பான்மை சீன மக்களின் கோரிக்கைகளை உண்மையிலேயே பூர்த்தி செய்யக் கூடியதாகும்; ஏனெனில் முதலாவதாக அது லட்சக்கணக்கான, பத்து லட்சக்கணக்கான கைவினைஞர்கள் மற்றும் பண்ணைத் தொழிலாளர்களின் அங்கீகாரத்



படிப்பகம்

www.padippakam.com



த்தையும், இரண்டாவதாகச் சீன மக்களில் 80 சதவீதத்தைக் கொண்ட, அதாவது, 45 கோடி ஜனத்தொகையில் 36 கோடி கொண்ட விவசாய வர்க்கத்தின் அங்கீகாரத்தையும், மூன்றாவதாக, நகர்ப்புறச் சிறு முதலாளி வர்க்கத்தினரில் பெரும் எண்ணிக்கையிலானவர்கள் அதே போல் தேசிய முதலாளிகள், அறிவாளிக் கனவான்கள், பிற தேசபக்தர்கள் ஆகியோரின் அங்கீகாரத்தையும் உண்மையில் வென்றெடுக்கும் வல்லமை கொண்டது; வென்றெடுத்தும் வந்துள்ளது.

இந்த வர்க்கங்களுக்கிடையில் இன்னமும் முரண்பாடுகள் குறிப்பாக உழைப்பிற்கும் மூலதனத்திற்கும் இடையிலான முரண்பாடுகள் இருக்கத்தான் செய்கின்றன; இதன் விளைவாக இவை ஒவ்வொன்றும் அதனதன் குறிப்பான கோரிக்கைகளைக் கொண்டிருக்கின்றன. இந்த முரண்பாடுகளும் வேறுபடும் கோரிக்கைகளும் இருப்பதை மறுப்பது வெளிவேஷமும் தவறுமாகும், ஆனால் புதிய ஜனநாயகக் கட்டம் பூராவிலும் இந்த முரண்பாடுகளும், வேறுபடும் கோரிக்கைகளும் வளர்ந்து அனைத்திற்கும் பொதுவாக உள்ள கோரிக்கைகளைக் கடந்து விடப் போவதில்லை; அப்படி நடக்க அனுமதிக்கவும் கூடாது; அவை சரி கட்டப்பட முடியும். இத்தகைய சரிகட்டல் மூலம் இந்த வர்க்கங்கள் ஒன்றுபட்டுப் புதிய ஜனநாயக அரசின் அரசியல், பொருளாதார மற்றும் கலாச்சாரப் பணிகளை நிறைவேற்ற முடியும்.

நாம் ஆதரிக்கின்ற புதிய ஜனநாயக அரசியலானது வெளிநாட்டு ஒடுக்குமுறையையும், உள்நாட்டு நிலப்பிரபுத்துவ மற்றும் பாசிச ஒடுக்குமுறையையும் தூக்கியெறிந்து விட்டு, அதன் பின்னர்-பழைய வகை ஜனநாயகமல்லாத அனைத்து ஜனநாயக வர்க்கங்களையும் உள்ளடக்கிய ஒரு ஐக்கிய முன்னணியாகிய ஒரு அரசியல் அமைப்பை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டதாகும். நமது



இந்தக் கருத்துகள் டாக்டர் சன்-யாட்-சென்னின் புரட்சிகர கருத்துகளுடன் முழுமையாக ஒத்திருக்கின்றன. கோமிங்டாங்கின் முதல் தேசிய மாநாட்டின் கொள்கையறிக்கையில் டாக்டர் சன் பின்வருமாறு எழுதினார்:-

> “நவீன அரசுகளில் ஜனநாயக அமைப்பென அழைக்கப்படுவது வழக்கமாக முதலாளித்துவ வர்க்கத்தால் ஏகபோகப்படுத்தப்பட்டுள்ளது; வெறுமனே சாதாரண மக்களை அடக்கி ஒடுக்குவதற்கான ஒரு கருவியாக ஆகியுள்ளது. மறுபுறம் கோமிங்டாங்கினுடைய ஜனநாயகக் கோட்பாட்டின் பொருள் சாதாரண மக்கள் அனைவரும் பங்கு கொள்வதும் ஒரு சிலரின் தனிப்பட்ட உடைமையாக இல்லாததுமான ஒரு ஜனநாயக அமைப்பாகும்,”

இது டாக்டர் சன்னின் ஒரு மாபெரும் அரசியல் கட்டளையாகும். சீன மக்களும் சீன கம்யூனிஸ்ட் கட்சியும் மற்றெல்லா ஜனநாயகவாதிகளும் அதை மதிக்கவும், உறுதியாக நடைமுறைப்படுத்தவும் வேண்டும்; அதை மீறுகின்ற அல்லது எதிர்க்கின்ற எல்லாத் தனி நபர்களையும் கோஷ்டிகளையும் எதிர்த்து உறுதியான போராட்டம் ஒன்றை நடத்தவும் வேண்டும்; இவ்வாறாகப் புதிய ஜனநாயகமாகிய முற்றிலும் சரியான இந்த அரசியல் கோட்பாட்டைப் பாதுகாக்கவும் வேண்டும்.

பிரதான கொள்கைகளைத் தீர்மானிக்கக் கூடியதும் பல்வேறு மட்டங்களில் அரசாங்கங்களைத் தேர்ந்தெடுக்கக் கூடியதுமான மக்கள் காங்கிரஸ்களைக் கொண்ட ஜனநாயக மத்தியத்துவமாகப் புதிய ஜனநாயக அரசின் அமைப்புக் கோட்பாடு இருக்க வேண்டும். அது ஒரே நேரத்தில் ஜனநாயகமுடையதாகவும், மத்தியத்துவம் உடையதாகவும் இருக்கின்றது; அதாவது ஜனநாயக அடித் தளத்தில்

படிப்பகம்

www.padippakam.com



மத்தியத்துவப்படுத்தப்பட்டதும், மத்தியத்துவப்படுத்திய வழி காட்டலின் கீழ் ஜனநாயகமயமானதுமாகும். எல்லா மட்டங்களிலும் மக்கள் காங்கிரஸ்களால் அளிக்கப்பட்ட முழு அதிகாரங்களையும் பயன்படுத்தி ஜனநாயகத்தை முழுமை யாக வெளிப்படுத்தக் கூடிய ஒரே அமைப்பு இதுதான்; அதே நேரத்தில் அதற்குத் தொடர்பான ஒவ்வொரு மட்டத் திலும் மக்கள் காங்கிரசால் அதற்கு அளிக்கப்பட்ட விவகாரங் கள் அனைத்திலும் மத்தியத்துவப்படுத்தப்பட்ட நிர்வாகத்தை அளிக்கக் கூடியதும், மக்களின் ஜனநாயக வாழ்விற்கு அவசியமான அனைத்தையும் பாதுகாப்பதுமான அரசாங்கங் களைக் கொண்டு மத்தியத்துவப்படுத்தப்பட்ட நிர்வாகத்துக்கு உத்தரவாதம் அளிக்கக் கூடிய ஒரே அமைப்பு இதுதான்.

புதிய ஜனநாயக அரசின் ஒரு முக்கிய பகுதியாகச் சேனை யும் பிற ஆயுதப் படைகளும் அமைகின்றன; இவை இல்லாமல் அரசு பாதுகாக்கப்பட முடியாது. மற்றெல்லா அதிகார அங்கங்களைப் போலவே புதிய ஜனநாயக அரசின் ஆயுதப் படைகளும் மக்களுக்குச் சொந்தமானவையும் அவர் களைப் பாதுகாக்கக்கூடியவையுமாகும். சிலருக்கு மட்டுமே சொந்தமானவையும் மக்களை ஒடுக்கக் கூடியவையுமான பழைய வகைப்பட்ட இராணுவம், போலீஸ் போன்ற வற்றுக்கும் இதற்கும் எந்தச் சம்பந்தமும் கிடையாது.

நாம் ஆதரிக்கின்ற புதிய ஜனநாயகப் பொருளாதாரமும் அதேபோல் டாக்டர் சன்னின் கோட்பாடுகளுக்கு இசைவாக உள்ளது. நிலப்பிரச்சினையில் டாக்டர் சன் ''உழுபவனுக்கே நிலம்'' என்பதை ஆதரித்தார். தொழில் மற்றும் வர்த்தகம் பற்றிய பிரச்சினையில் டாக்டர் சன் மேலே கூறப்பட்ட கொள்கை அறிக்கையில் பின்வருமாறு எழுதினார் :-

''வங்கிகள், இரயில் போக்குவரத்து, விமானப் போக்கு வரத்து போன்ற தொழில் துறைகள் சீனரின் உடைமை



யாகவோ அல்லது வெளிநாட்டவரின் உடைமையாகவோ இருந்தாலும் சரி, இயல்பில் அவை ஏகபோகத் தன்மை உடையதாகவோ, அல்லது தனியார் நிர்வாகத்தால் நடத்த முடியாத அளவுக்கு பெரியதாகவோ இருந்தாலும் சரி, அவை மக்களின் வாழ்வை ஆதிக்கம் செய்ய இயலாதவாறு அரசினால் நடத்தவும் நிர்வகிக்கவும் படும்: இதுவே மூலதனத்தைக் கட்டுப்படுத்தும் பிரதானக் கோட்பாடு''

தற்போதைய கட்டத்தில் பொருளாதாரப் பிரச்சினைகள் பற்றிய டாக்டர் சன்னின் இந்தக் கருத்துகளோடு நாம் பூரணமாக இணங்குகிறோம்.

சீனக் கம்யூனிஸ்டுகள், தனியார் முன்முயற்சியின் வளர்ச்சிக்கும், தனியார் மூலதன வளர்ச்சிக்கும், தனியார் உடைமையின் பாதுகாப்பிற்கும் எதிராக இருப்பதாகச் சிலர் சந்தேக்கின்றனர்; ஆனால் அது தவறு. சீன மக்களின் தனி நபர் முன்முயற்சியின் வளர்ச்சியைக் குரூரமாகக் கட்டிப் போடுவதும், தனியார் மூலதனத்தின் வளர்ச்சியைத் தடை செய்வதும், மக்களின் சொத்துக்களை அழிப்பதும், வெளி நாட்டு அடக்குமுறையும் நிலப்பிரபுத்துவ அடக்குமுறையும் தான். இந்த விலங்குகளை அகற்றுவதும், இந்த அழிவைத் தடுத்து நிறுத்துவதும், சமுதாயக் கட்டமைவுக்குள் மக்கள் தங்கள் தனித்துவத்தைச் (தனிநபர் இயல்பை) சுதந்திரமாக வளர்த்துக் கொள்ள முடியும் என்ற உத்தரவாதத்தை அளிப்பதும், ''மக்களின் வாழ்வை ஆதிக்கம் செய்யாமல்'' அதற்கு நன்மை செய்யும் விதமான தனிநபர் மூலதன பொருளாதாரத்தின் சுதந்திரமான வளர்ச்சிக்கு உத்தரவாத மளிப்பதும், தனியார் சொத்தின் எல்லா உகந்த வடிவங்களை யும் பாதுகாப்பதும்தான் நாம் கோரும் புதிய ஜனநாயகத்தின் பணிகளாகும்.

படிப்பகம்

www.padippakam.com



தற்போதைய கட்டத்தில் டாக்டர் சன்னின் கோட்பாடு
கள் மற்றும் சீனப் புரட்சியின் அனுபவத்துக்கு இணங்க சீனத்
தேசியப் பொருளாதாரம் அரசுத் துறை, தனியார் துறை,
கூட்டுறவுத் துறை ஆகியவற்றோடு இணைக்கப்பட
வேண்டும். ஆனால் இங்கே அரசு நிச்சயமாக "ஒரு
சிலருக்கு மட்டுமே சொந்தமானதாக" இருக்கக் கூடாது ;
மாற்றாகத் தொழிலாளி வர்க்கத்தின் தலைமையின் கீழ்ச்
சாதாரண மக்கள் அனைவரும் பங்கு கொள்ளும்" ஒரு புதிய
ஜனநாயக அரசாக இருக்க வேண்டும்.

அதேபோல் புதிய ஜனநாயகக் கலாச்சாரம் "சாதாரண
மக்கள் அனைவரும் பங்கு கொள்ளும்" ஒன்றாக இருக்க
வேண்டும், அதாவது, அது தேசீய, விஞ்ஞான ரீதியான
மற்றும் வெகுஜன கலாச்சாரமாக இருக்க வேண்டும்; எந்தச்
சூழ்நிலையிலும் "ஒரு சிலரின் தனிப்பட்ட உடைமையான"
ஒரு கலாச்சாரமாக அது இருக்கக் கூடாது.

தற்போதைய கட்டத்திற்கு, அதாவது, முதலாளித்துவ-
ஜனநாயகப் புரட்சிக் கட்டம் முழுவதற்கும் கம்யூனிஸ்டு
களாகிய நாம் முன்வைக்கும் பொதுவான அல்லது அடிப்
படையான வேலைத் திட்டம் இத்தகையதே சோசலிசம்
மற்றும் கம்யூனிசத்திற்குமான நமது எதிர்கால உயர்ந்தபட்ச
வேலைத்திட்டத்திலிருந்து இது பிரித்துப் பார்க்க வேண்டிய
ஒரு குறைந்தபட்ச வேலைத்திட்டமாகும். இவ்வேலைத்
திட்டத்தை நிறைவேற்றுவதானது சீன அரசையும்
சமுதாயத்தையும் காலனிய, அரைக்காலனிய, அரைநிலப்
பிரபுத்துவ சமுதாயமாக இருப்பதிலிருந்து புதிய ஜனநாயக
சமுதாயமாக ஒரு அடி முன்னெடுத்து வைக்கச் செய்யும்.

நமது வேலைத்திட்டம் கோருகின்ற தொழிலாளி
வர்க்கத்தின் அரசியல் தலைமையும், தொழிலாளி



வர்க்கத்தின் தலைமையிலான பொருளாதாரத்தின் அரசு
மற்றும் கூட்டுறவுத் துறைகளும் சோசலிச அம்சங்களாகும்.
எனினும் இந்த வேலைத் திட்டம் நிறைவேற்றப்படுவது
சீனாவை ஒரு சோசலிச சமுதாயமாக மாற்றிவிடாது.

கம்யூனிஸ்டுகளாகிய நாம் நமது அரசியல் கருத்துகளை
மறைத்து வைப்பதில்லை நமது எதிர்கால அல்லது உயர்ந்த
பட்சத் திட்டமானது சீனாவைச் சோசலிசம் மற்றும்
கம்யூனிசத்திற்கு முன்னெடுத்துச் செல்லும் என்பது நிச்சயம்;
அதில் எள்ளளவும் சந்தேகமில்லை நமது கட்சி நமது
மார்க்சிய உலகக் கண்ணோட்டம் ஆகிய இரண்டும் இந்த
உன்னதமான எதிர்கால லட்சியத்தை, ஒப்பிடமுடியாத
ஒளிமயமும், வனப்பும் கொண்ட ஒரு எதிர்காலத்தைச் சுட்டிக்
காட்டுகின்றன. கட்சியில் சேருகின்ற ஒவ்வொரு
கம்யூனிஸ்டும் இரண்டு தெளிவான, வரையறுக்கப்பட்ட
குறிக்கோள்களை நெஞ்சில் கொண்டிருக்கிறார் —இப்போது
புதிய ஜனநாயகப் புரட்சி, எதிர்காலத்தில் சோசலிசமும்
கம்யூனிசமும்—இதற்காக அவர் கம்யூனிச விரோதிகளின்
குரோதத்தையும், (நாம் உறுதியுடன் எதிர்த்துப் போரிட
வேண்டிய அவர்களின் கீழ்த்தரமான சொற்களையும்,
அறியாமை மிக்க அவதூறுகளையும், வசைகளையும்,
கிண்டலையும் பொருட்படுத்தாது போரிடுவார். நல்ல
எண்ணம் கொண்ட சந்தேகம் கொண்டோரைப் பொறுத்த
வரை நாம் அவர்களுக்கு விஷயங்களை நல்லெண்ணத்துட
னும் பொறுமையுடனும் விளக்க வேண்டும் ; அவர்களைத்
தாக்கக் கூடாது. இவையனைத்தும் மிகத் தெளிவானவை
யும், திட்டவட்டமானவையும் ஐயத்திற்கிடமற்றவையுமாகும்.)

ஆனால் சீனாவிலுள்ள எல்லா கம்யூனிஸ்டுகளும்
கம்யூனிச அனுதாபிகளும் தற்போதைய கட்டத்தின் குறிக்
கோளை அடைய போராட வேண்டும்; அவர்கள் சீன
மக்களை அவர்களது பரிதாபமான காலனிய, அரைக்காலனிய

படிப்பகம்

www.padippakam.com



அரை நிலப்பிரபுத்துவ நிலையிலிருந்து மீட்பதற்கும், விவசாய வர்க்கத்தை விடுதலையாக்குவதை முக்கிய பணியாகக் கொண்டுள்ள தொழிலாளி வர்க்கத் தலைமையிலான ஒரு சீனாவை, டாக்டர் சன்-யாட்-சென்னின் புரட்சிகர மூன்று மக்கள் கோட்பாடுகளின் சீனாவை, சுதந்திரமான, விடுதலையான, ஜனநாயகமான, ஐக்கியமான, சுபீட்சமான, சக்திமிக்க ஒரு சீனாவைக் கட்டியெழுப்புவதற்கு அவர்கள் வெளிநாட்டு ஒடுக்கு முறையையும் நிலப்பிரபுத்துவ ஒடுக்கு முறையையும் எதிர்த்துப் போராட வேண்டும். நாம் இதுவரை உண்மையிலேயே செய்து வந்துள்ளதும் இதுதான். கம்யூனிஸ்டுகளாகிய நாம் சீன மக்களுடன் சேர்ந்து இந்தக் குறிக்கோளுக்காகக் கடந்த இருபத்து நான்கு ஆண்டுகளாக வீரத்துடன் போரிட்டு வந்துள்ளோம்.

(கம்யூனிஸ்ட் அல்லது கம்யூனிஸ்ட் அனுதாபி எவராவது சோசலிசத்தையும் கம்யூனிசத்தையும் பற்றிப் பேசிக் கொண்டு இந்தக் குறிக்கோளுக்காகப் போராடத் தவறினாரானல், இந்த முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சியைச் சிறுமைப் படுத்துவாரானால், எள்ளளவும் தளர்வுற்றாரானால் அல்லது வேகங்குறைந்தாரானால், இம்மியளவும் விசுவாசமின்மையோ உற்சாகமின்மையோ காண்பிப்பாரேயானால் அல்லது இதற்காகத் தன் இரத்தத்தைச் சிந்தவோ உயிரைக் கொடுக்கவோ தயங்குவாரேயானால், அப்போது அத்தகையவர் அறிந்தோ அறியாமலோ சோசலிசத்திற்கும் கம்யூனிசத்திற்கும் சிறிதளவிற்கோ பெருமளவிற்கோ துரோகம் செய்கிறார். அவர் நிச்சயமாக அரசியல் உணர்வுடையவராகவோ கம்யூனிசத்திற்காக உறுதியாகப் போராடக் கூடியவராகவோ இருக்க முடியாது.) ஜனநாயகக் கட்டத்தின் வழியாகத்தான் சோசலிசம் அடையப்பட முடியும் என்பது மார்க்சிய விதியாகும். சீனாவில் ஜனநாயகத்திற்கான போராட்டம் ஒரு நீண்ட போராட்டமாகும். ஐக்கியமுற்ற புதிய-ஜனநாயக



அரசொன்று இல்லாமலும், புதிய-ஜனநாயகப் பொருளாதாரத்தின் அரசுத்துறை, தனியார் முதலாளித்துவ துறை, கூட்டுறவுத் துறை ஆகியவை இல்லாமலும், தேசிய, விஞ்ஞான மற்றும் வெகுஜன கலாச்சாரமொன்றின் வளர்ச்சி இல்லாமலும், கோடிக்கணக்கான மக்களுடைய தனித்துவத்தின் விடுதலையும் விருத்தியும் இல்லாமலும்-சுருங்கக் கூறினால் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையிலான ஒரு புதிய ரகமான, பரிபூர்ணமான முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சி ஒன்று இல்லாமல்-காலனிய அரைக்காலனிய, நிலப்பிரபுத்துவ அமைப்பின் அழிவுக் குவியலின் மேல் சோசலிச சமுதாயம் ஒன்றைக் கட்டியெழுப்ப முயல்வது வெறும் பிரமையாகவே இருக்கும்.

முதலாளித்துவத்தைக் கண்டு அஞ்சுவதற்கு நேர்மாறாகக் கம்யூனிஸ்டுகள் ஏன் சில குறிப்பிட்ட சூழ்நிலைமைகளில் அதன் வளர்ச்சியை ஆதரிக்க வேண்டும் என்பதைச் சிலரால் புரிந்துகொள்ள முடிவதில்லை. நமது பதில் சுலபமானது. அந்நிய ஏகாதிபத்தியத்தினதும் நிலப்பிரபுத்துவத்தினதும் ஒடுக்கு முறையினிடத்தில் சிறு அளவு முதலாளித்துவம் வைக்கப்படுவது ஒரு முன்னேற்றம் மட்டுமல்ல, தவிர்க்க முடியாத ஒரு செயல் போக்குமாகும். அது தொழிலாளி வர்க்கத்திற்கும் முதலாளி வர்க்கத்திற்கும் நன்மை செய்கிறது; ஒருவேளை தொழிலாளி வர்க்கத்திற்குக் கூடுதலாக நன்மை செய்கிறதாகவுமிருக்கலாம். இன்று சீனாவில் அபரிமிதமாக இருப்பது உள்நாட்டு முதலாளித்துவம் அல்ல; அந்நிய ஏகாதிபத்தியமும் உள்நாட்டு நிலப்பிரபுத்துவமும் தான் நம்மிடம் உள்ளது. மிகச் சிறிதளவு முதலாளித்துவம்தான். சீன முதலாளித்துவ வர்க்கத்தின் சில பிரமுகர்கள் முதலாளித்துவத்தின் வளர்ச்சியைக் கோருவதற்கு வெட்கமடைந்து அதை ஜாடைமாடையாகக்

படிப்பகம்

www.padippakam.com



குறிப்பிடுவது விநோதமாக உள்ளது. சீனா அவசியமான அளவிற்கு முதலாளித்துவத்தின் வளர்ச்சியை அனுமதிக்க வேண்டுமென்பதை மொட்டையாக மறுப்பவர்கள், மேலும் ஒரே எட்டில் சோசலிசத்தை அடைவது பற்றியும் மூன்று மக்கள் கோட்பாடுகளின் சோசலிசப் பணிகளை, "ஒரே அடியில் நிறைவேற்றுவதைப் பற்றியும் பேசுபவர்கள் உள்ளனர். இந்தக் கருத்துகள், சீனத்தேசிய முதலாளிகளின் பலவீனத்தைப் பிரதிபலிக்கிறது அல்லது, பெரும் நிலப்பிரபுக்கள் மற்றும் பெரும் முதலாளிகளின் தரப்பிலான பச்சோந்தித்தனமான தந்திரத்தையே காட்டுகிறது என்பது தெளிவு. சமுதாய வளர்ச்சியின் மார்க்சிய விதிகளிலிருந்து நமக்குத் தெரிந்தவரை, கம்யூனிஸ்டுகளாகிய நாம் சீனாவில் புதிய ஜனநாயக அரசு அமைப்பின் கீழ்ச் சமுதாய முன்னேற்றத்தின் நலனுக்காகப் பொருளாதாரத்தின் அரசுத் துறையின் அபிவிருத்தியுடனும் உழைக்கும் மக்களால் நடத்தப்படும் தனியார், மற்றும் கூட்டுறவுப் பிரிவுகளின் அபிவிருத்தியோடும் கூடவே தனிநபர் முதலாளித்துவத் துறையின் அபிவிருத்தியை (அது மக்களின் வாழ்க்கையை ஆதிக்கம் செய்யாத பட்சத்தில்) முன்னேற்றுவதும் அவசியமாயிருக்கும் என்பதைத் தெளிவாகப் புரிந்து கொண்டுள்ளோம். கம்யூனிஸ்டுகளாகிய நாங்கள் வெற்றுப் பேச்சோ, ஏமாற்றுத் தந்திரங்களோ எங்களைக் குழப்பிட அனுமதிப்பதில்லை.

கம்யூனிஸ்டுகளாகிய நாம். "மூன்று மக்கள் கோட்பாடுகளே இன்று சீனாவுக்குத் தேவையானவை யாகையால் நமது கட்சி அவை பூரணமாக நிறைவேற்றப்படுவதற்குப் போராடத் தயாராக உள்ளது," எனப் பிரகடனம் செய்யும் போது நாம் உண்மையாகத்தான் பேசுகிறோமா என்பதில் ஐயம் கொள்பவர்கள் சிலர் உள்ளனர். இது அவர்கள்,



டாக்டர் சன்-யாட்-சென் 1924 இல் கோமிங்டாங்கின் முதலாவது தேசிய மாநாட்டின் கொள்கையறிக்கையில் எடுத்துரைத்து நாம் ஏற்றுக்கொண்டுள்ள மூன்று மக்கள் கோட்பாடுகளின் அடிப்படைக் கருத்துகள் தற்போதைய கட்டத்திற்கான நமது கட்சியினுடைய வேலைத் திட்டத்தின், அதாவது, நமது குறைந்தபட்ச வேலைத் திட்டத்தின் சிற்சில அடிப்படைக் கருத்துகளுக்கு இசைவாக உள்ளன என்பதைப் புரிந்து கொள்ளத் தவறுவதன் விளைவாகும். டாக்டர் சன்-யாட்-சென்னின் இந்த மூன்று மக்கள் கோட்பாடுகள் தற்போதைய கட்டத்திற்கான நமது கட்சியின் வேலைத் திட்டத்தின் சிற்சில அடிப்படைக் கருத்துகளுக்கு மட்டுமே இசைவாக உள்ளன. அனைத்திலும் அல்ல என்பது சுட்டிக் காட்டப்பட வேண்டும். உண்மையிலேயே குறிப்பாக நமது கட்சியின் புதிய ஜனநாயகத் தத்துவமும், வேலைத்திட்டமும் நடைமுறையும் டாக்டர் சன்னின் மரணத்துக்குப்பின் இருபது ஆண்டுகளில் சீனப்புரட்சியின் வளர்ச்சியோடு பெருமளவு வளர்ச்சியடைந்துள்ளதாலும், இன்னும் மேற்கொண்டு வளர்ச்சியுறுமாகையாலும் டாக்டர் சன்னின் கோட்பாடுகளை விட நமது கட்சியின் புதிய ஜனநாயக வேலைத்திட்டம் மிக அதிகம் முழுமை பெற்றது ஆகும். இருப்பினும் சாராம்சத்தில் இந்த மூன்று மக்கள் கோட்பாடுகள், முந்தைய, பழைய மூன்று மக்கள் கோட்பாடுகளிலிருந்து வேறுபட்ட ஒரு புதிய ஜனநாயக வேலைத் திட்டமாகும்; இயற்கையாகவே அவை "சீனாவுக்கு இன்று தேவையானவை" இயற்கையாகவே "நமது கட்சி அவற்றை முழுமையாக நிறைவேற்றுவதற்கு போராடத் தயாராக உள்ளது" கம்யூனிஸ்டுகளாகிய நமக்கு நமது கட்சியின் குறைந்த பட்ச வேலைத் திட்டத்திற்கான போராட்டமும் டாக்டர் சன்னின் புரட்சிகர, அல்லது, புதிய மூன்று மக்கள் கோட்பாடுகளுக்கான போராட்டமும் (எல்லா அம்சங்களிலும் இல்லாவிடினும்) அடிப்படையில்

படிப்பகம்

www.padippakam.com



ஒரே போராட்டமே. ஆகவே கடந்த காலத்திலும் தற்போதும் போலவே எதிர்காலத்திலும் சீனக் கம்யூனிஸ்டுகள் புரட்சிகர மூன்று மக்கள் கோட்பாடுகளை மிகவும் உண்மையாக, மிகத் தீர்க்கமாகச் செயல்படுத்துவோராக இருப்பர்.

அதிகாரத்துக்கு வந்ததும் கம்யூனிஸ்ட் கட்சி ஒருவேளை ரஷியாவின் உதாரணத்தைப் பின்பற்றி தொழிலாளி வர்க்கச் சர்வாதிகாரத்தையும் ஒரு கட்சி அமைப்பொன்றையும் ஸ்தாபித்து விடுமெனச் சிலர் சந்தேகிக்கின்றனர். நமது பதில், ஜனநாயக வர்க்கங்களின் கூட்டணி ஒன்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு புதிய ஜனநாயக அரசு, தொழிலாளி வர்க்கச் சர்வாதிகாரத்தின் கீழான ஒரு சோஷலிச அரசிலிருந்து கோட்பாட்டில் வேறுபட்டது என்பதாகும். நமது புதிய ஜனநாயக அமைப்பு தொழிலாளி வர்க்கத்தினதும் கம்யூனிஸ்ட் கட்சியினதும் தலைமையின் கீழ்க் கட்டியெழுப்பப்படும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை; ஆனால் புதிய ஜனநாயகக் கட்டம் முழுவதிலும் சீனா ஒரு வர்க்கச் சர்வாதிகாரம் ஒன்றையும் ஒரு கட்சி அரசாங்கம் ஒன்றையும் கொண்டிருப்பது அசாத்தியம்; ஆகவே அதற்கு முயற்சி செய்யக் கூடாது. கம்யூனிஸ்ட் கட்சியைக் குறித்து அவர்களின் கண்ணோட்டம் ஒத்துழைப்பதாகவும், விரோதமாக இல்லாமலும் இருக்கும் பட்சத்தில், எல்லா அரசியல் கட்சிகளுடனும், சமுதாயக் கோஷ்டிகளுடனும் தனிநபர்களுடனும் ஒத்துழைக்க நாம் மறுப்பதற்கு எக்காரணமும் இல்லை. ரஷிய அமைப்பு ரஷிய வரலாற்றால் உருவாக்கப்பட்டுள்ளது. ரஷியாவில் மனிதனை மனிதன் சுரண்டுவது ஒரு சமூக அமைப்பென்ற அளவில் ஒழிக்கப்பட்டு, மிகவும் புதிய ரகமான ஜனநாயகத்தின், அதாவது, சோசலிசத்தின் அரசியல், பொருளாதார, கலாச்சார அமைப்பு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது; சோசலிச-விரோதக் கட்சிகள் அனைத்தையும் மக்கள் உதறித்



தள்ளிவிட்டு, போல்ஷ்விக் கட்சியை மட்டுமே ஆதரிக்கின்றனர். இவை அனைத்தும் ரஷிய அமைப்பை உருவாக்கியுள்ளன; அது அங்கே முற்றிலும் அவசியமானதாகவும் நியாயமானதாகவும் இருக்கிறது. ஆனால் போல்ஷ்விக் கட்சி ஒன்று மட்டும் அரசியல் கட்சியாக உள்ள ரஷியாவில் அரசு அதிகார அங்கங்களில் கடைபிடிக்கப்படும் முறை இன்னமும் தொழிலாளர், விவசாயிகள் மற்றும் அறிவு ஜீவிகளின் கூட்டணியும் கட்சி அங்கத்தினர்களினதும் கட்சியில் இல்லாதவர்களினதும் கூட்டணியுமான ஒரு அமைப்பே ஆகும்; அரசாங்க அங்கங்களில் அது தொழிலாளி வர்க்கமும் போல்ஷ்விக்குகளும் மட்டுமே பணியாற்றக் கூடிய ஒரு அமைப்பு அல்ல. தற்போதைய கட்டத்திற்கான சீன அமைப்பு சீன வரலாற்றின் தற்போதைய கட்டத்தால் உருவாக்கப்பட்டு வருகிறது. இன்னும் ஒரு நீண்ட காலத்திற்கு ஒரு விசேஷ வடிவமுள்ள அரசு, அரசியல் அதிகாரம் ரஷிய அமைப்பிலிருந்து வேறுபட்ட ஆனால் நமக்கு முற்றிலும் அவசியமான, நியாயமான வடிவமான, அதாவது ஜனநாயக வர்க்கங்களின் கூட்டணி ஒன்றை அடிப்படையாகக் கொண்ட புதிய ஜனநாயக அரசு, அரசியல் அதிகார வடிவம் இருந்து வரும்.

### *நமது குறிப்பான வேலைத்திட்டம்*

நமது கட்சி ஒவ்வொரு காலகட்டத்திற்கும் இந்தப் பொது வேலைத் திட்டத்தின் அடிப்படையிலான ஒரு குறிப்பான வேலைத் திட்டத்தையும் பெற்றிருக்க வேண்டும். நமது பொதுவான புதிய ஜனநாயக வேலைத் திட்டம் முதலாளித்துவ-ஜனநாயகப்புரட்சிக் கட்டம் முழுவதற்கும், அதாவது பல பத்தாண்டுகளுக்கு மாற்றமடையாமல் இருந்து வரும். ஆனால் இந்தக் கட்டத்தின்போது அவ்வப்போது சூழ்நிலைகள் மாறியுள்ளன—அல்லது மாறுகின்றன; எனவே அவற்றிற்கிணங்க நாம் நமது குறிப்பான வேலைத்திட்டத்தை மாற்றவேண்டியிருப்பது இயற்கையே. உதாரணமாக நமது பொதுவான புதிய—ஜனநாயக வேலைத் திட்டமானது

படிப்பகம்

www.padippakam.com



வடக்குப் படையெடுப்பு, விவசாயப் புரட்சிகர யுத்தம் மற்றும் ஜப்பானிய எதிர்ப்பு யுத்த காலகட்டங்களின்போது அப்படியே இருந்து வந்துள்ளது; ஆனால் இந்த மூன்று காலகட்டங்களிலும் நமது நண்பர்களும் பகைவர்களும் அப்படி அப்படியே இல்லை என்பதால் நமது குறிப்பான வேலைத்திட்டத்தில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

சீன மக்கள் இப்போது தாங்கள் பின்வரும் சூழ்நிலையில் இருப்பதைக் காண்கின்றனர் :-

(1) ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்கள் இன்னமும் தோற்கடிக்கப்படவில்லை.

(2) தேசிய ஐக்கியத்தை அடையவும், ஜப்பானிய எதிர்ப்புச் சக்திகள் எல்லாவற்றையும் விரைவாக அணி திரட்டி ஐக்கியப்படுத்தவும், நேச நாடுகளுடன் ஒத்துழைத்து ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களைத் தோற்கடிக்கவும் வேண்டிச் சீன மக்கள் ஒரு ஜனநாயக மாற்றத்திற்காக ஒருமித்து அழைப்பது அவசரத் தேவையாக உள்ளது.

(3) கோமிங்டாங் அரசாங்கம் தேசிய ஐக்கியத்தைச் சீர்குலைக்கிறது ; அத்தகைய ஜனநாயக மாற்றத்திற்குத் தடங்கல் செய்கிறது

இந்தச் சூழ்நிலைமைகளில் நமது குறிப்பான வேலைத் திட்டம் என்ன? அல்லது வேறு வார்த்தைகளில் சொன்னால் மக்களின் உடனடிக் கோரிக்கைகள் என்ன?

பின்வருபவை தகுந்த, குறைந்தபட்சக் கோரிக்கைகள் என நாம் கருதுகிறோம்.

நேச நாடுகளுடன் ஒத்துழைத்து ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களை முற்றாகத் தோற்கடிப்பதற்கும் சர்வதேச சமாதானத்தை நிலைநாட்டுவதற்கும் இருக்கின்ற சக்திகளையெல்லாம் அணிதிரட்டுவது ;



கோமிங்டாங் ஒருகட்சிச் சர்வாதிகாரத்தை ரத்து செய்து ஒரு ஜனநாயகக் கூட்டு அரசாங்கத்தையும் கூட்டு உயர் இராணுவ ஆணை அமைப்பையும் நிறுவுவது ;

மக்களுக்கு எதிராக உள்ள மற்றும் தேசிய ஐக்கியத்தைச் சீர்குலைக்கின்ற ஜப்பானிய சார்பு சக்திகளையும், பாசிசவாதிகளையும், தோல்விவாதிகளையும் தண்டித்து அதன் மூலம் தேசிய ஐக்கியத்தை உருவாக்கத் துணை செய்வது ;

உள்நாட்டுப் போர் அபாயத்தைச் சிருஷ்டிக்கும் பிற்போக்காளர்களைத் தண்டித்து, அவ்வாறாக உள்நாட்டுச் சமாதானத்தை உறுதிபடுத்த உதவுவது ;

தேசத் துரோகிகளைத் தண்டிப்பது, எதிரியிடம் சரணடையும் தளகர்த்தர்களுக்கு எதிராகத் தண்டிக்கும் நடவடிக்கைகள் எடுப்பது, ஜப்பானியர்களுக்கான ஏஜெண்டுகளைத் தண்டிப்பது;

பிற்போக்கு ரகசியப் பணித் துறையை கலைத்துக் விடுவது, அதன் எல்லா ஒடுக்குமுறை நடவடிக்கைகளையும் நிறுத்திவிடுவது கைதி முகாம்களை ஒழிப்பது ;

பேச்சுச் சுதந்திரம், பத்திரிகைச் சுதந்திரம், கூட்டம் கூடும் சுதந்திரம், சங்கம் அமைக்கும் சுதந்திரம், அரசியல் நம்பிக்கை மற்றும் மத நம்பிக்கைக்கான சுதந்திரம், தனிநபர் சுதந்திரம் ஆகியவற்றை அடக்குவதை நோக்கமாகக் கொண்ட பிற்போக்குச் சட்டங்களையும் விதிகளையும் ரத்து செய்து, மக்களுக்குப் பூரண குடி உரிமைகளை உத்தரவாதம் செய்வது ;

எல்லா ஜனநாயகக் கட்சிகளுடைய மற்றும் கோஷ்டிகளுடைய சட்ட ரீதியான அந்தஸ்த்தை அங்கீகரிப்பது ;

தேசபக்த அரசியல் கைதிகள் அனைவரையும் விடுதலை செய்வது ;

படிப்பகம்

www.padippakam.com



சீனாவின் விடுதலையாக்கக்கப்பட்ட பகுதிகளைச் சுற்றி வளைத்துத் தாக்கிக் கொண்டிருக்கும் துருப்புகளை யெல்லாம் வாபஸ் பெற்று அவற்றை ஜப்பானிய எதிர்ப்புப் போர்முனைக்கு அனுப்புவது ;

சீனாவின் விடுதலையாக்கப்பட்ட பகுதிகளின் ஜப்பானிய எதிர்ப்பு ஆயுதப் படைகளையும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அரசாங்கங்களையும் அங்கீகரிப்பது ;

விடுதலையாக்கப்பட்ட பகுதிகளையும் அவற்றின் ஆயுதப் படைகளையும் ஸ்திரப்படுத்துவதும் விரிவு படுத்துவதும், இழந்த பிரதேசம் முழுவதையும் திரும்பப் பெறுவது ;

ஜப்பானியர் கைப்பற்றியுள்ள பகுதிகளிலுள்ள மக்களுக்கு ஆயுதமேந்திய எழுச்சிகள் நடத்த ரகசிய ஆயுதப் படைகளை, அமைக்க உதவுவது.

சீன மக்கள் ஆயுத பாணிகளாவதற்கும், அவர்களை தங்கள் வீடுகளையும் நாட்டையும் பாதுகாத்துக் கொள்ளவும் அனுமதிப்பது.

இடையறாத சண்டைகளில் தோற்பவையும், மக்களை ஒடுக்குபவையும் அதன் கீழ் நேரடியாக இல்லாத படைகளைப் பாரபட்சமாக நடத்துபவையுமான கோமிங்டாங் உயர் ஆணைப் படைதளபதி கீழான சேனைகளின் அரசியல் மற்றும் இராணுவத்தை மாற்றியமைப்பது, நாசகரமானத் தோல்விகளுக்குப் பொறுப்பான தளபதிகளைத் தண்டிப்பது ;

அதிகாரிகளையும் படை வீரர்களையும் திரட்டும் முறையையும், அவர்களின் வாழ்நிலைமைகளையும் அபிவிருத்தி செய்வது ;

போர் முனையிலுள்ள அதிகாரிகளும் போர் வீரர்களும் குடும்பக் கவலைகள் அற்று இருக்கும் வகையில் ஜப்பானிய எதிர்ப்புப் போரில் ஈடுபட்டுள்ள போர் வீரர்களின் குடும்பங்களைச் சலுகைகளுடன் நடத்துவது;



ஊனமுற்ற படை வீரர்களையும் நாட்டுக்காகத் தம் உயிரை தியாகம் செய்த படைவீரர்களின் குடும்பங்களையும் சலுகைகளுடன் நடத்துவதும், படையிலிருந்து நீக்கப்பட்ட படை வீரர்களுக்குக் குடியமரவும் உழைத்து வாழவும் உதவி செய்வது;

யுத்தத்தை நடத்துவதற்கு உதவும் வகையில் போருக்கான தொழில்களை அபிவிருத்தி செய்வது;

நேச நாடுகளிடமிருந்து பெறப்படும் இராணுவ மற்றும் நிதி உதவியை ஜப்பானிய—எதிர்ப்பு யுத்தத்தில் போர் புரியும் எல்லா சேனைகளுக்கும் பாரபட்சமின்றி பங்கிட்டளிப்பது;

ஊழல் புரியும் அதிகாரிகளை தண்டித்து தூய்மையான அரசாங்கத்தை அமைப்பது;

நடுநிலை மற்றும் கடைநிலை அரசாங்க ஊழியர்களின் ஊதியத்தைக் கூட்டுவது;

சீன மக்களுக்கு ஜனநாயக உரிமைகளளிப்பது;

அடக்குமுறை செய்கின்ற **பாஓ-சியா**[6] அமைப்பை ரத்துச் செய்வது;

யுத்த அகதிகளுக்கும் இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் நிவாரணமளிப்பது.

சீனாவின் இழந்த பிரதேசங்கள் மீட்கப்பட்ட பின்னர், எதிரி கைப்பற்றியதால் துன்புற்ற மக்களுக்கு விரிவான நிவாரணமளிக்கக் கணிசமானநிதி ஒதுக்குவது;

கொள்ளைக் காரத்தனமான வரிகளையும் பலதரப்பட்ட வசூல்களையும் ரத்துச் செய்து, ஒருமுகப்படுத்தப்பட்ட முற்போக்கான வரி ஒன்றை ஏற்படுத்துவது;



படிப்பகம்

www.padippakam.com



விவசாய உற்பத்தி அதிகரிக்க உதவும் வகையில் கிராமிய சீர்த்திருத்தங்களை புகுத்துவது, குத்தகை மற்றும் வட்டியைக் குறைப்பது, குத்தகைதாரர்களின் உரிமைகளுக்குத் தக்க பாதுகாப்பு அளிப்பது, வறுமையிலுள்ள விவசாயிகளுக்குக் குறைந்த வட்டிக் கடன்கள் கொடுப்பது, விவசாயிகள் ஸ்தாபனரீதியாக அணிதிரள உதவுவது;

அதிகார வர்க்க மூலதனத்தைச் சட்டவிரோதமாக்குவது;

தற்போதைய பொருளாதாரக் கட்டுப்பாட்டுக் கொள்கையை ஒழித்துக் கட்டுவது;

கட்டுக்கடங்காத பணவீக்கத்தைத் தடுத்து நிறுத்துவது, வானளாவ உயர்ந்து கொண்டிருக்கும் விலைவாசிகளைக் கட்டுப்படுத்துவது;

தனியார் தொழிலுக்கு உதவிசெய்வது, அவை கடன்கள் பெறவும், மூலப் பொருள்களை வாங்குவதற்கும், தனது உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்யவும் வசதிகள் செய்து தருவது;

தொழில் உற்பத்தி பெருகும் வகையில் தொழிலாளர்களின் வாழ்நிலையை மேம்படுத்துவது, வேலையில்லாதோருக்கு நிவாரணம் அளிப்பது, தொழிலாளர்கள் ஸ்தாபன ரீதியாக அணிதிரள உதவுவது;

கல்வியில் கோமிங்டாங் கொள்கைத் திணிப்பை ஒழித்து தேசீய, விஞ்ஞான மற்றும் வெகுஜன கலாச்சாரத்தையும் கல்வியையும் முன்னேற்றுவது;

கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த ஆசிரியர்கள் மற்றும் இதர உறுப்பினர்களின் வாழ்வுக்கு உத்தரவாதமளிப்பது, கல்விச் சுதந்திரத்துக்கு உத்தரவாதமளிப்பது.



இளைஞர், பெண்கள் மற்றும் குழந்தைகளின் நலன்களைப் பாதுகாப்பது, இளம் மாணவ அகதிகளுக்கு உதவி வழங்குவது, யுத்த முயற்சிகளுக்கும், சமூக முன்னேற்றத்துக்கும் பயனுள்ள எல்லா பணிகளிலும் பங்கெடுக்கும் வகையில் இளைஞர்களும் பெண்களும் ஸ்தாபனரீதியாக அணிதிரள உதவுவது, ஆண்களுக்கும் பெண்களுக்கும் திருமண சுதந்திரத்தையும் சமத்துவத்தையும் உறுதிப்படுத்துவது, இளைஞர்களுக்கும் குழந்தைகளுக்கும் உபயோகமான கல்வியளிப்பது;

சீனாவிலுள்ள சிறுபான்மை தேசிய இனங்களை இன்னும் நல்லபடியாக நடத்துவது, அவற்றுக்குச் சுயாட்சி உரிமையளிப்பது;

வெளி நாட்டில் வாழும் சீனர்களின் நலன்களைப் பாதுகாப்பது, தாய்நாடு திரும்பியவர்களுக்கு உதவி செய்வது;

ஜப்பானிய அடக்குமுறைக்குத் தப்பி சீனாவிற்கு ஓடிவந்துள்ள அந்நிய தேசத்தவர்களைப் பாதுகாப்பது, ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிரான அவர்களது போராட்டத்தை ஆதரிப்பது:

சீன—சோவியத் உறவுகளை மேம்படுத்துவது.

இந்தக் கோரிக்கைகளை அடைவதற்கு மிக முக்கியமான காரியம் என்னவெனில், கோமிங்டாங் ஒரு-கட்சிச் சர்வாதிகாரம் உடனடியாக ரத்து செய்யப்படுவதும்; ஜனநாயக மத்திய அரசாங்கம் ஒன்று அதாவது, தேசந் தழுவிய ஆதரவுடையதும் எல்லா ஜப்பானிய எதிர்ப்பு கட்சிகளுடைய மற்றும் கட்சி மற்றும் கட்சிச் சார்பற்றோர்களது பிரதிநிதிகளை உள்ளடக்குவதுமான கூட்டுஅரசாங்கம் ஒன்று நிறுவப்படுவதுமாகும். இந்த முன் தேவை உண்டாகாமல் கோமிங்டாங் பகுதிகளிலும், ஆகவே முழுமையாக நாட்டிலும்,

படிப்பகம்

www.padippakam.com



உண்மையான மாற்றமெதையும் ஏற்படுத்துவது அசாத்தியம்.

இந்தக் கோரிக்கைகள் சீன வெகுஜனங்களின் விருப்பங்களையும், நேச நாடுகளிலுள்ள பரந்த பிரிவுகளான ஜனநாயக பொதுஜன அபிப்பிராயத்தையும் எடுத்துரைக்கின்றன.

ஜப்பானிய—எதிர்ப்பு ஜனநாயகக் கட்சிகள் அனைத்தும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு குறைந்தபட்ச குறிப்பான வேலைத்திட்டம் ஒன்று மிகவும் இன்றியமையாதது; மேலே சுருக்கமாக எடுத்துரைக்கப்பட்ட வேலைத்திட்டத்தின் அடிப்படையில் அவற்றுடன் கலந்தாலோசிக்க நாம் தயாராயுள்ளோம். வெவ்வேறு கட்சிகள் வெவ்வேறு கோரிக்கைகளைக் கொண்டிருக்கலாம்; ஆனால் அனைத்தும் இணக்கமான ஒரு பொதுவான வேலைத்திட்டத்தை அடைய வேண்டும்.

கோமிங்டாங் பகுதிகள் சம்பந்தப்பட்டவரை இத்தகையதொரு வேலைத்திட்டம் இன்னும் மக்களின் ஒரு கோரிக்கையாக இருக்கும் கட்டத்தில்தான் உள்ளது; ஜப்பானியர் கைப்பற்றி வைத்திருக்கும் பகுதிகள் சம்பந்தப்பட்டவரை இது, ஆயுதந் தரித்த எழுச்சிகளுக்காக இரகசிய ஆயுதப் படைகள் அணிதிரட்டப்படுவதென்ற அம்சத்தைத் தவிர மற்றவற்றின் அமுலாக்கம் அப்பகுதிகள் மீட்கப்படும் வரை காத்திருக்க வேண்டிய வேலைத்திட்டம்; விடுதலையாக்கப்பட்ட பகுதிகள் சம்பந்தப்பட்டவரை இது ஏற்கனவே நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளதும், நடைமுறைப் படுத்தப்பட வேண்டியதுமான ஒரு வேலைத் திட்டம்.

மேலே கூறப்பட்ட சீன மக்களுடைய உடனடி கோரிக்கைகள் அல்லது குறிப்பான வேலைத் திட்டமானது மேலும் விளக்கம் தரவேண்டிய போருக்குமுந்தைய மற்றும் போருக்குப் பிந்திய பல முக்கியமான பிரச்சினைகளுடன் சம்பந்தப்பட்டுள்ளது. கீழேயுள்ள பிரச்சினைகளை விளக்கு



கையில் கோமிங்டாங்கின் பிரதான ஆளும் கும்பல் கொண்டிருக்கும் தவறான கருத்துக்களில் சிலவற்றை நாம் விமர்சிப்போம்; அதே நேரத்தில் இதர மக்களால் கிளப்பப்படுகின்ற சில கேள்விகளுக்கும் பதிலளிப்போம்.

**1. ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களை முற்றாக அழிப்பது, இடைவழிச் சமரசம் எதையும் அனுமதிக்கக் கூடாது.**

ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களை நிபந்தனையின்றி சரணடையும்படி செய்ய வேண்டுமென கெய்ரோ மாநாடு சரியாக முடிவு செய்தது. ஆனால் ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்கள் இப்போது சமாதான சகவாழ்வு ஒன்றிற்காக திரை மறைவில் வேலை செய்கையில் கோமிங்டாங் அரசாங்கத்தில் உள்ள ஜப்பானிய - சார்பு சக்திகள் நான்கிங் பொம்மை அரசாங்கத்தின் மூலமாக ஜப்பானிய ரகசிய தூதர்களுடன் கூடுகின்றன; இதற்கு முற்றுப்புள்ளி வைக்கப்படவில்லை. எனவே இடைவழிச் சமரசமொன்றின் அபாயம் இன்னும் முற்றாகக் கடந்துவிடவில்லை. கெய்ரோ மாநாடு மற்றொரு நல்ல முடிவையும், அதாவது, வடகிழக்கு மாகாணங்கள் நான்கும் தைவானும் பெங்ஹு தீவுகளும் சீனாவுக்குத் திரும்பத் தரப்பட வேண்டுமென்ற முடிவையும் எடுத்தது. ஆனால் கோமிங்டாங் அரசாங்கத்தின் தற்போதைய கொள்கைகள் காரணமாக அது யாலு நதி வரையும் போரிட்டு முன்னேறி நமது இழக்கப்பட்ட பிரதேசம் முழுவதையும் மீட்குமென நம்பியிருப்பது சாத்தியமல்ல. இந்தச் சூழ்நிலைகளில் சீன மக்கள் என்ன செய்யவேண்டும்? அவர்கள் கோமிங்டாங் அரசாங்கம் ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களை முற்றாக அழிக்க வேண்டுமெனக் கோர வேண்டும். இடைவழிச் சமரசமெதையும் அனுமதிக்கக் கூடாது. சமரசத்துக்கான சதிகள் எல்லாம் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். கோமிங்டாங் அரசாங்கம் செயலற்ற எதிர்ப்பாகிய அதன் தற்போதைய கொள்கையை மாற்றவும் அதன் ராணுவ பலம் முழுவதையும் ஜப்பானுக்கு

படிப்பகம்

www.padippakam.com



எதிரான தீவிரயுத்தத்தில் ஈடுபடுத்தவும் வேண்டுமெனச் சீன மக்கள் கோர வேண்டும். அவர்கள் தங்கள் சொந்த ஆயுதப்படைகளை - எட்டாம் வழிச் சேனையையும், புதிய நான்காவது சேனையையும், மக்களின் பிற ஆயுதப்படைகளையும் - விரிவுபடுத்தவும், விரோதி எங்கெல்லாம் எட்டியுள்ளானோ அங்கெல்லாம் தம் சொந்த முன் முயற்சியில் விரிந்து பரந்த ரீதியில் ஜப்பானிய - எதிர்ப்பு ஆயுதப் படைகளை விருத்தி செய்யவும், நேச நாடுகளின் நேரடியான ஒத்துழைப்புடன் போர்செய்து இழக்கப்பட்ட பிரதேசம் முழுவதையும் மீட்கத் தயாராகவும் வேண்டும். எந்தச் சூழ்நிலையிலும் அவர்கள் தங்கள் நம்பிக்கையை கோமிங்டாங் மீது மட்டுமே வைத்துவிடக் கூடாது ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களைத் தோற்கடிப்பது சீன மக்களின் புனித உரிமையாகும். பிற்போக்காளர்கள் இந்த உரிமையை அவர்களிடமிருந்து பறித்துவிடவோ, அவர்களது ஜப்பானிய எதிர்ப்பு நடவடிக்கைகளை அடக்கவோ, அவர்களின் பலத்தை வேரறுக்கவோ முயன்றால் அவர்களுக்கு எடுத்துச் சொல்லி இணங்க வைக்க முயற்சி செய்வது, அது பயன்தரா விட்டால் சீன மக்கள் தங்கள் தற்காப்புக்காக உறுதியுடன் திருப்பித் தாக்க வேண்டும். ஏனெனில், சீன பிற்போக்காளர்களின் தரப்பிலான இத்தகைய தேசத் துரோகச் செயல்கள் ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களுக்கு உதவியாகவும், உடந்தையாகவும் இருப்பதே ஆகும்.

## 2. கோமிங்டாங் ஒரு கட்சி சர்வாதிகாரத்தை ஒழித்து ஜனநாயகக் கூட்டு அரசாங்கமொன்றை நிறுவுதல்

ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களைத் தோற்கடிக்க நாடு முழுக்க ஜனநாயக சீர்திருத்தங்கள் செய்வது அவசியம். எனினும், கோமிங்டாங் ஒருகட்சி சர்வாதிகாரம் ஒழிக்கப்படாமலும் ஒரு ஜனநாயகக் கூட்டரசாங்கம் நிறுவப்படாமலும் இதைச் செய்வது சாத்தியமில்லை.

கோமிங்டாங் ஒருகட்சி சர்வாதிகாரம் என்பது உண்மையில் கோமிங்டாங்கிற்குள் உள்ள மக்கள் - விரோத கும்பலின் சர்வாதிகாரமே ஆகும். இந்தச் சர்வாதிகாரமே சீன தேசிய ஐக்கியத்தைச் சீர்குலைக்கிறது; கோமிங்டாங் போர் முனைகளிலான தோல்விகளுக்குக் காரணமாகவும் உள்ளது; இது தான் சீன மக்களின் ஜப்பானிய-எதிர்ப்பு சக்திகளை அணி திரட்டி ஒன்றுபடுத்துவதற்குள்ள அடிப்படையான தடங்கலாகவும்உள்ளது. சீனமக்கள் ஜப்பானிய எதிர்ப்புயுத்தத்தின் எட்டு ஆண்டுகால கசப்பான அனுபவத்தின் மூலம் இந்தச் சர்வாதிகாரத்தின் தீமைகளை முழுமையாக உணர்ந்துள்ளனர்; இதுஉடனடியாக ஒழிக்கப்பட வேண்டுமென அவர்கள் கோருவது இயற்கையே. இந்தப் பிற்போக்குச் சர்வாதிகாரமே உள்நாட்டுப்போரை வளர்க்கிறது. இது உடனடியாக ஒழிக்கப்படாவிட்டால் மீண்டும் அவர்கள்மீது உள்நாட்டுப்போரின் நாசத்தைக் கொண்டு வந்து விடும்.

மக்கள்-விரோத சர்வாதிக்காரத்தை ஒழிப்பதற்கான சீன மக்களின் குரல் அத்தனை பரவலாகவும் ஓங்கியும் ஒலிப்பதால் கோமிங்டாங் அதிகாரிகளே, "அரசியல் காபந்தின் விரைவான முடிவுக்கு" பகிரங்கமாக இணக்கம் தெரிவிக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்;இது இந்த "அரசியல் காபந்து", அல்லது ஒரு கட்சி சர்வாதிகாரம் எவ்வளவு தூரம் பொது மக்கள் ஆதரவையும் நன்மதிப்பையும் இழந்துவிட்டதென்பதைக் காட்டுகிறது; "அரசியல் காபந்து" அல்லது ஒரு கட்சி சர்வாதிகாரம் எந்த நன்மையும் உடையதென்றோ, அது ஒழிக்க அல்லது "முடிவுக்குக் கொண்டு வரப்படக் கூடாது" என்றோ இன்னும் கூறத் துணியும் நபர் யாரும் சீனாவில் இல்லை; இது நிலைமையில் பெரும் மாற்றமொன்றைக் குறிக்கிறது.

அது "முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும்" என்பது திட்டவட்டமானதும் எள்ளளவு ஐயத்திற்கும் இடமற்றதாகும். ஆனால் அது எவ்வாறு செய்யப்பட வேண்டும் என்பதில் அபிப்பிராயங்கள் மாறுபடுகின்றன. சிலர் அதனை உடனே முடிவுக்குக் கொண்டு வந்து தற்காலிக ஜனநாயக கூட்டரசாங்கம் ஒன்றை நிறுவவேண்டும் என்



படிப்பகம்

www.padippakam.com



கின்றனர். வேறு சிலர், சற்று பொறுங்கள் என்றும் ''தேசிய சபை'' ஒன்றைக் கூட்டி ''அரசு அதிகாரத்தை திரும்ப மக்களிடம் கொடு'' என்றும் ஒரு கூட்டு அரசாங்கத்திடம் அல்ல என்றும் கூறுகின்றனர்.

இதன் அர்த்தம் என்ன?

இதன் அர்த்தம் காரியங்களைச் செய்ய நேர்மையான வழி, நேர்மையற்ற வழி என இரு வழிகள் உள்ளன என்பதாகும்.

முதலாவதாக, நேர்மையான வழி. நேர்மையான வழி உடனடியாக கோமிங்டாங்கின் ஒருகட்சி சர்வாதிகாரத்தின் ஒழிப்பை பிரகடனம் செய்து கோமிங்டாங்கினுடைய, கம்யூனிஸ்ட் கட்சியினுடைய, ஜனநாயக அணியினுடைய, கட்சி சார்பற்றோருடைய பிரதிநிதிகளைக் கொண்ட தற்காலிக மத்திய அரசாங்கம் ஒன்றை நிறுவி, தேசிய ஐக்கியத்தைத் திரும்ப ஏற்படுத்துவதும், ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களைத் தோற்கடிப்பதுமான நோக்கத்துடன் நாம் மேலே எடுத்துரைத்துள்ள சீன மக்களின் உடனடிக் கோரிக்கைகளைப் போன்ற ஜனநாயக அரசியல் நடவடிக்கை வேலைத் திட்டம் ஒன்றை பிரகடனம் செய்வதும் ஆகும். இந்த விஷயங்களை விவாதித்து இணக்கத்திற்கு வருவதற்கு பல் வேறு கட்சிகள் மற்றும் கட்சி சார்பற்றோரின் பிரதிநிதிகளின் வட்டமேஜை மாநாடொன்று கூட்டப்படவும், பின்னர் அதன் முடிவுகளின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படவும் வேண்டும். இதுவே ஐக்கியப்பாதை; சீன மக்கள் இதனையே உறுதியாக ஆதரிப்பர்.

இரண்டாவதாக, நேர்மையற்ற வழி. நேர்மையற்ற வழி, வெகுஜனங்கள் மற்றும் ஜனநாயகக் கட்சிகளின் கோரிக்கைகளைப் புறக்கணித்து, கோமிங்டாங்கிலுள்ள மக்கள்-விரோதக் கும்பலினால் ஆட்டி வைக்கப்படும் தேசிய சபை எனப்படும் ஒன்றை கூட்ட வேண்டுமென பிடிவாதம் பிடித்து, அதைக்கொண்டு சட்ட விரோத ''தேசிய அரசாங்கம்'' ஒன்றிற்கு—தனிப்பட்ட முறையில் சில டஜன் கோமிங்டாங் அங்கத்தினர்களை நியமிப்பதன்மூலம் உருவாக்கி மக்கள் மீது திணிப்பதும், எவ்விதமான மக்கள் விருப்ப அடிப்படையும்இல்லாததுமான அரசாங்கம்ஒன்றிற்கு சட்ட அந்தஸ்துப் போர்வை தரும் நோக்கத்திற்காக நடைமுறையில் ஜனநாயக விரோதமாகவே இருக்கப் போவதும் இந்தக் கும்பலின் சர்வாதிகாரத்துக்கு முட்டுக் கொடுப்பதுமான ''அரசியல் அமைப்புச் சட்டம்'' ஒன்றை நிறைவேற்றச் செய்வதும், அவ்வாறாக உண்மையில் ''அரசு அதிகாரத்தைத் திரும்ப'' கோமிங்டாங் பிற்போக்குக் கும்பலிடம் ''கொடுக்கையில்'' ''அதைத் திரும்ப மக்களிடம் கொடுப்பதாக'' பாசாங்கு செய்வதுமாகும். இதனை ஏற்காத எவரும் ''ஜனநாயகத்தையும்'' ''ஐக்கியத்தையும்'' சிதைப்பதாகக் குற்றம் சாட்டப்படுவர். அது பின்னர் அவருக்கெதிராக தண்டனைக்குரிய நடவடிக்கைகள் எடுக்க உத்தரவிடக் ''காரணமா''கும். இது சீர்குலைவுப் பாதை; இதை மக்கள் உறுதியாக எதிர்ப்பர்.



நமது பிற்போக்கு நாயகர்கள் இந்த பிளவுக் கொள்கைக்கிணங்க எடுக்கத் தயாராகி வரும் நடவடிக்கைகள் அநேகமாக அவர்களை அழிவுக்குக் கொண்டு செல்லும். அவர்கள் தங்கள் கழுத்துக்களைச் சுற்றி தாங்களே சுருக்குக் கயிறை இறுக்கிக் கொள்கின்றனர்; ''தேசிய சபைதான்'' இந்தச் சுருக்குக் கயிறாகும்; அவர்களது உள்நோக்கம் ''தேசிய சபையை'' ஒரு மாயாஜாலக் கருவியாக உபயோகப்படுத்தி முதலாவதாக, கூட்டு அரசாங்கம் ஒன்று உருவாக்கப்படுவதைத் தடுப்பதாகும்; இரண்டாவதாக, தங்கள் சர்வாதிகாரத்தை நிலைப்படுத்திக் கொள்வதாகும். மூன்றாவதாக உள்நாட்டுப் போரை நியாயப்படுத்துவதாகும். ஆயினும் வரலாற்றின் தர்க்கவியல் இவர்களின் விருப்பங்களுக்கு எதிராகச் செல்கிறது. இவர்கள் ''பாறையைத் தூக்கித் தங்கள் கால் மேலேயே போட்டுக் கொள்ளப் போகின்றனர்.'' ஏனெனில் கோமிங்டாங் பகுதிகளிலுள்ள மக்க-

படிப்பகம்

www.padippakam.com



ளுக்குச் சுதந்திரம் இல்லை, ஜப்பானியர் கைபற்றியுள்ள பகுதிகளிலுள்ள மக்கள் தேர்தலில் பங்கு கொள்ள இயலாது. சுதந்திரமுள்ள விடுதலையாக்கப்பட்ட பகுதிகள் கோமிங்டாங் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்படுவதில்லை என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒன்றாகும். விஷயம் இப்படியிருக்க தேசிய பிரதிநிதிகள் எப்படி ஏற்பட முடியும்? ''தேசிய சபை'' ஒன்று எப்படி இருக்க முடியும்? இவர்கள் வேண்டுமென்று கூச்சலிடும் தேசிய சபை கோமிங்டாங் எட்டு ஆண்டுகளுக்கு முன் உள்நாட்டுபோர் காலகட்டத்தின் போது ஒரு விபரம் விடாமல் கபடமாகத் திட்டமிட்ட தேசிய சபைதான். இத்தகைய ஒரு சபை கூட்டப்பட்டால் தவிர்க்க முடியாதவாறு தேசம் முழுவதும் அதற்கு எதிராகக் கிளம்பும். அந்த இக்கட்டிலிருந்து நமது பிற்போக்கு நாயகர்கள் எப்படி வெளி வருவர் என நாம் வினவலாமா? மொத்தத்தில், போலி தேசிய சபையைக் கூட்டுவது அவர்களை அழிவிற்குத்தான் இட்டுச் செல்லும்.

கம்யூனிஸ்டுகளாகிய நாம் கோமிங்டாங் ஒரு கட்சி சர்வாதிகாரத்தை முடிவுக்குக் கொண்டு வர இரு நடவடிக்கைகளை முன்னுரைக்கிறோம். முதலாவதாக, தற்போதைய கட்டத்தில் கட்சிகளுடைய மற்றும் கட்சி சார்பற்ற மக்களுடைய பிரதிநிதிகளுக்கிடையிலான பொதுவான இணக்கத்தின் மூலம் தற்காலிக கூட்டு அரசாங்கம் ஒன்றை நிறுவுவது. இரண்டாவதாக அடுத்த கட்டத்தில், சுதந்திரமான, கட்டுப்பாடற்ற தேர்தல்கள் நடத்தப்பட்ட பின்னர் தேசிய சபை ஒன்றைக் கூட்டி ஒரு முறையான கூட்டு அரசாங்கத்தை நிறுவுவது. இரண்டு கட்டங்களிலும், பங்கு கொள்ள விருப்பமுடைய எல்லா வர்க்கங்களிடையே மற்றும் எல்லா அரசியல் கட்சிகளுடைய பிரதிநிதிகள் உள்ளடங்கிய —இன்று ஜப்பானுக்கு எதிரான போராட்டத்திலும் நாளை தேசிய நிர்மாணத்திலும் - ஒரு ஜனநாயக பொது வேலைத் திட்டத்தின்மீது ஐக்கியமடைந்திருக்கும் கூட்டு அரசாங்கம் ஒன்று இருக்கும்.



கோமிங்டாங் மற்றும் பிற கட்சிகளுடைய தனி நபர்களின் நோக்கங்கள் எதுவாயிருப்பினும், அந்த கட்சிகளுக்கோ அல்லது அவர்களுக்கோ பிடித்தாலும், பிடிக்காவிட்டாலும், அவையோ அல்லது அவர்களோ உணர்ந்தாலும் உணராவிட்டாலும் சீனா மேற்கொள்ளக் கூடிய பாதை இது ஒன்றேதான். இது ஒரு வரலாற்று நியதி; இது எந்தச் சக்தியாலும் மாற்ற முடியாத தவிர்க்க முடியாத ஒன்று.

இந்தப் பிரச்சினையிலும் ஜனநாயக சீர்திருத்தத்தின் மற்றெல்லா பிரச்சினைகளிலும் கம்யூனிஸ்டுகளாகிய நாம், கோமிங்டாங் அதிகாரிகள் இன்னும் தங்கள் தவறான கொள்கைகளில் பிடிவாதாக இருக்கின்றனர் என்ற போதிலும், காலம் பெறவும் பொது அபிப்பிராயத்தைச் சாந்தப்படுத்தவும் அவர்கள் பேச்சு வார்த்தைகளை உபயோகிக்கின்றனர் என்ற போதிலும் அவர்கள் தங்கள் தற்போதைய தவறானக் கொள்கைகளை கைவிடவும் ஜனநாயக சீர்திருத்தங்களுக்கு இணங்கவும் மனமொப்புதல் காண்பிக்கின்ற அக்கணமே அவர்களுடன் மீண்டும் பேச்சு வார்த்தைகள் தொடங்க நாம் தயாராக உள்ளோம் எனப் பிரகடனம் செய்கின்றோம். ஆனால் பேச்சு வார்த்தைகள் ஜப்பானிய—எதிர்ப்புப் போர், ஐக்கியம், ஜனநாயகம் ஆகியவற்றின் பொதுக் கோட்பாட்டின் அடிப்படையில் இருக்கவேண்டும்; இந்தப் பொதுக் கோட்பாட்டிலிருந்து விலகுகின்ற நடவடிக்கைகள், திட்டங்கள் என அழைக்கப்படுபவை எவற்றுக்கும், வெற்றுப் பிரகடனங்கள் எவற்றுக்கும், அவை கேட்பதற்கு எவ்வளவு இனிமையாக இருந்தாலும், நாம் இணங்கமாட்டோம்.

### 3. மக்களுக்குச் சுதந்திரம்

தற்போது சுதந்திரத்திற்கான சீன மக்களின் போராட்டம் பிரதான்மாக ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராகக் குறிவைக்கப்பட்டுள்ளது. ஆனால் கோமிங்டாங் அரசாங்கம் மக்களது சுதந்திரத்தைப் பறித்

படிப்பகம்

www.padippakam.com



தும், கை கால்களைக் கட்டிப் போட்டும் ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக போரிட விடாது தடுக்கிறது. இந்தப் பிரச்சினை தீர்க்கப்பட்டாலன்றி தேசத்தின் ஜப்பானிய-எதிர்ப்பு சக்திகளனைத்தையும் ஒன்றுபடுத்துவது சாத்தியமாகாது. மக்கள் ஜப்பானுக்கு எதிராகப் போரிடவும் ஐக்கியமடையவும் ஜனநாயகத்தை வென்றெடுக்கவும் வேண்டி, அவர்களது விலங்குகளை கழற்றுவதற்காகத் தான் நமது வேலைத் திட்டமானது கீழ்வரும் கோரிக்கைகளை முன் வைத்துள்ளது. ஒரு கட்சி சர்வாதிகாரத்தின் ஒழிப்பு; கூட்டு அரசாங்க ஒன்றின் உருவாக்கம்; இரகசிய போலீஸின் ஒழிப்பு; அடக்குமுறைச் சட்டங்கள் மற்றும் விதிகளை ரத்து செய்தல்; தேசத் துரோகிகளும் ஒற்றர்களும் ஜப்பானிய-சார்பு நபர்களும் பாசிசவாதிகளும் ஊழல்புரியும் அதிகாரிகளும் தண்டிக்கப்படுதல்; அரசியல் கைதிகளின் விடுதலை; எல்லா ஜனநாயகக் கட்சிகளது சட்ட ரீதியான அந்தஸ்தின் அங்கீகாரம்; விடுதலையாக்கப்பட்ட பகுதிகளைச் சுற்றி வளைத்தும் தாக்கியும் வருகின்ற துருப்புகளின் வாபஸ்; விடுதலையாக்கப்பட்ட பகுதிகளின் அங்கீகாரம்; **பாஓ- சியா** முறையின் ஒழிப்பு; பொருளாதாரம், கலாச்சாரம், வெகுஜன இயக்கம் சம்பந்தமான இதர பல கோரிக்கைகள் ஆகியவை.

\சுதந்திரம் என்பது மக்களால் போராட்டத்தின் மூலம் வென்றெடுக்கப்படுவது ஆகும். அதுஎவராலும் கொடையாக வழங்கப்படுவதல்ல.) சீனாவின் விடுதலையாக்கப்பட்ட பகுதிகளிலுள்ள மக்கள் ஏற்கனவே சுதந்திரத்தை வென்றெடுத்து விட்டனர்; பிற பகுதிகளிலும் மக்கள் சுதந்திரத்தை வென்றெடுக்க இயலும், வென்றெடுக்க வேண்டும். 'சீன மக்களின் சுதந்திரம் எந்த அளவுக்கு அதிகமாகவும், அவர்களின் ஸ்தாபன ரீதியாகத் திரண்ட ஜனநாயக சக்திகள் எவ்வளவு பலமாகவும் உள்ளனவோ அந்த அளவுக்கு தற்காலிகமான, ஐக்கியமடைந்த கூட்டு அரசாங்கம் ஒன்றை உருவாக்கும் சாத்தியப்பாடு அதிகமாக இருக்கும். அமைக்கப்பட்டவுடனே



இந்த கூட்டு அரசாங்கம் அதன் பங்கிற்கு மக்களுக்குப் பூரண சுதந்திரத்தை அளித்து அவ்வாறாக தன் சொந்த அடித்தளங்களை ஸ்திரப்படுத்திக் கொள்ளும். அப்போதுதான் ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களை வீழ்த்திய பின் நாடு பூராவிலும் சுதந்திரமான, கட்டுப்படுத்தப்படாத தேர்தல்களை நடத்தி ஜனநாயக தேசிய சபையொன்றை சிருஷ்டித்து, முறையான ஒன்றுபட்ட கூட்டு அரசாங்கமொன்றை ஸ்தாபிப்பது சாத்தியமாகும். மக்களுக்கு சுதந்திரம் இருந்தாலன்றி உண்மையாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தேசிய சபையோ அரசாங்கமோ எதுவும் இருக்க முடியாது. இது தெளிவாக இல்லையா?

பேச்சு சுதந்திரம், பத்திரிகை சுதந்திரம், கூட்டம் கூடும் சுதந்திரம், சங்கம் சேரும் சுதந்திரம், அரசியல் நம்பிக்கை மற்றும் மதநம்பிக்கைக்கான சுதந்திம், தனிநபர் சுதந்திரம் ஆகியவையே மிக முக்கியமான சுதந்திரங்கள். சீனாவில் விடுதலையாக்கப்பட்ட பகுதிகள் மட்டுமே அந்தச் சுதந்திரங்களுக்குப் பூரண வாய்ப்புத் தந்துள்ளன.

1925-ல் டாக்டர் சன்-யாட்-சென் தனது மரண சாசனத்தில் கீழ்வருமாறு பிரகடனம் செய்தார்:

> நாற்பது ஆண்டுகளாக நான் சீனாவிற்கு சுதந்திரமும் சமத்துவமும் வென்றெடுக்கும் நோக்கத்துடன் தேசிய புரட்சி இலட்சியத்திற்கு என்னை அர்ப்பணித்துள்ளேன். இந்த நாற்பது ஆண்டுகளிலான என் அனுபவம் இந்த நோக்கத்தை அடைவதற்கு நாம் வெகு ஜனங்களைத் தட்டியெழுப்பவும் நம்மைச் சமமாக நடத்துகின்ற உலக நாடுகளுடன் பொதுவான போராட்டத்தில் ஐக்கியமடையவும் வேண்டுமென என்னைத் திடமாக நம்பச் செய்துள்ளது.

டாக்டர் சன்னிற்குத் துரோகம் இழைத்துள்ள அவரது மோசமான வாரிசுகள் வெகு ஜனங்களைத் தட்டியெழுப்பு

படிப்பகம்

www.padippakam.com



வதற்குப் பதிலாக அவர்களை ஓதுக்கி அவர்களிடமிருந்து பேச்சு சுதந்திரம், பத்திரிகை சுதந்திரம், கூட்டம் கூடும் சுதந்திரம், சங்கம் சேரும் சுதந்திரம், அரசியல் மற்றும் மத நம்பிக்கை சுதந்திரம், தனிநபர் சுதந்திரம் ஆகிய சுதந்திரங்கள் அனைத்தையும் பறிக்கின்றனர். நேர்மையாக வெகுஜனங்களைத் தட்டியெழுப்பியும், மக்களின் சுதந்திரங்களையும் உரிமைகளையும் பாதுகாத்தும் வருகின்ற கம்யூனிஸ்ட் கட்சிக்கும், எட்டாவது வழிச் சேனை மற்றும் புதிய நான்காவது வழிச் சேனைகளுக்கும், விடுதலையாக்கப்பட்ட பகுதிகளுக்கும் ''தேசத் துரோகக் கட்சி'' ''தேசத் துரோக சேனை'' ''தேசத் துரோகப் பகுதிகள்'' என முத்திரைகள் குத்துகின்றனர். இந்தச் சரியும் பிழையும் தலைகீழாக மாற்றப்படுதல் விரைவில் முடிவுக்கு வரும்என நம்புகிறோம். இது இன்னும் அதிக காலம் நீடித்தால் சீன மக்கள் முற்றாகப் பொறுமையை இழந்துவிடுவர்.

## 4. மக்களின் ஐக்கியம்

ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களை அழிக்கவும், உள்நாட்டுப் போரைத் தவிர்க்கவும் புதிய சீனா ஒன்றைக் கட்டியெழுப்பவும் பிளவுபட்டுள்ள சீனாவை ஐக்கியப்பட்ட சீனாவாக மாற்றுவது இன்றியமையாதது; இதுவே சீன மக்களின் வரலாற்றுக் கடமையாகும்.

ஆனால் சீனாவை ஐக்கியப்படுத்துவது எவ்வாறு? ஒரு சர்வாதிகாரியின் எதேச்சதிகார ஐக்கியப்படுத்தலின் மூலமா அல்லது மக்களுடைய ஜனநாயக ஐக்கியப்படுத்தலின் மூலமா? யுவான் ஷிஹ்-காய்யின்[8] காலத்திலிருந்து வடக்கத்திய யுத்தப் பிரபுக்கள் எதேச்சதிகார ஐக்கியப்படுத்தலுக்கு கவனத்தைக் குவித்தனர். ஆனால் பயன் என்னவாகவிருந்தது? அவர்களது விருப்பங்களுக்கு மாறாக அவர்கள் அடைந்தது ஐக்கியப்படுத்தலை அல்ல பிளவுபடுத்தலையே! இறுதியில் அவர்கள் அதிகாரத்திலிருந்தே வீழ்ந்தனர். யுவான் ஷிஹ்கய்யின் அடிச்சுவட்டைப் பின்பற்றி



கோமிங்டாங்கின் மக்கள் விரோதக் கும்பலும் எதேச்சதிகார ஐக்கியப்படுத்தலை நாடி முழுதாகப் பத்து ஆண்டுகள் உள்நாட்டு யுத்தம் நடத்தி, அதனால் கண்டதெல்லாம் ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களை உள்ளே விட்டு விட்டு தான் மட்டும் ஓமெய்[9] மலைக்குப் பின்வாங்கிக் கொண்டது தான். இப்போது அவர்கள் மலையுச்சியிலிருந்து தங்கள் எதேச்சதிகார ஐக்கியப்படுத்தல் தத்துவத்தைப் பற்றிக் கூக்குரலிடுகின்றனர்? நேர்மையான தேசபக்திகொண்ட சீனன் எவனும் அவர்களுக்குச் செவிசாய்ப்பானா? பதினாறு ஆண்டுகள் வடக்கத்திய யுத்தப்பிரபு ஆட்சியிலும் பதினெட்டு ஆண்டுகள் சர்வாதிகார கோமிங்டாங் ஆட்சியிலும் வாழ்ந்து விட்ட மக்கள் போதிய அனுபவத்தையும் ஊடுருவிப் பார்க்கும் பார்வையையும் கொண்டுள்ளனர். அவர்கள் ஒரு சர்வாதிகாரியின் ஐக்கியப்படுத்தலை வீரும்பவில்லை; வெகுஜனங்களின் ஜனநாயக ஐக்கியப்படுத்தலையே விரும்புகின்றனர். 1935-ம் ஆண்டிலேயே கம்யூனிஸ்டுகளாகிய நாம் ஜப்பானிய-எதிர்ப்பு தேசிய முன்னணி என்ற கொள்கையை முன்வைத்து அப்போதிலிருந்து அதற்காகப் போராடி வந்துள்ளோம். 1936-ல் கோமிங்டாங் அதன் பிற்போக்கான ''விரோதக் கட்சிகளின் செயல்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை'' அமுல் படுத்தி அவ்வாறாக உடனடியான பணிந்து போதல், பிளவு பின்னடைவு அபாயத்தைச் சிருஷ்டித்துக்கொண்டும், தனது எதேச்சதிகார ஐக்கியப்படுத்தலைப் பற்றிக் கூக்குரலிட்டுக் கொண்டும் இருந்தபோது நாம் பிரகடனம் செய்தோம்: பணிந்து போதல் அல்லாமல் எதிர்ப்பையும், பிளவுபடுத்தலை அல்லாது ஐக்கியத்தையும், பின்னடைவை அல்லாது முன்னேற்றத்தையும் அடிப்படையாகக் கொண்ட ஐக்கியம் மட்டுமே உண்மையானது. மற்றெந்த வகையும் போலியானதாயிருக்கும். ஆறு ஆண்டுகள் உருண்டோடி விட்டன; ஆனால் பிரச்னை இன்னும் அப்படியே உள்ளது.

மக்களுக்கு சுதந்திரமோ ஜனநாயகமோ இல்லாவிட்டால் ஐக்கியம் இருக்க முடியுமா? அவர்களுக்கு இவையிரண்

படிப்பகம்

www.padippakam.com



டும் கிடைத்தவுடனே ஐக்கியம் இருக்கும். சுதந்திரம், ஜனநாயகம், கூட்டு அரசாங்கம் ஆகியவற்றுக்கான சீன மக்களின் இயக்கம் அதே சமயம், ஐக்கியத்திற்கான ஒரு இயக்கமாகவும் உள்ளது. நாம் நமது குறிப்பான வேலைத் திட்டத்தில் சுதந்திரம், ஜனநாயகம், கூட்டு அரசாங்கம் ஆகியவற்றுக்கான பல கோரிக்கைகளை முன் வைக்கின்ற அதே நேரத்தில் ஐக்கியத்தையும் குறிக்கோளாகக் கொண்டே அவ்வாறு செய்கிறோம். மக்கள் — விரோத கோமிங்டாங் கும்பலின் சர்வாதிகாரம் ஒழிக்கப்பட்டு ஜனநாயக கூட்டு அரசாங்கமொன்று உருவாக்கப்பட்டாலன்றி கோமிங்டாங் பகுதிகளில் ஜனநாயக சீர்திருத்தம் எதையும் செய்வதும் ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களைத் தோற்கடிப்பதற்கு அங்குள்ள சேனைகளையும் மக்களையும் அணிதிரட்டுவதும் அசாத்தியம் என்பது மட்டுமல்ல, உள்நாட்டுப் போர் நாசமும் ஏற்படும் என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒன்றே. கட்சி சார்பு உடையவர்களும் சார்பற்றவர்களும், கோமிங்டாங்கிலுள்ள பலர் உட்பட, ஜனநாயக வாதிகள் இத்தனை பேர் ஏகமனதாக கூட்டு அரசாங்கம் ஒன்றைக் கோருவது ஏன்? ஏனெனில் அவர்கள் தற்போதைய நெருக்கடியை நன்கு புரிந்து கொண்டுள்ளனர். அதைக் கடப்பதற்கும், விரோதிக்கு எதிரான ஐக்கியம், தேசிய நிர்மாணத்திற்கான ஐக்கியம் ஆகிய இரண்டையும் அடைவதற்கும் வேறெந்த வழியும் கிடையாது என்பதை உணர்ந்தும் உள்ளனர்.

### 5. மக்கள் படை

மக்கள் பக்கம் நிற்கும் படையொன்றில்லாமல் சீன மக்கள் சுதந்திரம் மற்றும் ஐக்கியத்தை அடைவதும் கூட்டு அரசாங்கம் ஒன்றை நிறுவுவதும், ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களை முற்றாகத் தோற்கடிப்பதும், புதிய சீனா ஒன்றைக் கட்டியெழுப்புவதும் அசாத்தியம். தற்போது முழுமையாக மக்கள் பக்கம் நிற்கும் ஆயுதப் படைகள் விடுதலையாக்கப்பட்ட பகுதிகளில் உள்ள எட்டாவது வழிச்சேனையும் புதிய



நான்காவது வழிச் சேனையும் தான். அவை பெரிய சேனைகள் அல்ல; இவை போதுமானவையல்ல. ஆயினும் மக்களை எதிர்க்கும் கோமிங்டாங் கோஷ்டி ஓய்வொழிச்சலின்றி விடுதலையாக்கப்பட்ட பகுதிகளின் சேனைகளை வேரறுக்கவும் அழிக்கவும் சதி செய்த வண்ணமிருக்கிறது. 1944-ல் கோமிங்டாங் அரசாங்கம், கம்யூனிஸ்ட் கட்சி ''குறிப்பிட்டதொரு கால எல்லைக்குள்ளாக'' விடுதலையாக்கப்பட்ட பகுதிகளின் படைகளில் ஐந்தில் நான்கு பங்கை ''கலைத்து'' விட வேண்டுமெனக் கோரி குறிப்பு எனப்படும் ஒன்றை அனுப்பியது. 1945ல் மிக அண்மைக் காலத்திய பேச்சு வார்த்தைகளின் போது விடுதலையாக்கப்பட்ட பகுதிகளின் ஆயுதந்தரித்த படைகள் எல்லாவற்றையும் கம்யூனிஸ்ட்கட்சி ஒப்படைத்துவிட வேண்டுமெனக் கோரி அதன் பின்தான் கம்யூனிஸ்ட் கட்சிக்கு ''சட்டரீதியான அந்தஸ்து'' அளிக்கப்படும் என அது கூறியது.

இந்த ஆட்கள் கம்யூனிஸ்டுகளைப் பார்த்து: ''உங்கள் துருப்புகளை ஒப்படைத்துவிடுங்கள், நாங்கள் உங்களுக்குச் சுதந்திரம் தருகிறோம்' என்கின்றனர். அவர்களது தத்துவப்படி படையேதும் பெற்றிராத அரசியல் கட்சியொன்று சுதந்திரத்தை அனுபவிக்க வேண்டும். ஆயினும் கம்யூனிஸ்டு கட்சி 1924-27ல் அது ஒரு சிறு ஆயுதப் படையை மட்டுமே கொண்டிருந்தபோது அனுபவித்த அற்ப சுதந்திரமும் கோமிங்டாங் அரசாங்கத்தின் 'கட்சி ஒழிப்பு' படுகொலைக் கொள்கைகளை அடுத்து காற்றாகப் பறந்தன. இன்றும் ஆயுதப் படைகள் எதுவுமில்லாத சீன ஜனநாயக அணிக்கும் கோமிங்டாங்கிற்குள் இருக்கின்ற ஜனநாயக வாதிகளுக்கும் எந்தச் சுதந்திரமும் இல்லை. கோமிங்டாங் ஆட்சியின் கீழ் உள்ள தொழிலாளர்களையும் விவசாயிகளையும் மாணவர்களையும். கல்வி, கலாச்சார தொழில் வட்டாரங்களைச் சேர்ந்த முற்போக்கு நாட்டங் கொண்டவர்களையும் உதாரணத்துக்கு எடுத்துக்கொள்வோம்— கடந்த பதினெட்டு



படிப்பகம்

www.padippakam.com



ஆண்டுகளாக இவர்களில் எவருக்கும் ஆயுதப் படைகளேதும் இருந்ததில்லை. சுதந்திரமேதும் இருந்ததில்லை. இந்த ஜன நாயகக் கட்சிகளும் ஆட்சிகளும் படைகளை அணிதிரட்டி ''நிலப்பிரபுத்துவ பிரிவினை வாதம்'' இழைத்து ''தேசத் துரோக பகுதிகளை உருவாக்கி'' அரசாங்க, இராணுவ உத் தரவுகளை மீறியதால்தான் இவர்களுக்குச் சுதந்திரம் மறுக் கப்பட்டிருக்குமோ? இல்லை, இல்லவே இல்லை. அதற்கு மாறாக, அவர்கள் இக்காரியங்களில் எதையுமே செய் யாத காரணத்தால்தான் அவர்களுக்குச் சுதந்திரம் மறுக்கப் பட்டுள்ளது.

''இராணுவம் அரசுக்குச் சொந்தம்''— அது முற்றிலும் உண்மை; ஏதாவதொரு அரசுக்குச் சொந்தமல்லாதஇராணு வம் எதுவும் உலகத்தில் கிடையாது. ஆனால் எந்த வகை யான அரசு? பெரிய நிலப்பிரபுக்கள், பெரிய வங்கி முதலாளி கள், பெரிய தரகர்கள் ஆகியோரின் கீழான நிலபிரபுத்துவ, பாசிச சர்வாதிகார அரசா, அல்லது பரந்த வெகுஜனங்களின் ஒரு புதிய ஜனநாயக அரசா? சீனா உருவாக்க வேண்டிய ஒரே வகையான அரசு ஒரு புதிய—ஜனநாயக அரசுதான்; இந்த அடிப்படையில் ஒரு புதிய ஜனநாயக கூட்டு அரசாங் கத்தை நிறுவ வேண்டும்; சீனாவின் ஆயுத்ப் படைகள் அனைத்தும் மக்களின் சுதந்திரத்தைப் பாதுகாக்கவும்அந்நிய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக பயனுள்ள விதத்தில் போராடவும் வேண்டி இத்தகையதொரு அரசிற்கும் இத் தகையதொரு அரசாங்கத்திற்கும் சொந்தமாக இருக்கவேண் டும். சீனாவில் புதிய சனநாயகக் கூட்டரசாங்கம் ஒன்று நடைமுறைக்கு வந்தவுடனே சீனாவின் விடுதலையாக்கப் பட்ட பகுதிகள் தம் ஆயுதப் படைகளை அதனிடம் ஒப் படைத்துவிடும். ஆனால் அதேசமயம் கோமிங்டாங் ஆயுதப் படைகள் அனைத்தும்கூட கூட்டரசாங்கத்திடம் ஒப்படைக் கப்பட வேண்டியிருக்கும்.

1924ல் டாக்டர் சன்-யாட்-சென் ''இன்றைய தினம் தேசியப் புரட்சியில் ஒரு புதிய சகாப்தத்தின் ஆரம்பத்தைக்



குறிப்பதாக இருக்க வேண்டும்... முதல் நடவடிக்கை ஆயுதப் படைகளை மக்களுடன் ஐக்கியப்படுத்துவது, அடுத்த நடவடிக்கை அவற்றை மக்களின் ஆயுதப் படைகளாக மாற்றுவது,'' எனக் கூறினார். எட்டாவது வழி மற்றும் புதிய நான்காம் சேனைகள் இந்தக்கொள்கையைப் பிர யோகித்ததனால்தான் அவை ''மக்களின் ஆயுதப்படை களாக'' அதாவது, மக்கள் படையாக ஆகியுள்ளன; வெற்றி களை ஈட்டவும் வல்லவையாக இருந்துள்ளன. வடக்குப் படையெடுப்பின் ஆரம்ப கட்டத்தில் கோமிங்டாங் படைகள் டாக்டர் சன்னின் ''முதல் நடவடிக்கையை'' எடுத்தன, அதனால் வெற்றிகளை ஈட்டின. வடக்குப்படையெடுப்பின் பிந்திய கால கட்டத்தில் அவை ''முதல் நடவடிக்கையைக்'' கூடக் கைவிட்டு மக்களுக்கு எதிரானதொரு நிலையை எடுத் தன; அதனால் அதுமுதற்கொண்டு இச்சமயம்வரை அவை நாளுக்கு நாள் ஊழல் மலிந்தும் நலிவடைந்தும் வந் துள்ளன. உள்நாட்டுப்போர் புரியும்போது நீரில் மீன்கள் போன்றிருக்கும் அவற்றால் வெளிப்போர் செய்வதென்று ஏற்பட்டாலோ தரையில் விடப்பட்ட மீன்களின் நிலை யில்தான் இருக்க முடிகிறது. கோமிங்டாங் இராணுவத் திலுள்ள மனசாட்சியுடைய தேசபக்தி கொண்ட அதிகாரி ஒவ்வொருவரும் சன்-யாட்-சென்னின் உணர்வுக்குப் புத் துயிர் அளித்து தன் துருப்புக்களை மாற்றுவதில் ஈடுபட வேண்டும்.

பழைய சேனைகளை மாற்றியமைக்கும் பணியில், மாற் றுக்கல்வி போதிக்கப்படுவதற்கு தகுதியுடைய எல்லா அதி காரிகளுக்கும் அவர்கள் மக்கள்சேனையில் தொடர்ந்துஇருக்க வும் சேவை செய்யவும் வேண்டி தங்கள் காலாவதியாகிப் போன கண்ணோட்டத்தை விட்டொதுக்கி சரியான ஒரு கண்ணோட்டத்தைஅடைய அவர்களுக்கு உதவிடத் தகுந்த போதனை தரப்பட வேண்டும்.

சீன மக்களின் படையை உருவாக்க போராடுவது முழு தேசத்தின் கடமையாகும். மக்கள் படை ஒன்று இல்லாமல்

படிப்பகம்

www.padippakam.com



மக்களுக்கு ஒன்றுமே இல்லை. இந்தப் பிரச்சினையில் எந்த வித வெற்றுத் தத்துவ விளக்கத்துக்கும் இடம் இருக்கக் கூடாது.

கம்யூனிஸ்டுகளாகிய நாம் சீன சேனையை மாற்றியமைக்கும் பணிக்கு நமது ஆதரவைத் தரத் தயாராக உள்ளோம். விடுவிக்கப்பட்ட சீனப் பகுதிகளில் உள்ள ஆயுதப்படைகளை எதிர்ப்பதற்குப் பதிலாக மக்களுடன் ஐக்கியமடையவும் ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களை எதிர்க்கவும் விருப்பமுடைய இராணுவப் படைகள் அனைத்தும் நட்பான துருப்புகளாகக் கருதப்படவும், எட்டாம் வழி மற்றும் புதிய நான்காவது சேனைகளால் தகுந்த உதவி தரப்படவும் வேண்டும்.

## நிலப்பிரச்சனை

ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களை துடைத்தெறியவும் புதிய சீனா ஒன்றைக் கட்டியெழுப்பவும் நிலமுறையைச் சீர்திருத்தம் செய்வதும், விவசாயிகளை விடுதலை செய்வதும் இன்றியமையாததவையாகும். டாக்டர் சன்-யாட்-சென்னின் ''உழுபவனுக்கே நிலம் சொந்தம்'' என்ற தத்துவம், இயல்பில் முதலாளித்துவ-ஜனநாயகத்தன்மையுடைய நமது புரட்சியின் தற்போதைய கால கட்டத்திற்குச் சரியானது.

நாம் ஏன் நமது புரட்சி தற்போதைய காலகட்டத்தில் முதலாளித்துவ ஜனநாயகத் தன்மையுடையது எனக் கூறுகின்றோம்? பொதுவாக இந்தப் புரட்சியின் இலக்கு முதலாளித்துவ வர்க்கமல்ல; தேசிய மற்றும் நிலப்பிரபுத்துவ ஒடுக்குமுறையே இதன் இலக்கு; இந்தப் புரட்சியில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் பொதுவில் தனியுடைமையை ஒழிப்பவை அல்ல, அதைப் பாதுகாப்பவையே; இந்தப் புரட்சியின் பயனாக முதலாளித்துவம் இன்னும் கணிசமான அளவு நீண்ட காலகட்டத்திற்கு உகந்த அளவிற்கு வளர வகைசெய்யப்படும் என்றாலும் கூட, தொழிலாளி வர்க்கம்



தன் பலத்தைக் கட்டி அமைத்து சீனாவை சோசலிசத்தின் திசையில் வழிநடத்திச் செல்ல இயலும் என்றே நாம் கருதுகிறோம். ''உழுபவனுக்கே நிலம் சொந்தம்'' என்பதன் பொருள், நிலத்தை நிலப்பிரபுத்துவ சுரண்டல்காரர்களிடமிருந்து விவசாயிகளுக்குக் கைமாற்றுவது, நிலப்பிரபுக்களின் தனியுடைமையை விவசாயிகளின் தனியுடைமையாக ஆக்குவது, விவசாயிகளை நிலப்பிரபுத்துவ விவசாய உறவுகளிலிருந்து, விடுவிப்பது, இவ்வாறாக விவசாய நாட்டை தொழில் வளமிக்க நாடாக மாற்றுவது என்பதேயாகும். இவ்வாறாக, ''நிலம் உழுபவனுக்கே சொந்தம்'' என்பது ஒரு முதலாளித்துவ ஜனநாயகக் கோரிக்கையின் தன்மையுடையதே, தொழிலாளி வர்க்க- சோஷலிசக் கோரிக்கையின் தன்மையுடையதல்ல; அது கம்யூனிஸ்டுகளாகிய நம்முடைய கோரிக்கைமட்டுமல்ல; எல்லா புரட்சிகர ஜனநாயகவாதிகளின் கோரிக்கையாகும். வேறுபாடு என்னவெனில் கம்யூனிஸ்டுகளாகிய நாம்தான் இக்கோரிக்கைக்கு விசேஷ முக்கியத்துவம் தந்து, வெறும் வாய்ப்பேச்சோடு நில்லாமல் அதை நடைமுறைப்படுத்தவும் செய்கிறோம். யார் புரட்சிகர ஜனநாயகவாதிகள்? மிகப் பூரணமான புரட்சிகர ஜனநாயகத் தன்மையுடைய தொழிலாளி வர்க்கத்தை அடுத்து விவசாயிகளே மிகப்பெரும் பகுதியாக அமைகின்றனர். விவசாயிகளில் மிகப்பெரும்பான்மையோர், அதாவது, நிலப்பிரபுத்துவ தன்மையுடைய பணக்கார விவசாயிகளைத் தவிர்த்து மற்றெல்லோரும் தீவிரத்துடன் ''உழுபவனுக்கே நிலம் சொந்தம்'' எனகோருகின்றனர். நகர்ப்புற சிறுமுதலாளிகள்கூட புரட்சிகர ஜனநாயகவாதிகளே. ''உழுபவனுக்கேநிலம் சொந்தம்'' என்பது விவசாயத்தில் உற்பத்தி சக்திகளை அபிவிருத்தி செய்ய உதவுமாகையால் அது அவர்களுக்கும் சாதகமானதாகவே இருக்கும். தேசிய முதலாளிகள் ஓர் ஊசலாடும் வர்க்கமாக உள்ளனர்- அவர்களுக்கும் சந்தைகள் தேவையாகையால் ''உழுபவனுக்கே நிலம் சொந்தம்'' என்பதை ஏற்கின்றனர்; ஆனால் அவர்களில்

படிப்பகம்

www.padippakam.com



பெரும்பாலானோர் நில உடமையுடன் தொடர்புகள் உடையவர்களாகையால், அவர்களில் பலர் அதற்கு அஞ்சுகின்றனர். டாக்டர் சன்—யாட்—சென் சீனாவின் ஆரம்பகாலஜன நாயகவாதியாவார். தேசிய முதலாளிவர்க்கத்தின் புரட்சிகர பிரிவினதும் நகர்ப்புற சிறுமுதலாளித்துவவர்க்கத்தினதும் விவசாயிகளினதும் பிரதிநிதியாக அவர் ஆயுதமேந்திய புரட்சி ஒன்றை நடத்தி ''நில உடைமையைச் சமப்படுத்துதல்'' ''உழுபவனுக்கே நிலம் சொந்தம்'' என்ற தத்துவத்தையும் முன்வைத்தார். ஆனால் அவர் ஆட்சியதிகாரத்தில் இருந்தபோது துரதிருஷ்டவசமாக முன்முயற்சி எடுத்து நில முறையைச் சீர்திருத்தம் செய்யவில்லை. கோமிங்டாங்கின் மக்கள்—விரோதக் கும்பல் அதிகாரத்தைக்கைப்பற்றிய போது அவர் எதற்காக நின்றாரோ அதற்கு முற்றாகத் துரோகமிழைத்தது. இந்தக் கும்பல்தான் இப்போது ''உழுபவனுக்கே நிலம் சொந்தம்'' என்பதை கடுமையாக எதிர்க்கிறது; ஏனென்றால், அது பெரும் நிலப்பிரபுக்கள், பெரும் வங்கிக்காரர்கள் மற்றும் பெரும் தரகர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. சீனாவில் பிரத்தியேகமாக விவசாயிகளைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற அரசியல் கட்சி ஏதுவும் இல்லாததாலும் தேசிய முதலாளித்துவ வர்க்கத்தின் அரசியல் கட்சிகள் எதனிடமும் பூரணமான நிலத்திட்டம் எதுவும் இல்லாததாலும், சீன கம்யூனிஸ்ட் கட்சி ஒன்றுதான் பூரணமான நிலத்திட்டம் ஒன்றை உருவாக்கி நிறைவேற்றியுள்ளது என்பதாலும், விவசாயிகளின் நலன்களுக்காக உள்ளார்வத்துடன் போராடியுள்ளது என்பதாலும் அதன் மூலம் விவசாயிகளில் மிகப் பெரும்பான்மையினரை தனது பெரிய கூட்டாளியாக வென்றெடுத்துள்ளது என்பதாலும் அது விவசாயிகள் மற்றும் இதர எல்லா புரட்சிகர ஜனநாயக வாதிகளின் தலைவனாகியுள்ளது.

1927-லிருந்து 1936 வரை சீன கம்யூனிஸ்ட் கட்சி நில முறையின் முழுமையான சீர்திருத்தத்திற்கான பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு, டாக்டர் சன்னின் ''உழுபவனுக்கே நிலம் சொந்தம்'' என்ற கோட்பாட்டையும் நடைமுறைப்படுத்தியுள்ளது. பற்களைக் காட்டி நகங்களை நீட்டி, மக்களுக்கு எதிரான பத்து ஆண்டு கால யுத்தத்தில் ''உழுபவனுக்கு நிலம் சொந்தம்'' என்பதற்கெதிராக முனைப்பாகப் போரிட்டவர்கள் கோமிங்டாங்கின் பிற்போக்குக் கும்பலே, டாக்டர் சன்—யாட்—சென்னின் மோசமான சீடர்கள் கூட்டமே.



கம்யூனிஸ்ட் கட்சி ஜப்பானிய— எதிர்ப்பு யுத்த கால கட்டத்தின்போது ''உழுபவனுக்கே நிலம் சொந்தம்'' என்ற கொள்கையை குத்தகையையும் வட்டியையும் குறைக்கும் கொள்கையாக மாற்றியதன் மூலம் ஒரு பெரிய சலுகை செய்துள்ளது. இந்தச் சலுகை சரியான ஒன்று; ஏனெனில் இது கோமிங்டாங்கை ஜப்பானுக்கு எதிரான யுத்தத்திற்குள் கொண்டுவர உதவி செய்து, யுத்தத்திற்கு விவசாயிகளை நாம் அணிதிரட்டுவதற்கு விடுதலையாக்கப்பட்ட பகுதிகளிலுள்ள நிலப்பிரபுக்களின் எதிர்ப்பையும் குறைத்தது. விசேஷமான தடங்கல் ஏதும் எழாவிட்டால் போருக்குப் பின்பும் இந்தக் கொள்கையை நீடிக்க நாம் தயாராயுள்ளோம்: அதாவது முதலாவதாக குத்தகை மற்றும் வட்டி குறைப்பை நாடு முழுவதற்கும் விரிவுபடுத்தவும், பின்னர் ''உழுபவனுக்கு நிலம் சொந்தம்'' என்பதை சிறிது சிறிதாக அடையத் தகுந்த நடவடிக்கைகளை எடுக்கவும் தயாராக உள்ளோம்.

டாக்டர் சன்—யாட்—சென்னிற்கு துரோகம் இழைத்து விட்டவர்கள், ''உழுபவனுக்கே நிலம் சொந்தம்'' என்ற அவரது கொள்கையை அமல்செய்வது ஒரு புறமிருக்கட்டும், குத்தகை மற்றும் வட்டியின் குறைப்பையே எதிர்க்கின்றனர். கோமிங்டாங் அரசாங்கமே பிறப்பித்துள்ள ''குத்தகையின் 25சதவீத குறைப்பிற்கான'' சட்டத்தையும், பிற சட்டங்களையும் அமுல்படுத்தவில்லை; நாம் மட்டுமே விடுதலையாக்கப்பட்ட பகுதிகளில் அவற்றை அமுல்படுத்தியுள்ளோம்; இக்குற்றத்திற்காக விடுதலையாக்கப்பட்ட

படிப்பகம்

www.padippakam.com



பகுதிகள் ''தேசத்துரோகப் பகுதிகள்,'' என்று முத்திரை குத்தவும்பட்டுள்ளன.

ஜப்பானிய—எதிர்ப்பு யுத்த காலத்தில் ''தேசியப் புரட்சி'' கட்டம் ''ஜனநாயகம் மற்றும் மக்கள் வாழ்வுக்கான புரட்சி'' கட்டம் என்ற இரு கட்ட தத்துவம் ஒன்று தலைதூக்கியுள்ளது. இது தவறான தத்துவம்.

''பலமிக்க எதிரியை எதிர்கொண்டிருக்கும் நாம் ஜனநாயக சீர்திருத்தங்களையோ அல்லது மக்களின் பிழைப்பு என்ற பிரச்சினையையோ எழுப்பக்கூடாது; ஜப்பானியர்கள் போகும் வரை காத்திருப்பதே மேல்''— யுத்தத்தில் முழு வெற்றியை தடுக்கும் நோக்கத்துடன் கோமிங்டாங் பிற்போக்கு கும்பலால் முன்வைக்கப்பட்ட அபத்தமான தத்துவம் இப்படித்தான் இருக்கிறது. ஆயினும் இந்தத் தத்துவத்தை எதிரொலித்து வந்துள்ள, அடிமைத்தனமாக பின்பற்றுபவர்களாக ஆகியுள்ள நபர்கள் சிலர் உள்ளனர்.

''பலமிக்க எதிரியை எதிர்கொண்டிருக்கும் நாம் ஜனநாயகப் பிரச்சினையையும், மக்களின் பிழைப்புப் பிரச்சினையும் தீர்த்தாலன்றி, நாம் ஜப்பானியர்களுக்கு எதிராகத் தளப்பகுதிகளைக் கட்டியெழுப்புவதும் அவர்களின் தாக்குதல்களை எதிர்த்து நிற்பதும், அசாத்தியம்—இதுதான் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி ஆதரித்து வந்துள்ளதும், அத்துடன் ஏற்கெனவே சிறந்த பயன்களோடு நடைமுறைப்படுத்தியிருப்பதுமாகும்.

ஜப்பானிய-எதிர்ப்பு யுத்த காலத்தில் குத்தகை மற்றும் வட்டியின் குறைப்பும், பிற ஜனநாயக சீர்திருத்தங்களும் யுத்தத்திற்கு சேவை செய்பவை ஆகும். யுத்த முயற்சிக்கு நிலப்பிரபுக்களின் எதிர்ப்பை குறைக்கும் பொருட்டு நாம் அவர்களின் உடைமை உரிமையை ஒழிக்காமல் விட்டுவிட்டு குத்தகை மற்றும் வட்டியை மட்டும் குறைத்துள்ளோம்; அதே சமயம், நாம் அவர்களை அவர்களது சொத்துக்களை தொழில் துறைக்கு மாற்றி ஈடுபடுத்த ஊக்குவித்துள்ளோம்;



அறிவு ஜீவியான நிலப்பிரபுத்துவ வர்க்கத்துக்கு யுத்தத்திற்கான பொதுஜன நடவடிக்கைகளிலும் அரசாங்கப் பணியிலும் மக்களின் பிற பிரதிநிதிகளுடன் சேர்ந்து பங்குபெற சந்தர்ப்பம் அளித்துள்ளோம். பணக்கார விவசாயிகளைப் பொறுத்தவரை நாம் அவர்களை உற்பத்தியைப் பெருக்க உற்சாகப்படுத்தியுள்ளோம். இவை அனைத்தும் கிராமப்புற பகுதிகளில் ஜனநாயக சீர்திருத்தங்களாகிய உறுதியான நெறியின் ஒரு பகுதியும் முழுக்க முழுக்க அவசியமானதும் ஆகும்.

இரு நெறிகள் உள்ளன. ஒன்று ஜனநாயகம் மற்றும் மக்களின் பிழைப்புப் பிரச்சினையைத் தீர்க்கக்கூடிய சீன விவசாயிகளின் முயற்சியை உறுதியாக எதிர்த்தும் கெடுத்தும் செயலறச் செய்வதன் மூலமும் ஜப்பானை எதிர்த்துப்போரிட அறவே அவர்களை திறனற்றவர்களாக்கிவிடுவது; அல்லது சீன விவசாயிகளை அவர்களது முயற்சியில் உறுதியாக ஆதரித்து, ஜனத்தொகையில் 80 சதவீதமாக இருக்கின்ற அவர்களை, கூட்டாளிகளிலெல்லாம் மிகப்பெரிய கூட்டாளியாக உள்ள அவர்களை வென்றெடுத்து, அவ்வாறாக பிரம்மாண்டமான போரிடும் வல்லமையை உருவாக்கிக் கொள்ளுவது. முன்னதே கோமிங்டாங் அரசாங்கத்தின் நெறி, பின்னதே விடுதலைமயமாக்கப்பட்ட பகுதிகளின் நெறி

சந்தர்ப்பவாதிகளின் நெறி இவையிரண்டிற்கும் இடையில் ஊசலாடுகின்றது; அதாவது விவசாயிகளை ஆதரிப்பதாகக் கூறிக்கொள்வதும், ஆனால் குத்தகையையும் வட்டியையும் குறைக்கவோ, விவசாயிகளை ஆயுதபாணிகளாக்கவோ, கிராமப் பகுதிகளில் ஜனநாயக அரசியல் அதிகாரத்தை நிறுவவோ துணிவின்றி இருப்பது ஆகும்.

கோமிங்டாங்கின் மக்கள் - விரோதக் கும்பல் தன் வசமுள்ள சக்திகளையெல்லாம் பிரயோகித்துச் சீனக் கம்யூனிஸ்ட் கட்சிக்கு எதிராக வெளிப்படையான மற்றும் இரகசியமான, ராணுவரீதியான, மற்றும் அரசியல் ரீதியான,

படிப்பகம்

www.padippakam.com



இரத்தம் சிந்துகின்ற மற்றும் சிந்தாத சகலவிதமான மூர்க்கத் தாக்குதல்களையும் தொடுத்துள்ளது. இருகட்சிகளுக்குமிடையிலான தகராறை அதன் சமூகப் பின்னணியில் வைத்து நோக்கும்போது சாராம்சத்தில் இப் பிரச்சினை விவசாய உறவுகளைப் பற்றியதே நாம் கோமிங்டாங் பிற்போக்குக் கும்பலை சரியாக எதில் கோபப்படுத்தியுள்ளோம்? இந்த விஷயத்தில்தான் அல்லவா? இந்த விஷயத்தில் ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களுக்கு பெரும் உதவி செய்ததினால் தான் அல்லவா இக்கும்பல் அவர்களிடமிருந்து தயவும் ஊக்கமும் பெற்றுள்ளது? ''ஜப்பானிய—எதிர்ப்பு யுத்தத்தைச்சிதைப்பதும் அரசை ஆபத்துக்குள்ளாக்குவதும்'' ''தேசத் துரோகக் கட்சி'', ''தேசத் துரோக சேனை'' ''தேசத் துரோகப் பகுதிகள்'', ''அரசாங்க மற்றும் இராணுவ உத்தரவுகளுக்குப் பணியாமை'' என்பன போன்ற சீனக் கம்யூனிஸ்ட் கட்சிக்கெதிரான குற்றச் சாட்டுகளெல்லாம் சரியாக அது இந்தத் துறையில் தேசத்தின் உண்மையான நலன்களுக்கு மனசாட்சிப்படி வேலை செய்துள்ளதால் அல்லவா சுமத்தப்பட்டுள்ளன.

சீன ஆலைத் தொழிலாளர்களின் மூல ஆதாரமாய் இருப்பவர்கள் விவசாயிகளே. எதிர்காலத்தில் மேற்கொண்டும் கோடிக்கணக்கான விவசாயிகள் நகரங்களுக்குச் சென்று தொழிற்சாலைகளில் சேருவர். சீனா சக்திவாய்ந்த தேசிய தொழில்களையும் பெரிய நவீன நகரங்கள் பலவற்றையும் அமைப்பதாயிருந்தால் கிராமவாசிகள் நகரவாசிகளாக மாறும் நீண்ட செயல் போக்கு ஒன்று இருந்தாக வேண்டும்.

சீனத் தொழிலுக்கு பிரதான சந்தையாக அமைபவர்கள் விவசாயிகளே. அவர்களால்தான் ஏராளமான உணவுப் பொருட்களையும் மூலப் பொருட்களையும் அளிக்கவும், பெருமளவிலான தொழில் உற்பத்திப்பொருட்களை உபயோகிக்கவும் முடியும்.

சீன இராணுவத்தின் மூல ஆதாரம் விவசாயிகளே. இராணுவ உடையணிந்த போர்வீரர்களான விவசாயிகள் ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களுக்கு மரணம் பயமூட்டும் எதிரிகளாக உள்ளனர்.



சீனாவில் தற்போதைய கட்டத்தில் ஜனநாயகத்திற்கான பிரதான அரசியல் சக்தி விவசாயிகளே. சீன ஜனநாயகவாதிகள், 36 கோடி விவசாயிகளின் ஆதரவைச் சார்ந்து நிற்காமல் போனால் அவர்கள் எதையுமே சாதிக்க மாட்டார்கள்.

தற்போதைய கட்டத்தில் சீன கலாச்சார இயக்கம் பிரதானமாக கவனம் செலுத்துவது விவசாயிகள் மீதுதான். 36 கோடி விவசாயிகள் ஒதுக்கப்பட்டுவிட்டால், ''எழுத்தறிவின்மையின் ஒழிப்பும்'' ''கல்வியை மக்கள் மயமாக்குவதும்'' ''இலக்கியமும் கலையும் பரந்துபட்ட மக்களுக்கே'' என்பதும் ''பொது சுகாதாரமும்'' பெரிதும் வெற்றுப் பேச்சாகிவிடும் அல்லவா?

இதை இப்படி நான் கூறுகையில் சுமார் 9 கோடியாக உள்ள பிற மக்களின் அரசியல், பொருளாதார, கலாச்சார முக்கியத்துவத்தைப் புறக்கணிக்க வில்லை; குறிப்பாக அரசியல், ரீதியாக முழு உணர்வு பெற்றதும் ஆகவே, புரட்சிகர இயக்கம் முழுமைக்கும் தலைமை தாங்க தகுதி வாய்ந்ததுமான தொழிலாளி வர்க்கத்தை நான் புறக்கணிக்க வில்லை; இதில் தப்பபிப்பிராயம் ஏதும் ஏற்படாதிருக்கட்டும்.

கம்யூனிஸ்டுகள் மட்டுமின்றி சீனாவிலுள்ள அனைத்து ஜனநாயகவாதிகளும் இந்த அம்சங்களைக் கிரகித்துக் கொள்வது முற்றிலும் அவசியமான ஒன்றாகும்.

நிலமுறையின் சீர்திருத்தம், அதாவது, குத்தகை மற்றும் வட்டியின் குறைப்பு போன்ற ஒரு ஆரம்பச் சீர்திருத்தம் கூட விவசாயிகளை உற்பத்தியில் அதிக அக்கறை கொள்ளச் செய்கிறது. பின்னர் விவசாயிகளுக்கு பண்ணைகளை அமைத்துக்கொள்ளவும் சுயவிருப்ப அடிப்படையிலான

படிப்பகம்

www.padippakam.com



இதர கூட்டுறவுகளை அமைத்துக் கொள்ளவும் உதவிதரப்படத்தரப்பட உற்பத்திச் சக்திகள் வளரும். தற்போது விவசாய கூட்டுறவுப் பண்ணைகள் ஒரு தனிநபர் விவசாய பொருளாதாரத்தை (அதாவது, விவசாயிகளின் தனியுடைமை உரிமையை) அடிப்படையாகக் கொண்டதானஒன்றிணைக்கப்பட்ட, பரஸ்பர உழைப்புப் பரிமாற்ற அமைப்புகளாகத்தான் அதாவது, உழைப்புப் பரிமாற்ற குழுக்கள், பரஸ்பர உதவிக் குழுக்கள், பணிபரிமாற்றக் குழுக்கள் போன்றவையாகத்தான் இருக்கமுடியும்; ஆயினும் உழைப்புத் திறனிலும் உற்பத்தியிலும் ஏற்பட்டுள்ள அதிகரிப்பு பிரமிக்கத்தக்கதாக உள்ளது. இத்தகைய அமைப்புகள் சீனாவின் விடுதலையாக்கப்பட்ட பகுதிகளில் பரவலாக விரிவு படுத்தப்பட்டுள்ளன; இப்போதிருந்தே சாத்தியமான அளவு மேலும் விரிவுபடுத்தப்படவும் வேண்டும்.

உழைப்புப் பரிமாற்றக் குழு வகையிலான கூட்டுறவு ஸ்தாபனம் விவசாயிகள் மத்தியில் நீண்ட காலமாக இருந்து வந்துள்ளது எனக் குறிப்பிடப்படலாம். ஆனால் கடந்த காலத்தில் அது அவர்கள் தங்கள் ஈன நிலையை சிறிது குறைத்துக்கொள்ள உபயோகிக்க முயன்ற ஒரு வழியாக மட்டுமே இருந்தது. இன்று சீன விடுதலையாக்கப்பட்ட பகுதிகளில் உழைப்புப் பரிமாற்றக் குழுக்கள் வடிவம், உள்ளடக்கம் இரண்டிலுமே வேறுபட்டவை. அவை பரந்துபட்ட விவசாயிகள் உற்பத்தியைப் பெருக்கவும் தங்கள் வாழ்நிலையை மேம்படுத்த முயலவும் உபயோகிக்கும் ஒரு வழிவகையாக ஆகியுள்ளன.

இறுதி ஆய்வில், எந்தவொரு சீன அரசியல் கட்சியினதும் கொள்கை மற்றும் நடைமுறையின் மக்கள் மீதான தாக்கம் நல்லதோ கெட்டதோ, பெரியதோ சிறியதோ அது அவர்களின் உற்பத்தி சக்திகளை அதிகரிக்க உதவுகிறதா, எந்த அளவுக்கு உதவுகிறதுஎன்பதிலும், இச்சக்திகளை அது கட்டிப் போடுகிறதா அல்லது விடுவிக்கிறதா என்பதிலும்தான் அடங்கியுள்ளது. ஜப்பானியஆக்கிரமிப்பாளர்களை அழித்து,



நிலச்சீர்திருத்தத்தை நடத்திவிவசாயிகளை விடுதலையாக்கி, நவீன கைத்தொழிலை விருத்தி செய்து சுதந்திரமான, விடுதலையாக்கப்பட்ட, ஜனநாயக, ஐக்கிய, சுபீட்சமிக்க, சக்திவாய்ந்த புதிய சீனா ஒன்றை நிறுவுவதன் மூலமே சீனாவின் சமூக உற்பத்திச் சக்திகள் விடுவிக்கப்பட முடியும்—இது சீன மக்களின் பாராட்டையும் பெறும்.

மேலும், நாட்டுப்புறத்தில் பணியாற்ற வரும் நகரத்து அறிவுஜீவிகளுக்கு கிராமப்புற பகுதிகளின் குணாதிசயங்களை, அதாவது, அவை இன்னும் சிதறிக்கிடக்கும் பின்னடைந்த தனிநபர் பொருளாதாரத்தைத்தான் அடிப்படையாகக் கொண்டுள்ளன என்பதையும், போதாக்குறைக்கு விடுதலையாக்கப்பட்ட பகுதிகள் தற்காலிகமாக எதிரியினால் ஒன்றிலிருந்து ஒன்று துண்டிக்கப்பட்டும் கொரில்லாப் போர் ஒன்றில் ஈடுபட்டும் உள்ளன என்பதையும் புரிந்துகொள்வது சுலபமல்ல என்பதும் சுட்டிக்காட்டப்பட வேண்டும். இந்தக் குணாதிசயங்களைப் புரிந்துகொள்ளத் தவறி அவர்கள் பல சமயம் கிராமப்புற பிரச்சினைகளை நகர வாழ்க்கை மற்றும் வேலையின் கண்ணோட்டத்திலிருந்து பொருத்தமற்ற விதத்தில் அணுகியும் கையாண்டும் அதனால் தங்களை நாட்டுப்புற யதார்த்தங்களிலிருந்து பிரித்துக்கொண்டு. தங்களை விவசாயிகளுடன் ஐக்கியப்படுத்திக்கொள்ளத் தவறிவிடுகின்றனர். இதை போதனையின் மூலம் வெற்றிக்கொள்ளது அவசியம்.

சீனாவின் எண்ணற்ற அறிவுஜீவிகள் விவசாயிகளுடன் ஒன்றுபடும் அவசியத்தை உணர வேண்டும். அவர்கள் விவசாயிகளுக்குத் தேவை; விவசாயிகள் அவர்களின் உதவிக்குக் காத்திருக்கின்றனர். அவர்கள் உற்சாகத்துடன் நாட்டுப்புறங்களுக்குச் செல்ல வேண்டும்; தங்கள் மாணவ உடையைக் களைந்து கரடுமுரடான துணிகளை உடுத்திக் கொள்ளவும், எவ்வளவு சிறிய வேலையானாலும், எந்த வேலையானாலும் அதில் மனம் ஊன்றி ஆரம்பிக்கவும் வேண்டும்; அவர்கள் விவசாயிகளுக்கு என்ன வேண்டும்

படிப்பகம்

www.padippakam.com



என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். மேலும் விவசாயி களை சீனாவின் ஜனநாயகப் புரட்சியின் மிக முக்கியப் பணி களில் ஒன்றான நாட்டுப்புறத்தில் ஜனநாயகப் புரட்சியை நிறைவேற்றுவதற்கான போராட்டத்திற்கு தட்டியெழுப்பி அணி திரட்டவும் உதவி செய்ய வேண்டும்.

ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்கள் துடைத்தெறியப்பட்ட பின்னர் நாம் அவர்களாலும் பிரதான தேசத் துரோகிகளா லும் கவர்ந்துகொள்ளப்பட்டுள்ள நிலத்தைப் பறிமுதல் செய்து அதை நிலம் இல்லாத அல்லது சிறிதளவே நிலம் பெற்றுள்ள விவசாயிகளுக்கிடையில் பங்கிட்டளிக்க வேண்டும்.

## 7. தொழிற்துறைப் பிரச்சினை

ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களைத் தோற்கடிக்கவும் புதிய சீனா ஒன்றைக் கட்டியெழுப்பவும் தொழிற்துறையை விருத்தி செய்வது அவசியம். கோமிங்டாங் அரசாங்கத்தின் கீழ் ஒவ்வொன்றுக்கும் அன்னிய நாடுகளைச் சார்ந்திருக்க வேண்டியுள்ளது; அதன் நிதி மற்றும் பொருளாதாரக் கொள்கை மக்களின் பொருளாதார வாழ்வு முழுவதையும் நாசப்படுத்தி வருகிறது. கோமிங்டாங் பகுதிகளில் காணக் கிடப்பதெல்லாம் ஒரு சில தொழில் முயற்சிகள் மட்டுமே; அவற்றிலும் பெரும்பாலானவை திவாலா ஆவது தடுக்க முடியாதவையாக உள்ளன. அரசியல் சீர்திருத்தங்கள் இல்லாத நிலையில் உற்பத்திச் சக்திகள் எல்லாம் நாசப் படுத்தப்பட்டு வருகின்றன; இது விவசாயம், தொழிற்துறை இரண்டுக்குமே பொருந்தும்.

ஒட்டுமொத்தத்தில், சீனா சுதந்திரமாகவும், ஐக்கியப் பட்டும் இருந்தாலன்றி தொழிற் துறையை அபிவிருத்தி செய்வது அசாத்தியம். ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களை துடைத்தெறிவது சுதந்திரத்திற்காக முயல்வதாகும். கோமிங்டாங்கின் ஒருகட்சிச் சர்வாதிகாரத்தை ஒழித்து,



ஜனநாயக, ஐக்கியக் கூட்டு அரசாங்கம் ஒன்றை நிறுவி, சீனாவின் துருப்புகள் எல்லாவற்றையும் ஒரு மக்கள் ஆயுதப் படையாக மாற்றியமைத்து, நிலச் சீர்திருத்தத்தை நடத்தி விவசாயிகளை விடுதலையாக்குவது என்பது விடுதலை, ஜன நாயகம் மற்றும் ஐக்கியத்துக்கு முயல்வதாகும். சுதந்திரம், விடுதலை ஜனநாயகம் மற்றும் ஐக்கியம் இல்லாமல் உண்மை யில் பெரியஅளவில் தொழிற்துறையைக் கட்டிவளர்ப்பது சாத்தியமில்லை. தொழிற்துறை இல்லாமல் உறுதி வாய்ந்த தேசியபாதுகாப்பும் இருக்க முடியாது; மக்களுக்குநல்வாழ்வும் இருக்க முடியாது; நாட்டிற்கு செழிப்போ பலமோ இருக்க முடியாது. 1840.ம் ஆண்டு அபினி யுத்தத்திற்குப் பிந்திய 105ஆண்டு கால வரலாறுகுறிப்பாக கோமிங்டாங் அதிகாரத் திற்கு வந்த பின்னர் கடந்த பதினெட்டு ஆண்டுகாலவரலாறு இந்த முக்கிய விஷயத்தை சீன மக்களுக்கு உணர்த்தி யுள்ளது. ஏழ்மையாகவும் பலவீனமாகவும் இல்லாத ஆனால் வளமும் பலமும் பொருந்தியதாக சீனா உள்ளது என்பதன் அர்த்தம் யாதெனில், காலனி நாடாகவோ அரைக் காலனி நாடாகவோ இல்லாமல் மாறாக சுதந்திரத்தையும் அரை நிலப்பிரபுத்துவம் இல்லாமல் ஜனநாயகத்தையும் பிளவு பட்டதல்லாமல் ஐக்கியமுற்றதாயும் உள்ள சீனா என்பதா கிறது. அரைக்காலனிய, அரை-நிலப்பிரபுத்துவ, பிளவு பட்ட சீனாவில் பலர் பல ஆண்டுகளாக தொழிற்துறையில் அபிவிருத்தி செய்வதையும், தேசிய பாதுகாப்பை கட்டிய மைப்பதையும், மக்களுக்கு நல்வாழ்வையும், தேசத்திற்கு செழிப்பு மற்றும் பலத்தைக் கொண்டுவருவதையும் பற்றிக் கனவு கண்டு வந்துள்ளனர்; ஆனால் அவர்களது கனவு களெல்லாம் சிதறடிக்கப்பட்டுவிட்டன. நல்ல நோக்கம் கொண்ட பல கல்வியாளர்களும் விஞ்ஞானிகளும் மாணவர் களும் தம் அறிவைக் கொண்டு நாட்டுக்குச் சேவை செய்யலாம் என்ற நம்பிக்கையில் தம் சொந்த வேலையிலோ கல்வியிலோ மூழ்கி, அரசியலுக்குக் கவனம் செலுத்தாம லிருந்தனர்; ஆனால் நாட்டுக்கு சேவை செய்வதும் ஒரு கனவாக, சிதறடிக்கப்பட்ட ஒரு கனவாக ஆகியுள்ளது. இது

படிப்பகம்

www.padippakam.com



உண்மையில் ஒரு நல்ல அறிகுறி. ஏனெனில் இந்தக் குழந்தைதனமான கனவுகள் சிதறடிக்கப்பட்டதானது வளம் மற்றும் பலத்தை நோக்கிய சீனாவின் பாதையில் ஓர் ஆரம்பப் புள்ளியைக் குறிக்கிறது; சீன மக்கள் போரில் பல விஷயங்களைக் கற்றுக்கொண்டுள்ளனர்; ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்கள் தோற்கடிக்கப்பட்ட பின்னர், ஒன்றோடொன்று தொடர்புடையவையும் அத்தியாவசியமானவையுமான சுதந்திரம், விடுதலை, ஜனநாயகம், ஐக்கியம், செழிப்பு, பலம் ஆகியவற்றைக் கொண்ட ஒரு புதிய ஜனநாயகச் சீனாவைக் கட்டியெழுப்ப வேண்டும் என்பதை அவர்கள் தெரிந்து வைத்துள்ளனர். அவர்கள் அவ்வாறு செய்துவிட்டால் அப்போது சீனாவை எதிர்நோக்கி ஓர் ஒளிமயமான எதிர்காலம் உள்ளது. சீனாவின் அனைத்துப் பகுதிகளிலும் புதிய-ஜனநாயக அரசியல் அமைப்பு நிலவும்போது மட்டுமே சீன மக்களின் உற்பத்திச் சக்திகள் விடுவிக்கப்பட்டு அனைவவளர்ச்சியடைவதற்கான சகல சாத்தியப்பாடுகளும் வழங்கப்படும். இந்த விஷயத்தைப் புரிந்து கொள்ளும் மக்களின் எண்ணிக்கை ஒவ்வொரு நாளும் அதிகரித்து வருகிறது.

புதிய-ஜனநாயக அரசியல் அமைப்பு வென்றடையப் பட்டதும் சீன மக்களும் அவர்களது அரசாங்கமும் பலஆண்டுகளில் படிப்படியாக கனரக மற்றும் இலேசுரக தொழில்களைக் கட்டியமைக்கவும்; ஒரு விவசாய நாடான சீனாவை தொழில்வள நாடாக மாற்றவும் காரிய சாத்தியமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும். புதிய ஜனநாயக அரசு தன்து அடித்தளமாக தற்போதுள்ளதைக் காட்டிலும் மிகவும் முன்னேறிய விவசாயத்தையும், பொருத்தமான செய்தித் தொடர்பு, வாணிபம் மற்றும் நிதியுடன் கூடிய தேசிய பொருளாதாரத்தில் ஒரு மேலாதிக்க நிலையை வகிக்கக்கூடிய ஒரு பெரிய அளவிலான தொழிற்துறையையும் உள்ளடக்கிய ஓர் உறுதியான பொருளாதாரத்தை பெற்றிருக்காவிட்டால் அது உறுதிப்படுத்தப்பட முடியாது.



கம்யூனிஸ்டுகளாகிய நாம் நாடு முழுக்க உள்ள ஜனநாயகக் கட்சிகளுடனும் தொழில் வட்டாரங்களுடனும் ஒன்று சேர்ந்து இந்தக் குறிக்கோளை அடைவதற்கு போராடத் தயாராக உள்ளோம். அந்தப் பணியில் தொழிலாளி வர்க்கம் ஒரு பெரும் பாத்திரம் வகிக்கும்.

முதலாம் உலகப்போர் முதற்கொண்டு சீனத் தொழிலாளி வர்க்கம் சீனாவின் சுதந்திரத்திற்கும் விடுதலைக்கும் உணர்வு பூர்வமாகப் போராடி வந்துள்ளது. 1921-ம் ஆண்டில் தொழிலாளி வர்க்கத்தின் முன்னணிப் படையான சீன கம்யூனிஸ்ட் கட்சி பிறந்தது; அப்போதிலிருந்து விடுதலைக்கான சீனப் போராட்டமும் ஒரு புதிய கட்டத்தில் நுழைந்தது. அடுத்து வந்த வடக்குப் படையெடுப்பு, விவசாய புரட்சிகர யுத்தம், ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தம் ஆகிய மூன்று கட்டங்களிலும் சீனத் தொழிலாளி வர்க்கமும் கம்யூனிஸ்ட் கட்சியும் மிகக் கடுமையாக உழைத்து சீன மக்களின் விடுதலை லட்சியத்துக்கு விலைமதிக்க முடியாத பங்களிப்பு செய்துள்ளன. ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களை இறுதியாக தோற்கடிப்பதற்கும், குறிப்பாக பெரிய நகரங்களையும் செய்தித் தொடர்பின் முக்கிய வழிகளையும் மீட்பதற்கும் தொழிலாளிவர்க்கம் மிகப்பெரிய பாத்திரத்தை வகிக்கும். ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தத்திற்குப் பின்னர் சீனத் தொழிலாளி வர்க்கத்தின் முயற்சியும் பங்களிப்பும் இன்னும் பெரியதாக இருக்கும் என கூற முடியும். சீன தொழிலாளி வர்க்கத்தின் கடமை ஒரு புதிய-ஜனநாயக அரசை நிறுவ போராடுவது மட்டுமல்ல; சீனாவை தொழில் மயமாக்குவதற்காகவும், அதன் விவசாயத்தை நவீனப்படுத்துவதற்காகவும் போராட வேண்டியதும் அதன் கடமையாகும்.

உழைப்பு மற்றும் மூலதனத்தின் நலன்களை ஒருவாறு சரிகட்டும் கொள்கை புதிய-ஜனநாயக அரசமைப்பின் கீழ் மேற்கொள்ளப்படும். ஒரு புறம் அது தொழிலாளர் நலன்களைப் பாதுகாக்கும், சூழ்நிலைகளுக்கேற்ப எட்டு முதல்



படிப்பகம்

www.padippakam.com



பத்து மணி வரையிலான வேலை நாளை அமலாக்கும், வேலையற்றோருக்குத் தகுந்த நிவாரணமும் சமூகக் காப்புறுதியும் அளிக்கும், தொழிற்சங்க உரிமைகளை பாதுகாக்கும்; மறுபுறம், அது பொதுத்துறை. தனியார் துறை ஆகிய இரண்டும், உழைப்பு, மூலதனம் ஆகிய இரண்டும் தொழில் உற்பத்தி வளர்ச்சிக்கு ஒன்றுபட்டு செயல்படும் வகையில் முறையாக நிர்வகிக்கப்படும்; அரசு தனியார் மற்றும் கூட்டுறவு தொழில் முயற்சிகளுக்கு சட்டரீதியான லாபம் பெற உத்தரவாதம் அளிக்கும்.

ஜப்பான் தோற்கடிக்கப்படும்போது சீனாவில் உள்ள ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்கள் மற்றும் பிரதான தேசத் துரோகிகளது தொழிற்சாலைகளும் சொத்துக்களும் பறிமுதல் செய்யப்பட்டு அரசாங்கத்தின் கைகளில் ஒப்படைக்கப்படும்.

### 8. கலாச்சாரம் கல்வி மற்றும் அறிவுஜீவிகளின் பிரச்சினை

அந்நிய மற்றும் நிலப்பிரபுத்துவ ஒடுக்குமுறையால் சீன மக்களுக்கு உண்டாக்கப்பட்ட நாசங்கள் நமது தேசிய கலாச்சாரத்தையும் பாதிக்கின்றன. குறிப்பாக, கலாச்சார மற்றும் கல்வி நிறுவனங்கள் பாதிக்கப்பட்டுள்ளன, முற்போக்குக் கலாச்சார ஊழியர்களும் கல்வி போதனையாளர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். அந்நிய மற்றும் நிலப்பிரபுத்துவ ஒடுக்குமுறையைத் துடைத்தெறிந்து ஒரு புதிய-ஜனநாயக சீனாவை கட்டியமைக்க மக்களுக்கான கல்வியாளர்கள், ஆசிரியர்கள், மேலும் மக்களது விஞ்ஞானிகள், பொறியியலாளர்கள், தொழில் நுட்ப வல்லுனர்கள், மருத்துவர்கள், பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்கள், அறிஞர்கள். கலைஞர்கள், கலாச்சார ஊழியர்கள் ஆகியோர் பெரும் எண்ணிக்கையில் நமக்குத் தேவைப்படுகின்றனர். மக்களுக்குச் சேவை செய்யும் உணர்வு அவர்களது மனதில் பதிந்திருக்க வேண்டும்; அவர்கள் கடுமையாக உழைக்க



வேண்டும். நம்பிக்கைக்கு உகந்த வகையில் அவர்கள் மக்களுக்குச் சேவை செய்தால் அறிவுஜீவிகள் அனைவரும் மதிப்பு வாய்ந்த தேசிய மற்றும் சமுதாய சொத்துக்களாகக் கருதப்படவேண்டும். சீனாவில் குறிப்பாக அறிவுஜீவிகளின் பிரச்சினை முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது; ஏனெனில் அந்நிய மற்றும் நிலப்பிரபுத்துவ ஒடுக்குமுறையின் காரணமாக நாடு கலாச்சார ரீதியாகப் பின்தங்கியுள்ளது; அத்துடன் விடுதலைக்கான மக்கள் போராட்டத்தில் அறிவுஜீவிகள் அவசரமாகத் தேவைப்படுகின்றனர். எண்ணற்ற புரட்சிகர அறிவுஜீவிகள், கடந்த அரை நூற்றாண்டு காலத்தில் விடுதலைக்கான மக்கள் போராட்டத்திலும், குறிப்பாக 1919-ம் ஆண்டின் மே 4 இயக்கத்திற்கு பின்பும், எட்டு ஆண்டு காலமாக ஜப்பானிய எதிர்ப்பு யுத்தத்திலும் மிகப் பெரும் பங்கு ஆற்றியுள்ளனர். அவர்கள் இனி வரப் போகும் போரில் மேலும் பெரியதொரு பங்கை ஆற்றுவர். எனவே, மக்கள் அரசாங்கத்தின் பணி யாதெனில், மக்கள் மட்டத்திலுள்ளவர்களில் அறிவு ரீதியாக வளர்ந்துள்ள சகல வகையான அறிவுஜீவி ஊழியர்களையும் திட்டமிட்ட முறையில் வளர்த்தெடுப்பதும், அதே நேரத்தில் ஏற்கனவே உள்ள உபயோகமான அறிவுஜீவிகள் அனைவருடனும் ஐக்கியப்படுவதும் அவர்களுக்கு மறுகல்வி போதிப்பதுமாகும்.

ஜனத்தொகையில் 80 சதவீத மக்களிடையே எழுத்தறிவின்மையைப் போக்குவது என்பது புதிய சீனாவுக்கான ஒரு ஜீவதாரமான பணியாகும்.

அடிமைப்படுத்தும் நிலப்பிரபுத்துவ மற்றும் பாசிச கலாச்சாரத்தையும் கல்வியையும் முழுமையாக ஒழித்துக்கட்ட தகுந்த உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

மக்கள் மத்தியிலான தொத்து நோய்கள் மற்றும் இதர பிற நோய்களைத் தடுத்து நிறுத்தவும் குணப்படுத்தவும், மக்களது மருத்துவ மற்றும் சுகாதார பணிகளை விரிவுபடுத்தவும் தீவிர நடவடிக்கை எடுக்கப்படவேண்டும.

படிப்பகம்

www.padippakam.com



பழைய வகையான கலாச்சார மற்றும் கல்வி ஊழியர்களும் டாக்டர்களும் மக்களுக்குச் சேவை செய்ய ஒரு புதிய கண்ணோட்டத்தையும் புதிய வழிமுறைகளையும் பெறும் வகையில் அவர்களுக்கு தகுந்த மறுகல்வி அளிக்கப்பட வேண்டும்.

சீன மக்களது கலாச்சாரமும் கல்வியும் புதிய-ஜனநாயக மாக இருக்க வேண்டும். அதாவது, சீனா தனது சொந்த புதிய தேசிய, விஞ்ஞான மற்றும் மக்கள் கலாச்சாரத்தையும் கல்வியையும் நிறுவ வேண்டும்.

வெளிநாட்டுக் கலாச்சாரத்தைப் பொறுத்த வரை அதற்குக் கதவைச் சாத்திவிடுவது தவறாகும்; சீனாவின் புதிய கலாச்சாரத்தை வளர்ப்பதற்கு பயன்படும் அதிலுள்ள முற்போக்கானதை கூடுமான அளவு எடுத்துக் கொள்ள வேண்டும். கண்ணை மூடிக் கொண்டு அதை அப்படியே பின்பற்றுவதும் தவறு; மேலும் சீன மக்களின் உண்மையான தேவையைப் பூர்த்தி செய்வதற்கு விமர்சனக் கண்ணோட்டத்துடன் அதை நாம் எடுத்துக் கொள்ள வேண்டும். சோவியத் யூனியனில் உருவாக்கப்பட்டுள்ள புதிய கலாச்சாரம் நமது மக்கள் கலாச்சாரத்தை கட்டியமைக்க நமக்கு ஒரு முன் மாதிரியாகத் திகழ வேண்டும். அதேபோல், பழங்கால சீன கலாச்சாரம் முழுக்க முழுக்க நிராகரிக்கப்படவோ, கண்மூடித்தனமாக பின்பற்றப்படவோ கூடாது, சீன புதிய கலாச்சாரத்தின் முன்னேற்றத்துக்கு உதவும் வகையில் நல்லது தீயது பிரித்தறிந்து ஏற்கப்படவேண்டும்.

### சிறுபான்மை தேசிய இனங்களின் பிரச்சினை

கோமிங்டாங்கின் மக்கள் விரோத கும்பல் சீனாவில் பல தேசிய இனங்கள் உள்ளன என்பதை மறுத்து ஹான் தேசிய இனத்தைத் தவிர மற்ற அனைத்துக்கும் 'பழங்குடிகள்' என முத்திரை குத்துகிறது. அது சிறுபான்மை தேசிய



இனங்களைப் பொறுத்தவரை மக்களைச் சாத்தியமான சகல வழிகளிலும் ஒடுக்கி சுரண்டுகின்ற சிங் ராஜவம்சம் மற்றும் வடக்கு யுத்தப் பிரபுக்களின் அரசாங்கங்களுடைய பிற்போக்குக்கொள்கையைத்தான் பின்பற்றுகிறது. 1943ல் இச்கோ அணியைச் சேர்ந்த மங்கோலியர்களைப் படுகொலை செய்ததும், 1944ம் ஆண்டு முதற்கொண்டு சிங்கியாங்கில் சிறுபான்மை தேசிய இனத்தினரை ஆயுதம் கொண்டு ஒடுக்கியதும், அண்மை ஆண்டுகளில் கான்சு மாகாணத்தில் ஹியூ மக்களைப் படுகொலை செய்ததும் இதற்குத் தெளிவான உதாரணங்களாகும். இவை ஹான் தேசிய இனத்தின் தவறான குறுகிய தேசியவெறி மற்றும் கொள்கையின் வெளிப்பாடுகளாகும்.

1924ல் டாக்டர் சன்-யாட்சென் கோமிங்டாங்கின் முதலாவது தேசிய மாநாட்டின் கொள்கை அறிக்கையில் "கோமிங்டாங்கின் தேசியக் கோட்பாட்டிற்கு இரட்டை அர்த்தம் உண்டு. முதலாவது, சீன தேசத்தின் விடுதலை, இரண்டாவது சீனாவில் உள்ள எல்லா தேசிய இனங்களுக்கும் சமத்துவம்" எனவும், "கோமிங்டாங் சீனாவில் உள்ள அனைத்து தேசிய இனங்களின் சுய நிர்ணய உரிமையை அங்கீகரிக்கிறது என்றும், ஏகாதிபத்திய எதிர்ப்பு மற்றும் பிரபுக்கள் எதிர்ப்பு புரட்சி வெற்றியடையும்போது ஒரு சுதந்திரமான ஐக்கியப்பட்ட சீனக் குடியரசு (அனைத்து தேசிய இனங்களின் ஒரு விருப்பபூர்வமான ஒன்றியம்) நிறுவப்படும் என்றும் பிரகடனம் செய்கிறது" எனவும் எழுதினார். சீன கம்யூனிஸ்ட் கட்சி இங்கே கூறப்பட்டுள்ளபடி தேசிய இனங்கள் பற்றிய டாக்டர் சன்னின் கொள்கையுடன் முழு உடன்பாடு கொண்டுள்ளது, இதற்காகப் போராட அனைத்து சிறுபான்மை தேசிய இனங்களது மக்களுக்கும் கம்யூனிஸ்டுகள் தீவிரமாக உதவி செய்ய வேண்டும். வெகு ஜனங்களுடன் தங்களை இணைத்துக் கொண்டிருக்கின்ற அவர்களதுதலைவர்கள் உட்பட அந்த மக்களுக்கு, அவர்கள் தங்கள் அரசியல், பொருளாதார மற்றும் கலாச்சார விடுதலைக்கும், அபிவிருத்திக்கும், மக்கள் நலன்களைப் பாது

படிப்பகம்

www.padippakam.com



காக்கக் கூடிய சொந்த இராணுவங்களை நிறுவவும், கம்யூனிஸ்டுகள் உதவி செய்ய வேண்டும். அவர்களது பேச்சு மற்றும் எழுத்து மொழிகளும், அவர்களது நடையுடை பாவனைகளும் பழக்க வழக்கங்களும் அவர்களது மத நம்பிக்கைகளும் மதிக்கப்பட வேண்டும்.

ஷென்சி -கான்சு- நிங்ஸியா எல்லைப் பிரதேசமும் சீனாவின் வடக்கிலுள்ள விடுதலையாக்கப்பட்ட பிரதேசங்களும் பல ஆண்டுகளாக மங்கோலியர்கள் மற்றும் ஹியூ தேசிய இனங்களின் பால் மேற்கொண்டு வந்துள்ள போக்கு சரியாக உள்ளது; அவை ஆற்றிய பணி பயனுள்ளதாக இருந்து வந்துள்ளது.

## 10. வெளிவிவகாரக் கொள்கை பற்றிய பிரச்சினை

அட்லாண்டிக் சாசனத்துடனும், மாஸ்கோ, கெய்ரோ, டெஹ்ரான் மற்றும் கிரீமிய சர்வதேசிய மாநாடுகளின் முடிவுகளுடனும் கம்யூனிஸ்ட் கட்சி உடன்படுகிறது. ஏனெனில் அந்த முடிவுகள் பாசிச ஆக்கிரமிப்பாளர்களைத் தோற்கடிக்கவும், உலக அமைதியைப் பராமரிக்கவும் உதவி செய்கின்றன.

சீன கம்யூனிஸ்ட் கட்சி ஆதரிக்கின்ற வெளிவிவகாரக் கொள்கையின் அடிப்படைக் கோட்பாடு பின்வருமாறு:

ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்கள் முழுமையாகத் தோற்கடிக்கப்படவும் உலக சமாதானம் பராமரிக்கப்படவும் வேண்டும், தேசிய சுதந்திரத்திற்கும் சமத்துவத்திற்கும் பரஸ்பர மரியாதை இருக்கவேண்டும், அரசுகளுக்கு இடையிலும் மக்களுக்கு இடையிலும் பரஸ்பர நலன்கள் மற்றும் நட்புறவு மேன்மையுற வேண்டும் என்ற அடிப்படை நிபந்தனைகளின் பேரில் சீனா எல்லா நாடுகளுடனும் ராஜதந்திர உறவுகளை ஏற்படுத்திப் பலப்படுத்தும்; யுத்தத்தில் இராணுவ நடவடிக்கைகளை ஒரு முகப்படுத்துதல், சமா



தான மாநாடுகள், வர்த்தகம் மற்றும் முதலீடு போன்ற பொது அக்கறைக்குரிய பிரச்சினைகள் அனைத்தையும் தீர்க்க முயற்சிக்கும்.

சீன கம்யூனிஸ்ட் கட்சி டாம்பார்ட்டன் ஓக்ஸ் மாநாட்டின் முடிவுகளுடனும், போருக்குப்பின் சர்வதேச சமாதானம் மற்றும் பந்தோபஸ்தை பராமரிக்க ஓர் அமைப்பை நிறுவுவது பற்றிய கிரீமியா மாநாட்டின் முடிவுகளுடனும் ஒன்றுபடுகிறது. அது ஸான்பிரான்சிஸ்கோவில் நடந்த சர்வதேச ஸ்தாபனம் குறித்த ஐக்கியநாடுகளின் மாநாட்டை வரவேற்கிறது. அது, சீன மக்களின் விருப்பத்தைத் தெரிவிக்கும் பொருட்டு இந்த மாநாட்டுக்கான சீனப் பிரதிநிதிக் குழுவில் தனது சொந்த பிரதிநிதியை நியமித்துள்ளது.

கோமிங்டாங் அரசாங்கம் சோவியத் யூனியன்பால் தனது பகைமையைக் கைவிட்டு, சீன—சோவியத் உறவுகளை விரைவாக மேம்படுத்த வேண்டுமென வலியுறுத்திக் கூறுகிறோம். சீனாவுடனான சமத்துவமற்ற உடன்படிக்கைகளை ரத்து செய்து புதிய, சமத்துவ உடன்படிக்கைகளைச் செய்துகொண்ட முதல்நாடு சோவியத் யூனியன்தான். 1924-ல் டாக்டர் சன்-யாட்-சென்னினால் கூட்டப்பட்ட கோமிங்டாங்கின் முதல் தேசிய மாநாடு நடந்த சமயத்திலும், அதையடுத்து வந்த வடக்கு படையெடுப்பிலும் விடுதலைக்கான சீன யுத்தத்துக்கு உதவி செய்த ஒரே நாடு சோவியத் யூனியன்தான். 1937-ல் ஜப்பானிய - எதிர்ப்பு யுத்தம் வெடித்தபோது ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக சீனாவுக்கு மீண்டும் உதவிய முதல்நாடு சோவியத் யூனியன்தான். இந்த உதவிக்கு சோவியத் அரசாங்கத்துக்கும் மக்களுக்கும் சீனமக்கள் நன்றி உடையவர்களாக உள்ளனர். சோவியத் யூனியன் பங்கெடுத்துக் கொள்ளாமல் பசிபிக் பிரச்சினைகளுக்கு முடிவான மற்றும் செம்மையான தீர்வை அடைவது சாத்தியமல்ல என நாம் நம்புகிறோம்.

படிப்பகம்

www.padippakam.com



நாம் நேச நாடுகள் அனைத்தின் அரசாங்கங்களையும் முதலாவதாக அமெரிக்கா மற்றும் இங்கிலாந்தின் அரசாங்கங்களையும் கேட்டுக் கொள்வது என்னவெனில், சீனமக்களின் குரலை காதுகொடுத்து கேட்க வேண்டும் என்பதும் அவர்களது விருப்பத்துக்கு மாறாக உள்ள வெளிநாட்டுக் கொள்கைகளைக் கடைபிடிப்பதன் மூலம் அவர்களுடனான நட்பை கெடுக்காதிருக்க வேண்டும் என்பதும்தான். எந்தவொரு வெளிநாட்டு அரசாங்கமாவது சீனப்பிற்போக்காளர்களுக்கு உதவி செய்து சீன மக்களின் ஜனநாயக இலட்சியத்தை எதிர்க்குமேயானால் அது பெருந்தவறை இழைத்ததாகும் என நாம் கருதுகிறோம்.

சீனாவுடனான தங்கள் சமத்துவமற்ற உடன்படிக்கைகளை கைவிட்டு புதிய, சமத்துவமான உடன்பாடுகளை செய்து கொள்வதில் வெளிநாட்டு அரசாங்கங்களால் எடுக்கப்படும் நடவடிக்கைகளை சீன மக்கள் வரவேற்கின்றனர். ஆயினும், சமத்துவமான உடன்படிக்கைகளைச் செய்து கொள்வது என்பதே சீனா உண்மையிலேயே அசல் சமத்துவத்தை பெற்றுவிட்டது என அர்த்தமாகாது. அசலான, உண்மையான சமத்துவத்தை வெளிநாட்டு அரசாங்கங்கள் ஒருபோதும் அன்பளிப்பாக தரமாட்டா; சீன மக்கள் தங்களின் சொந்த முயற்சிகளின்மூலம்தான் அதை வென்றெடுக்க வேண்டும்: அதை அடைவதற்கான வழி அரசியல் ரீதியாகவும், பொருளாதார மற்றும் கலாச்சார ரீதியாகவும் ஒரு புதிய ஜனநாயக சீனாவை கட்டியமைப்பதுதான்; இல்லையேல் அது வெறும் பெயரளவிலானதாகத்தான் இருக்கும்; உண்மையான சுதந்திரம் மற்றும் சமத்துவமாக அது இருக்காது. அதாவது கோமிங்டாங் அரசாங்கத்தின் தற்போதைய கொள்கையைப் பின்பற்றுவதன்மூலம் சீனா உண்மையான சுதந்திரம் மற்றும் சமத்துவத்தை ஒருபோதும் அடைய முடியாது.

ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்கள் தோற்கடிக்கப்பட்டு அவர்கள் நிபந்தனையின்றி சரணாகதி அடைந்த பின்னர் ஜப்பானிய பாசிசவாதமும் இராணுவ வாதமும், கூடவே அவற்றின் அரசியல், பொருளாதார, சமூக வேர்களும் முற்றாக அழித்தொழிக்கப்படும்வகையில் ஜப்பானிய மக்களின் எல்லா ஜனநாயக சக்திகளுக்கும் அவை தம் சொந்த ஜனநாயக அமைப்பை நிறுவிக்கொள்ள உதவுவது அவசியம் என நாம் கருதுகின்றோம். ஜப்பானிய மக்கள் ஒரு ஜனநாயக அமைப்பை பெறவில்லையென்றால் ஜப்பானிய பாசிசத்தையும் இராணுவ வாதத்தையும் முழுமையாகத் துடைத்தெறிவது அசாத்தியமாகும்; பசிபிக்கில் சமாதானத்தை நிலைநாட்டுவதும் அசாத்தியமாகும்.



கொரிய சுதந்திரம் சம்பந்தமாக கெய்ரோ மாநாட்டின் முடிவு சரியானதென நாம் கருதுகிறோம். விடுதலையை வென்றெடுக்க கொரிய மக்களுக்கு சீன மக்கள் உதவவேண்டும்.

இந்தியா சுதந்திரம் அடையும் என நாம் நம்புகிறோம். ஒரு சுதந்திரமான ஜனநாயக இந்தியாவின் தேவை இந்திய மக்களுக்கு மட்டுமல்ல உலகசமாதானத்துக்கும் அது அவசியமாக உள்ளது.

தென்கிழக்கு ஆசிய நாடுகளை—பர்மா, மலாயா இந்தோனேசியா, வியட்நாம், பிலிப்பைன்ஸ்—பொறுத்தவரை ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்கள் தோற்கடிக்கப்பட்ட பின்னர் இந்நாடுகளின் மக்கள் தங்கள் சொந்த சுதந்திர ஜனநாயக அரசுகளை நிறுவுவதற்கான தங்கள் உரிமையை பிரயோகிப்பர் என நாம் நம்புகிறோம். தாய்லாந்தைப் பொறுத்தவரை அது, ஐரோப்பாவில் உள்ள பாசிசவாத உப அரசுகளைப் போல நடத்தப்படவேண்டும்.

* * *

நமது குறிப்பான வேலைத்திட்டத்தின் பிரதான அம்சங்கள் பற்றி இவ்வளவு போதுமானது.

படிப்பகம்

www.padippakam.com



மீண்டும் சொல்வதானால், இந்தக் குறிப்பான வேலைத் திட்டத்தில் எந்தவொரு அம்சமும் நாடு முழுவதன் ஆதர வைப் பெற்றுள்ள ஒரு ஜனநாயக கூட்டு அரசாங்கம் இல்லா மல் ஒரு நாடு தழுவிய அளவில் வெற்றிகரமாக நிறைவேற்றப் பட முடியாது.

சீனா சம்பந்தப்பட்ட பிரச்சினைகளில் அதன் கருத்தைப் புறக்கணிக்கின்ற எந்தவொரு அரசியல் கட்சியோ அல்லது சமூகப் பிரிவோ அல்லது எந்தவொரு சீனரோ அல்லது வெளிநாட்டவரோ ஒரு கடுமையான தவறை செய்யவேண்டி யிருக்கும், நிச்சயம் தோல்விஅடைய வேண்டியிருக்கும் என்கிற ஒரு நிலையை சீன மக்களின் விடுதலை லட்சியத்துக்கான தனது இருபத்து நான்கு ஆண்டு காலப் போராட்டத்தில் சீன கம்யூனிஸ்ட் கட்சிஅடைந்துள்ளது. நமது கருத்துக்களை புறக்கணித்து தங்கள் சொந்த தான்தோன்றித்தனமான வழியைப் பின்பற்ற முயலும் மனிதர்கள் இருந்தனர், இன்னமும் இருக்கின்றனர்; அவர்கள் அனைவரும் போக்கிட மற்ற முடக்கில் மாட்டிக்கொண்டிருக்கின்றனர். ஏன்? நமது கருத்துக்கள் சீன மக்களின் நலன்களுடன் பொருந்துபவை யாக உள்ளன என்பதே இதற்குக் காரணம். சீன கம்யூனிஸ்ட் கட்சிதான் சீன மக்களின் மிக விசுவாசமான பிரதிநிதி, அதை மதிக்காத எவரும் உண்மையில் சீன மக்களை மதிக்கத் தவறுகின்றார், அவர் தோல்வியடைவது திண்ணம்.

**கோமிங்டாங் பகுதிகளிலான பணிகள்**

நான் நமது புரட்சியின் பொதுவான மற்றும் குறிப்பான வேலைத் திட்டங்கள் பற்றி ஒரு விரிவான விளக்கம் இப் போது கொடுத்துள்ளேன். இறுதியாக இந்தத் திட்டங்கள் சீனா முழுவதும் நடைமுறைப்படுத்தப்படும் என்பதில் ஐய மில்லை. இதுதான் சீன மக்களுக்கு ஒட்டுமொத்தத்தில் சர்வ தேசிய மற்றும் தேசிய நிலைமை திறந்துவிட்டுள்ள பாதை யாகும். எனினும் தற்போது கோமிங்டாங் பகுதிகளிலும் எதிரி கைப்பற்றியுள்ள பகுதிகளிலும், விடுதலையாக்கப் பட்ட பகுதிகளிலும், ஒன்றிலிருந்து ஒன்று நிலைமைகள்



வேறுபட்டுள்ளன; எனவே நமது வேலைத் திட்டத்தை அமுல்படுத்துவதில் அவற்றிற்கிடையேயான வேறுபாட்டை வேறுபடுத்தி நாம் பார்ப்பது அவசியமாகிறது. வேறுபட்ட சூழ்நிலைகள் வேறுபட்ட பணிகளைத் தோற்றுவிக்கின்றன. இந்தப் பணிகளில் சிலவற்றை நான் ஏற்கனவே மேலே விளக்கிக் கூறியுள்ளேன், அதேசமயம் இதர சிலவற்றுக்கு மேலும் விளக்கம் தேவைப்படுகிறது.

கோமிங்டாங் பகுதிகளில் தேசபக்த நடவடிக்கைகளில் ஈடுபட மக்களுக்குச் சுதந்திரம் இல்லை. ஜனநாயக இயக்கங் கள் சட்ட விரோதமாகக் கருதப்படுகின்றன. ஆயினும் பல்வேறு சமூக அடுக்குகளும், ஜனநாயகக் கட்சிகளும், தனிநபர்களும் வர வர அதிகமாக நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். சீன ஜனநாயக அணி கோமிங்டாங்கின் ஒரு கட்சி சர்வாதிகாரத்தை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்றும், ஒரு கூட்டு அரசாங்கத்தை நிறுவவேண் டும் என்றும் கோரி இந்த ஆண்டு ஜனவரியில் ஒரு கொள்கை அறிக்கை வெளியிட்டது. பல பிரிவுகளைச்சேர்ந்த மக்களும் இதே போன்ற பிரகடனங்களை வெளியிட்டுள்ளனர். கோ மிங்டாங்கிலும்கூட பலருக்கு தங்கள் சொந்தக் கட்சியின் முன்னணி அமைப்புகளின் கொள்கைகள்குறித்து சந்தேகமும் அதிருப்தியும் அதிகரித்து வருகிறது; மக்களிடமிருந்து தங்கள் கட்சி தனிமைப்பட்டிருக்கும் அபாயத்தை அவர்கள் நாளுக்கு நாள் அதிகமாக உணர்ந்து வருகின்றனர்; எனவே !அவர்கள் காலத்துக்கு ஏற்ற ஜனநாயக சீர்திருத்தங்களைக் கோரு கின்றனர். சுங்கிங்கிலும் இதர இடங்களிலும் தொழிலாளர் கள், விவசாயிகள் கலாச்சார வட்டாரங்கள், மாணவர்கள், கல்விவட்டாரங்கள், பெண்கள், தொழில் மற்றும் வர்த்தக வட்டங்கள், அரசாங்க உத்தியோகஸ்தர்கள் மத்தியிலும், சில போர் வீரர்கள் மற்றும் அதிகாரிகள் மத்தியிலும் கூட ஜன நாயக இயக்கங்கள் வளர்ந்து வருகின்றன. இந்த உண்மைகள் ஒடுக்கப்படும் அனைத்து அடுக்குகளின் ஜனநாயக இயக்கங் கள் ஒரு பொது குறிக்கோளின் மீது குவிந்து வருவதை

படிப்பகம்

www.padippakam.com



சுட்டிக் காட்டுகின்றன, தற்போதைய இயக்கத்தின் ஒரு பலவீனம் என்னவெனில், சமுதாயத்தின் அடிப்படையான பிரிவுகள் இன்னும் இதில் பெரிய அளவில் சேராதிருக்கின்றன என்பதும் மிக மிக முக்கியமான சக்திகள் அதாவது விவசாயிகள், தொழிலாளர்கள், போர்வீரர்கள், அரசாங்கக் கீழ்மட்ட ஊழியர்கள், ஆசிரியர்கள் ஆகியோர்— மிகக் கடுமையான துன்பத்தில் உள்ள இவர்கள்—இன்னும் ஸ்தாபனமாக்கப்படவில்லை என்பதும் ஆகும். மற்றொரு பலவீனம் என்னவெனில் இயக்கத்திலுள்ள ஜனநாயகப் பிரமுகர்களில் பலர் அடிப்படைக் கொள்கையில் அதாவது ஒரு ஜனநாயக வெகுஜன அடிப்படையில் போராட்டம் நடத்துவதன் மூலம் சூழ்நிலையில் ஒரு மாற்றத்தை கொண்டுவரவேண்டும் என்பதில் தெளிவற்றவர்களாகவும் தயக்கமுடையவர்களாகவும் உள்ளனர் என்பதாகும். ஆயினும் ஒடுக்கப்படும் தட்டுக்கள், அரசியல் கட்சிகள், சமுதாயப் பிரிவுகள் ஆகியவை படிப்படியாக விழிப்படையவும் ஐக்கியப்படவும் புறவய சூழ்நிலைமை நிர்ப்பந்திக்கிறது. கோமிங்டாங் அரசாங்கத்தின் அடக்குமுறை எதுவும் இந்த இயக்கத்தின் முன்னேற்றத்தை தடுத்து நிறுத்திவிட முடியாது

கோமிங்டாங் பகுதிகளில் ஒடுக்கப்படும் தட்டுகள், அரசியல் கட்சிகள், சமூகப் பிரிவுகள் ஆகியவை தேசிய ஐக்கியத்தை அடைய போராடுவதற்காக, ஒரு கூட்டு அரசாங்கத்தை நிறுவுவதற்காகவும், ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களைத் தோற்கடிப்பதற்காகவும், ஒரு புதிய சீனத்தை கட்டியமைக்க ஒரு பரந்த அளவில் தங்கள் ஜனநாயக இயக்கத்தை விரிவுப்படுத்துவதற்காகவும் வேண்டி தங்களது சிதறிகிடக்கும் சக்திகளை படிப்படியாக ஒன்றிணைக்க வேண்டும். சீன கம்யூனிஸ்ட் கட்சியும் விடுதலையாக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மக்களும் தங்களால் முடிந்த வழிகளிலெல்லாம் அவர்களுக்கு உதவி செய்யவேண்டும்.

கோமிங்டாங் பகுதிகளில் கம்யூனிஸ்டுகள் ஜப்பானுக்கு எதிரான ஒரு பரந்த தேசிய ஐக்கிய முன்னணி என்ற கொள்கையைத் தொடர்ந்து கடைபிடிக்க வேண்டும்.



பொது குறிக்கோள்களுக்கான போராட்டத்தில் நேற்று நம்மை எதிர்த்திருப்பினும் எம்மை இன்று எதிர்க்காதவர்கள் யாராயினும் அவர்களுடன் நாம் ஒத்துழைக்க வேண்டும்.

## ஜப்பானியர் ஆக்கிரமித்துள்ள பகுதிகளிலான பணிகள்

கைப்பற்றப்பட்டுள்ள பகுதிகளில் சமயம் வரும்போது வெளியிலிருந்து தாக்கும் படைகளுடன் ஒத்துழைத்து ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களைத் துடைத்தெறியும் வகையில், பிரஞ்சு, இத்தாலிய உதாரணங்களைப் பின்பற்றி ஸ்தாபனங்களையும், இரகசியப் படைகளையும் உருவாக்கி ஆயுதந்தாங்கிய எழுச்சிகளுக்குத் தயாராகுமாறு ஜப்பானை எதிர்க்கும் அனைவருக்கும் கம்யூனிஸ்டுகள் அறைகூவல் விட வேண்டும். ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில், ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்கள் மற்றும் அவர்களது அடிவருடிகளின் கைகளில் சிக்கி கொடுமைகளுக்கும், கொள்ளைக்கும், கற்பழிப்புக்கும், அவமானங்களுக்கும் நமது சகோதரர்களும் சகோதரிகளும் ஆளாகிய செயலானது சீனர்கள் அனைவரிடையிலும் கொழுந்து விட்டெரியும் கோபத்தை கிளப்பியுள்ளது; பழிவாங்கும் நேரம் விரைவாக நெருங்கி வந்து கொண்டிருக்கிறது. ஐரோப்பிய போர் அரங்கிலான வெற்றிகளும் நமது எட்டாவது வழி சேனை மற்றும் புதிய நான்காவது வழிச் சேனைகள் பெற்றுள்ள வெற்றிகளும் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள மக்களிடையே ஜப்பானிய எதிர்ப்பு உணர்ச்சியை உயர்த்தியுள்ளன. அவர்கள் இயன்ற அளவு விரைவாக விடுதலை அடைவதற்கு உடனே ஸ்தாபனமாக அமைய விரும்புகின்றனர். எனவே விடுதலையாக்கப்பட்ட பகுதிகளில் உள்ளதுபோலவே ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளிலும் அதே முக்கியத்துவத்துடன் நமது பணியை உயர்த்த வேண்டும். நமது பணியாற்றும் ஊழியர்களில் பெரும் எண்ணிக்கையிலானோரை அங்கே பணியாற்ற அனுப்பி வைக்கவேண்டும். அங்குள்ள மக்களில் செயல் துடிப்புள்ளவர்களில் பெரும் எண்ணிக்கையிலானோர்

படிப்பகம்

www.padippakam.com



பயிற்சியளிக்கப்பட்டு மேல்நிலைக்கு உயர்த்தப்படவேண்டும், அவர்கள் ஸ்தல பணிகளில் பங்கெடுத்துக்கொள்ளவேண்டும். மற்ற எந்த பிரதேசத்தையும் விட நீண்ட காலத்துக்கு முன்பே கைப்பற்றப்பட்டவையும், ஒரு முக்கிய தொழில் மையமாக உள்ளதும், ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களின் படைகள் குவிக்கப்பட்ட பகுதியாகவும் உள்ளதுமான நான்கு வடகிழக்கு மாகாணங்களில் நமது தலைமறைவுப் பணியை நாம் தீவிரப்படுத்தவேண்டும். இழந்த இந்தப் பகுதிகளைத் திரும்பப் பெறும் நோக்கத்துடன் நாம் வடகிழக்கிலிருந்து தெற்குக்கு தப்பி ஓடிவந்த மக்களுடன் நமது ஒற்றுமையை பலப்படுத்த வேண்டும்.

ஆக்கிரமிக்கப்பட்டுள்ள எல்லா பகுதிகளிலும் பரந்த ஐக்கிய முன்னணி கொள்கையை கம்யூனிஸ்டுகள் பின்பற்ற வேண்டும். பொது எதிரியைத் தூக்கியெறிவதற்காக அவர்கள், ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களையும் அவர்களது அடிமைத்தனமான கைக்கூலிகளையும் எதிர்க்கின்றவர் யாராயினும் அவருடன்ஒன்றுபடவேண்டும்.

பொம்மைப் படைகளையும் பொம்மைப் போலீசையும், நம் நாட்டவரை எதிர்த்து எதிரிக்கு உதவி செய்கின்ற இதர நபர்கள் அனைவரையும் நாம், அவர்கள் விரைவிலேயே தங்கள் செயல்களின் குற்றத் தன்மையை அங்கீகரிக்க வேண்டும் என்றும், உரிய நேரத்தில் மனம் திருந்தி பகைவனுக்கு எதிராக தங்கள் நாட்டு மக்களுக்கு உதவுவதன் மூலம் பிராயச்சித்தம் தேடிக்கொள்ள வேண்டும் என்றும்எச்சரிக்கை செய்கிறோம். இல்லையேல் எதிரி தகர்ந்து விழும் நாளில் அவர்கள் நாட்டுக்கு நிச்சயம் பதில் சொல்லியாக வேண்டும்.

தவறான வழியில் இட்டுச் செல்லப்பட்டுள்ள பரந்துபட்ட மக்களை தேசிய எதிரிக்கு எதிராக நம் பக்கம் வென்றெடுக்க கம்யூனிஸ்டுகள் வெகுஜன ஆதரவைக் கொண்டுள்ள பொம்மை ஸ்தாபனங்களிடையே எடுத்துச் சொல்லிஇணங்க வைக்கும் பிரச்சாரத்தை மேற்கொள்ள வேண்டும். அதே



நேரத்தில் மிகக் கொடுமையான குற்றங்களைப் புரிந்துள்ள கழிவிரக்கமற்ற ஒத்துழைப்பாளர்கள், இழக்கப்பட்ட பகுதிகள் திரும்பப் பெறப்படும்போது அவர்கள் நீதிப்படி தண்டனை அடையும் பொருட்டு அவர்களைப்பற்றியசான்று அனைத்தும் சேகரிக்கப்பட வேண்டும்.

சீன மக்களுக்கும், கம்யூனிஸ்ட் கட்சிக்கும், எட்டாவது வழி சேனைக்கும், புதிய நான்காவதுசேனைக்கும், மக்களது இதர ஆயுதப் படைகளுக்கும் எதிராக போராடும் வெளிப்படையான கூட்டாளிகளை அணிதிரட்டியதன் மூலம் நாட்டுக்குத் துரோகம் செய்திருக்கின்ற கோமிங்டாங் பிற்போக்குவாதிகள் உரிய நேரத்தில் மனம் திருந்துமாறு எச்சரிக்கப்பட வேண்டும். இல்லையேல், இழந்த பகுதிகள் மீட்கப்படும்போது அவர்கள் தங்களது குற்றங்களுக்காக ஜப்பானிய உடந்தையாளர்களுடன் சேர்த்து கண்டிப்பாக தண்டிக்கப்பட வேண்டும்; அவர்களுக்கு கருணையே காட்டக் கூடாது.

**விடுதலையாக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பணிகள்**

நமது கட்சி தனது புதிய ஜனநாயக வேலைத்திட்டம் முழுவதையும் விடுதலையாக்கப்பட்ட பகுதிகளில் பளிச்செனத் தெரியும் பயன்களுடன்நடைமுறைப்படுத்தியுள்ளது, எனவே பிரம்மாண்டமான ஜப்பானிய—எதிர்ப்பு பலத்தையும் கட்டியமைத்துள்ளது; இப்போது முதல் அந்தப் பலம் வளர்த்தெடுக்கப்பட வேண்டும், ஒவ்வொரு வழியிலும் அது உறுதிபடுத்தப்படவேண்டும்.

இப்போது நிலவும் சூழ்நிலைமையில் விடுதலையாக்கப்பட்ட பகுதிகளை விரிவுபடுத்தும் பொருட்டும் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளைக் குறைக்கும் பொருட்டும் ஜப்பானியர் மற்றும் கைப்பொம்மைகளிடமிருந்து கைப்பற்ற முடியக் கூடிய எல்லா பகுதிகளிலும் விடுதலையாக்கப்பட்ட பகுதிகளின் துருப்புகள் விரிவான தாக்குதல்களைத் தொடுக்க வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



ஆனால் அதே சமயம், எதிரி இன்னும் பலமாகத்தான் இருக்கிறான் என்பதையும் விடுதலையாக்கப்பட்ட பகுதிகளின் மீதுமேலும் தாக்குதல்கள்தொடுக்கலாம்என்பதையும் மனதில் கொள்ள வேண்டும். நமது பகுதி மக்களும் சேனையும் அவனது தாக்குதல்களை முறியடிக்க எப்போதும் தயாராக இருக்கவேண்டும்; இந்தப் பகுதிகளை உறுதிப்படுத்த அனைத்து வழிகளிலும் முயலவேண்டும்.

விடுதலையாக்கப்பட்ட பகுதிகளின் சேனைகளையும் கொரில்லாக் கிளைகளையும் மக்கள் குடிபடைகளையும் தற்காப்புப் படைகளையும் நாம் விரிவுபடுத்தவேண்டும்; ஆக்கிரமிப்பாளர்களை இறுதியாகத் தோற்கடிக்கும் பொருட்டு போதிய பலத்தை திரட்டிக் கொள்வதற்காக இவற்றின் பயிற்சி மற்றும் உறுதிபடுத்தலின் வேகத்தை துரிதப்படுத்துவதன்மூலம் அவற்றின் போரிடும் திறனை அதிகரிக்க வேண்டும்.

விடுதலையாக்கப்பட்ட பகுதிகளில் உள்ள இராணுவம் அரசாங்கத்தை ஆதரித்து மக்களைப்பேணிக்காக்கவேண்டும்; அதே சமயம் ஜனநாயக அரசாங்கங்கள் இராணுவத்தை ஆதரிக்கும் பணியிலும் ஜப்பானை எதிர்த்து போரிடும் போர் வீரர்களின் குடும்பங்களின் நலனில் அக்கறை செலுத்துவதிலும் மக்களை ஈடுபடுத்த வேண்டும். இந்த வழியின் வாயிலாக படைக்கும் மக்களுக்கும் இடையிலான உறவுகள் மேலும் மேம்பாடடையும்.

ஸ்தல கூட்டு அரசாங்கங்கள் மற்றும் வெகுஜன ஸ்தாபனங்களின் பணியில் கம்யூனிஸ்டுகள் புதிய—ஜனநாயக வேலைத் திட்டத்தின் அடிப்படையில் அனைத்து ஜப்பானிய எதிர்ப்பு ஜனநாயக வாதிகளுடனும் நெருக்கமாக ஒத்துழைப்பதைத் தொடர வேண்டும்.

இதேபோல இராணுவ வேலையிலும் கம்யூனிஸ்டுகள் நம்முடன் ஒத்துழைக்க விரும்புகின்ற ஜப்பானிய—எதிர்ப்பு



ஜனநாயகவாதிகள்— விடுதலையாக்கப்பட்ட பகுதியின் படைகளில் உறுப்பினர்களாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் — அனைவருடனும் நெருக்கமாக ஒத்துழைக்க வேண்டும்.

போர் மற்றும் உற்பத்திக்காக தொழிலாளிகள், விவசாயிகள் இதர உழைக்கும் மக்கள் ஆகியோரின் உற்சாகத்தை அதிகரிப்பதற்கு நாம் குத்தகையைக் குறைத்தல், வட்டியைக் குறைத்தல், தொழிலாளிகள் மற்றும் அலுவலக ஊழியர்களின் ஊதியத்தைஅதிகரித்தல் என்ற கொள்கையை முழுமையாக அமுல்படுத்த வேண்டும். விடுதலையாக்கப்பட்ட பகுதிகளில் கட்சி ஊழியர்கள் பொருளாதார பணியைச் செய்ய மிக்க சிரமமெடுத்து கற்றுக் கொள்ள வேண்டும். விவசாயம், தொழில், வர்த்தகம் ஆகியவற்றின் விரிவான வளர்ச்சிக்கும், போர்வீரர்கள் மற்றும் மக்களின் வாழ்க்கைத்தரத்தின் மேம்பாட்டிற்கும் கிடைக்கக்கூடிய சக்திகள் அனைத்தும் அணிதிரட்டப்பட வேண்டும். இந்த நோக்கத்திற்காக கடும் உழைப்பு முன்னுதாரணங்களைப் பின்பற்றும் இயக்கங்கள் இருக்கவேண்டும். கடும் உழைப்புத் தீரர்களுக்கும் கடும் உழைப்பில் முன்மாதிரியாகத் திகழும் தொழிலாளர்களுக்கும் அன்பளிப்புகள் அளிக்கப்பட வேண்டும். ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்கள் நகரங்களிலிருந்து விரட்டியடிக்கப்படும்போது நமது ஊழியர்கள் நகர்ப்புறப் பொருளாதாரப் பணியை எப்படி செய்வது என்பதை விரைவாகக் கற்றுக் கொள்ள வேண்டும்.

விடுதலையாக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மக்களின் அரசியல் உணர்வு மட்டத்தை, அனைத்துக்கும் மேலாக பரந்து பட்ட தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் போர் வீரர்களின் அரசியல் உணர்வு மட்டத்தை உயர்த்தும் பொருட்டும், பெருமளவிலான கட்சி ஊழியர்களுக்கு பயிற்சி அளிக்கும் பொருட்டும், நமது கலாச்சார மற்றும் கல்விப் பணி



படிப்பகம்

www.padippakam.com



வளர்ந்தெடுக்கப்பட்ட வேண்டும். இந்தப் பணியை முன்னெடுத்துச் செல்லும் வேலையில் ஈடுபட்டுள்ளவர்கள் நிலவுகின்ற கிராமப்புற நிலைமைகளுக்கு ஏற்ற நாட்டுப்புற மக்களின் தேவைகள் மற்றும் விருப்பங்களுக்கு ஏற்ற வடிவங்களை மேற்கொண்டு உள்ளடக்கங்களை தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும்.

விடுதலையாக்கப்பட்ட பகுதிகளில் நமது வேலைகள் அனைத்திலும் மனித சக்தியும், பொருள், வளங்களும் சிக்கனமாகப் பயன்படுத்தப்பட வேண்டும். ஒவ்வொரு துறையிலும் நீண்ட கால் திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும்; துஷ்பிரயோகமும் விரயமும் தவிர்க்கப்பட் வேண்டும். ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களைத் தோற்கடித்தல் புதிய சீனாவை கட்டியமைத்தல் ஆகிய இரண்டுக்குமே இது தேதைப்படுகிறது.

விடுதலையாக்கப்பட்ட பகுதிகளில் நமது வேலை முழுவதிலும் நாம் ஸ்தல மக்களுக்கு ஸ்தல விவகாரங்களை நிர்வகிப்பதற்கு உதவீ செய்வதற்கும் சிறந்த ஸ்தல மக்களுக்கிடையிலான ஸ்தல கட்சி ஊழியர்கள் பலரை பண்படுத்தவும் பெரும் அக்கறை செலுத்தவேண்டும். வேறு இடங்களிலிருந்து வரும் தோழர்கள் ஸ்தல மக்களுடன் தங்களை ஒன்றுபடுத்திக் கொள்ளாவிட்டால், ஸ்தல கட்சி ஊழியர்களும் முழு மனதுடனும் சிரமமெடுத்தும் உதவி செய்யாவிட்டால், நிலைமைக்கு பொருத்தமான வழிகளில் அவர்கள் இவ்வாறு செய்யாவிட்டால், அவர்கள் அவர்களை தங்கள் சொந்த சகோதரர்களாகவும் சகோதரிகளாகவும் பேணா விட்டால், நாட்டுப்புற பகுதிகளில் ஜனநாயகப் புரட்சியின் மாபெரும் பணியை நிறைவேற்றுவது சாத்தியமாகாது.

எட்டாவது வழிச்சேனை, புதிய நான்காவது இராணுவம், மக்களின் இதர ஆயுதப்படைகள் ஆகியவற்றில் ஏதாவதொன்றின் ஒரு பிரிவு ஓரிடத்திற்கு வருமேயானால், அது குடிப்படைகள் மற்றும் தற்காப்புப் படைகள் மட்டுமல்ல



ஸ்தல துருப்புகள் மற்றும் பிராந்தியப் படைகள் உட்பட ஸ்தல கட்சி ஊழியர்கள் தலைமையிலான சக்திகளை அமைப்பாக்க மக்களுக்கு உடனடியாக உதவ வேண்டும். ஸ்தல மக்களின் தலைமையிலான நிரந்தர படைகளையும், நிரந்தர இராணுவ அமைப்புகளையும் இறுதியில் உருவாக்குவதை இது சாத்தியமாக்கும். இது மிகமிக முக்கியமான பணியாகும். இது பூர்த்தி செய்யப்படாமல் உறுதியான ஜப்பானிய- எதிர்ப்பு தளப்பகுதிகளைக் கட்டியமைக்கவும் முடியாது; மக்கள் இராணுவத்தை விரிவுபடுத்தவும் முடியாது.

இதர இடங்களிலிருந்து வருகின்ற புரட்சிகரத் தொழிலாளர்களையும் மக்கள் படைகளையும் ஸ்தல மக்கள் தங்கள் பங்குக்கு மனப்பூர்வமாக வரவேற்று உதவி செய்ய வேண்டும் என்பதும் உண்மைதான்.

மறைமுகமான நாசக்காரர்களைக் கையாளும் பிரச்சினையில் ஒவ்வொருவரும் உஷாராக இருக்க வேண்டும். தேசிய லட்சியத்தின் வெளிப்படையான எதிரிகளையும் நாசக்காரர்களையும் அடையாளம் காண்பதும் கையாள்வதும் சுலபம்; ஆனால் மறைமுகமாக சதிவேலை செய்வோரை கண்டறிவதும், கையாள்வதும் கடினம். ஆகவே நாம் இந்த விஷயத்தை மிகமிக பொறுப்புடன் கவனிக்க வேண்டும்; அதே சமயம் அத்தகைய நபர்களைக் கையாள்வதில் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

சீனாவின் விடுதலையாக்கப்பட்ட பகுதிகளில் மத நம்பிக்கைச் சுதந்திரம் என்ற கோட்பாட்டிற்கிணங்க மதங்கள் அனைத்தும் அனுமதிக்கப்படுகின்றன. புராட்டஸ்டிஸம், கத்தோலிக்கம், இஸ்லாம், பௌத்தம் மற்றும் இதர மதங்களை நம்புவோர் அனைவரும் அவர்கள் அரசாங்க சட்டத்தின்படி நடந்து கொள்ளும் வரை அவர்களுக்கு மக்கள் அரசாங்கத்தின் பாதுகாப்பு உண்டு. நம்புவதற்கோ நம்பாமல் இருப்பதற்கோ ஒவ்வொருவருக்கும் சுதந்திரம் உண்டு; நிர்ப்பந்தமோ அல்லது பாரபட்சமோ அனுமதிக்கப்படுவதில்லை.

படிப்பகம்

www.padippakam.com



பல்வேறு விடுதலையாக்கப்பட்ட பகுதிகளின் நடவடிக்கைகளை ஒன்றிணைத்தல், எதிர்ப்பு யுத்தத்தில் அவர்களது பணியை பலப்படுத்துதல், கோமிங்டாங் பகுதிகளில் மக்களின் ஜப்பானிய எதிர்ப்பு ஜனநாயக இயக்கத்திற்கு உதவுதல் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் மக்களின் தலைமறைவு ஆயுதப் படைகளுக்கு உதவுதல், தேசிய ஐக்கியத்தை உயர்த்துதல், ஒரு கூட்டு அரசாங்கத்தை அமைத்தல் ஆகிய பிரச்சினைகளை விவாதிப்பதற்கு எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் விடுதலையாக்கப்பட்ட பகுதிகளின் ஒரு மக்கள் மாநாட்டை யேனானில் கூட்டுமாறு விடுதலை யாக்கப்பட்ட பகுதிகளின் மக்களுக்கு நமது காங்கிரஸ் ஒருயோசனையை முன்வைக்க வேண்டும்.[14] ஜப்பானை எதிர்ப்பதற்கும் நாட்டைக் காப்பதற்கும் தேசந்தழுவிய மக்கள் போராட்டத்தில் இப்போது சீனாவின் விடுதலையாக்கப்பட்ட பகுதிகள் ஈர்ப்பின் மையமாக ஆகியுள்ளன; நாடு முழுவதும் உள்ள பரந்துபட்ட மக்கள் நம் மீது தங்கள் நம்பிக்கையை வைத்துள்ளனர், அவர்களை ஏமாற்றாமல் இருப்பது நமது கடமை. இத்தகையதொரு மாநாடு தேசிய விடுதலைக்கான சீன மக்களின் லட்சியத்துக்கு பெரும் உத்வேகத்தை கொடுக்கும்.

## V. கட்சி முழுவதும் ஐக்கியப்படட்டும், தன் பணிகளை நிறைவேற்ற போராடட்டும்!

தோழர்களே! நாம் நமது பணிகளையும் அவற்றை நிறைவேற்றுவதற்கான கொள்கைகளையும் இப்போது புரிந்து கொண்டுள்ளோம் என்பதால் இந்தக் கொள்கைகளை நிறைவேற்றுவதிலும் இந்தப் பணிகளை நடைமுறைப்படுத்துவதிலும் நமது கண்ணோட்டம் என்னவாக இருக்க வேண்டும்?

தற்போதைய சர்வதேச மற்றும் உள்நாட்டு நிலைமை நமக்கும் ஒட்டுமொத்தமாக சீன மக்களுக்கும் பிரகாசமான வாய்ப்புகளை முன்வைக்கிறது; முன்னெப்போதும் கண்டிராத சாதகமான நிலைமைகளை அளிக்கிறது. இது வெளிப்படையானது, சந்தேகத்திற்கிடமற்றது. ஆனால் அதே நேரத்தில் இன்னும் கடுமையானசிரமங்கள் உள்ளன. பிரகாசமான பக்கத்தை மட்டும் பார்த்து சிரமங்களைப் பார்க்காத யாரொருவரும் கட்சிப் பணிகளை நிறைவேற்றுவதற்கு சக்திவாய்ந்த முறையில் போராட முடியாது.

சீன மக்களுடன் ஒன்றிணைந்து நமது கட்சி, ஜப்பானுக்கு எதிரான எதிர்ப்பு யுத்தம் நடந்த எட்டு ஆண்டுகள் உட்பட கட்சி வரலாற்றின் இருபத்து நான்கு ஆண்டுகளில் சீன தேசத்துக்கு அளவிடற்கரிய பலத்தை சேர்த்துள்ளது; நமது பணியின் வெற்றி தெளிவாகவும் சந்தேகத்திற்கிடமின்றியும் உள்ளது. ஆனால் அதே நேரத்தில் இன்னும் நமது பணியில் குறைகள் இருக்கின்றன. வெற்றியின் பக்கத்தை மட்டும் பார்த்து குறைகளின் பக்கத்தை பார்க்காத யாரொருவரும் அதேபோல் கட்சிப் பணிகளை நிறைவேற்ற சக்திவாய்ந்த முறையில் போராட முடியாது.

படிப்பகம்

www.padippakam.com



சீன கம்யூனிஸ்ட் கட்சி 1921ல் அது பிறந்தது முதற் கொண்டு இருபத்து நான்கு ஆண்டுகளில் மூன்று மாபெரும் போராட்டங்கள் — வடக்கு படையெடுப்பு, விவசாயப் புரட்சிப்போர், இன்னும் நடந்து கொண்டிருக்கிற ஜப்பானிய எதிர்ப்புப் போர்— வழியே சென்றுள்ளது. தொடக்கத்திலிருந்தே நமது கட்சி மார்க்சிய - லெனினிய தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது; ஏனெனில், மார்க்சிய - லெனினியமே உலகப் பாட்டாளி வர்க்கத்தின் மிகமிக சரியான மற்றும் மிகமிக புரட்சிகரமான விஞ்ஞான சிந்தனையின் ஒட்டுமொத்த உருவமாக உள்ளது. மார்க்சிய - லெனினிய உலகளாவிய உண்மை சீனப் புரட்சியின் ஸ்தூலமான நடைமுறையுடன் ஒன்றுபடத் தொடங்கியபோது சீனப்புரட்சி முற்றிலும் புதியதொரு வண்ணத்தைப் பெற்றது; புதிய ஜனநாயகத்தின் முழு வரலாற்றுக் கட்டம் தோன்றியது. மார்க்சிய - லெனினிய தத்துவத்தை ஆயுதமாகக் கொண்ட சீனக் கம்யூனிஸ்ட் கட்சி, சீன மக்களுக்கு ஒரு புதிய வேலைப் பாணியை, அதாவது, நடைமுறையுடன் தத்துவத்தை அவசியமாக ஒன்றிணைக்கக்கூடிய, வெகு ஜனங்களுடன் நெருக்கமான தொடர்புகளை ஏற்படுத்தக் கூடிய, சுயவிமர்சனத்தை கையாளக்கூடிய ஒரு புதிய வேலைப் பாணியை கொண்டு வந்துள்ளது.

உலகம் முழுமையும் பாட்டாளி வர்க்க போராட்டத்தின் நடைமுறையை பிரதிபலிக்கின்ற இந்த மார்க்சிய -லெனினிய சர்வ வியாபக உண்மை, சீனப் பாட்டாளி வர்க்கம் மற்றும் மக்களது புரட்சிகரப் போராட்டத்தின் ஸ்தூலமான நடைமுறையுடன் இணைக்கப்படும்போது சீன மக்களின் வெல்லப் பட முடியாத ஆயுதமாக ஆகின்றது. சீனக் கம்யூனிஸ்ட் கட்சி இதை சாதித்துள்ளது. இந்த கோட்பாட்டுக்கு எதிரான வரட்டுவாதம் மற்றும் அனுபவவாதத்தின் ஒவ்வொரு வெளிப்பாட்டிற்கும் எதிரான உறுதியான போராட்டத்தினூடே நமது கட்சி வளர்ந்து முன்னேறியுள்ளது. சர்வ வியாபக உண்மை என அனுபவவாதம் அரைகுறை அனுப



வத்தை தவறாகக் கொள்கின்ற அதே சமயத்தில் வரட்டு வாதம் ஸ்தூலமான நடைமுறையிலிருந்து பிரிந்துவிடுகிறது. இரண்டு வகைப்பட்ட சந்தர்ப்பவாத சிந்தனைகளுமே மார்க்சியத்துக்கு எதிராக உள்ளன. நமது கட்சி தனது இருபத்து நான்கு ஆண்டு போராட்டக் காலத்தில் இத்தகைய தவறான சிந்தனையை வெற்றிகரமாக எதிர்த்துப் போராடியுள்ளது; அது இன்னும் அவ்வாறு செய்துவருகிறது; இவ்வாறாக, அது தன்னைத்தானே தத்துவரீதியாக பெரிதும் உறுதிப்படுத்திக் கொண்டுள்ளது. நமது கட்சி இப்போது 12,10,000 உறுப்பினர்களைப் பெற்றுள்ளது. எதிர்ப்பு யுத்தத்தின்போது மிகப் பெரும்பான்மையோர் சேர்ந்தனர். அவர்களது தத்துவத்தில் பல்வேறு குறைகள் உள்ளன: போருக்கு முன்பு கட்சியில் சேர்ந்த உறுப்பினர்களில் சிலருக்கும் இதுவே பொருந்தும். கடந்த சில ஆண்டுகளாக குறைகளைப் போக்கும் இந்தப்பணி வெற்றிகரமாக இருந்துள்ளது; இந்தக் குறைகளைப் போக்குவதை நோக்கி வெகு தொலைவு சென்றுள்ளது. இந்தப்பணி தொடரப்பட வேண்டும்; ''எதிர்காலத் தவறுகளைத் தவிர்ப்பதற்கு கடந்தகால தவறுகளிலிருந்து படிப்பினைப் பெறுதல்'' ''நோயாளியைப் பாதுகாப்பதற்கு நோயைக் குணப்படுத்துதல்'' என்ற உணர்வில் இன்னும் விரிவான அளவில் கட்சிக்குள் தத்துவார்த்தப்பணி அபிவிருத்தி செய்யப்பட வேண்டும், தத்துவத்துக்கும் நடைமுறைக்கும் இடையிலான நெருக்கமான பிணைப்பு நமது கட்சியை மற்றெல்லா கட்சியிலிருந்தும் வேறுபடுத்திக் காட்டுகின்ற ஓர் அடையாளச் சின்னமாகும் என்பதை எல்லா மட்டத்திலும் உள்ள முன்னணி கட்சி ஊழியர்கள் புரிந்து கொள்ளுமாறு நாம் செய்ய வேண்டும். எனவே, மாபெரும் அரசியல் போராட்டத்துக்காக கட்சி முழுவதையும் ஐக்கியப்படுத்துவதில் பற்றிக் கொள்ள வேண்டிய மையமான கண்ணி தத்துவார்த்தக் கல்விதான். இது செய்யப்படாவிட்டால் கட்சி தனது அரசியல் பணிகளில் எதையும் நிறைவேற்ற முடியாது.

படிப்பகம்

www.padippakam.com



நமது அரசியல் கட்சியை இதர அரசியல்கட்சிகளிலிருந்து பிரித்துக் காட்டும் இன்னொரு அடையாளச் சின்னம் யாதெனில் பரந்துபட்ட வெகுஜனங்களுடன் நாம் மிக நெருக்கமான உறவுகளைக் கொண்டுள்ளோம் என்பதாகும். நமது தொடக்கப்புள்ளியே மக்களுக்கு மனப்பூர்வமாக சேவை செய்வதும், ஒரு கணமும் ஒருபோதும் மக்களிடமிருந்து நம்மை நாம் பிரித்துக் கொள்ளாதிருப்பதும், எல்லா விஷயங்களிலும் தனி நபர்கள் அல்லது தனிப் பிரிவுகளின் நலன்களிலிருந்து அல்லாமல் மக்களின் நலன்களிலிருந்து தொடங்குவதும், மக்களுக்கான நமது பொறுப்பின் அடையாளத்தைப் புரிந்துகொள்வதும், முன்னணி கட்சி அமைப்புகளுக்கான நமது பொறுப்பின் அடையாளத்தைப் புரிந்து கொள்வதுமாகும். கம்யூனிஸ்டுகள் எப்போதுமே உண்மையின் பக்கம் நிற்கத் தயாராயிருக்க வேண்டும்; ஏனெனில் மக்களது நலன்களில் உண்மை இருக்கிறது. கம்யூனிஸ்டுகள் எந்நேரமும் தங்கள் தவறுகளைத் திருத்திக்கொள்ள தயாராயிருக்கவேண்டும்;ஏனெனில் தவறுகள் மக்களின் நலன்களுக்கு எதிராக உள்ளன. இருபத்து நான்கு ஆண்டுகால அனுபவம் நமக்கு தெரிவிப்பது என்னவென்றால் ஒரு குறிப்பிட்ட காலம் மற்றும் இடத்தில் சரியான பணி, கொள்கை மற்றும் வேலைமுறை மக்களது தேவைகளுக்கு பொருத்தமானவையாக உள்ளன என்பதும், மக்களுடனான நமது பிணைப்புகளை மேலும் பலப்படுத்துகின்றன என்பதும், ஒரு குறிப்பிட்ட காலம் மற்றும் இடத்தில் தவறான பணி, கொள்கை மற்றும் வேலைமுறை மக்களது தேவைகளுக்கு பொருத்தமற்றவையாக உள்ளன என்பதும் மக்களிடமிருந்து நம்மைப் பிரித்து விடுகிறது என்பதாகும். வரட்டுவாதம், அனுபவவாதம், கட்டளைவாதம், வால்பிடித்தல் வாதம், குறுங்குழுவாதம், அதிகாரத்துவம், பணியில் அகங்காரப் போக்கு போன்ற தீமைகள் நிச்சயம் தீங்கு பயப்பவையாகவும் சகித்துக் கொள்ள முடியாதவையாகவும் இருக்கக் காரணம் யாதெனில், இந்தத் தீமைகளால் தாக்கத்துக்குள்ளான எவரும் அவற்றை விட்டொழிக்க



வேண்டியதன் காரணம் யாதெனில் அவை நம்மை மக்களிடமிருந்து பிரித்துவிடுகின்றன என்பதுதான். நமது மாநாடு நமது கட்சியை விழிப்புடனிருக்குமாறும், எந்தத் தோழர் எந்த ஸ்தானத்தில் இருந்தாலும் அவர் மக்களிடமிருந்து பிரியாதபடி பார்த்துக் கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு தோழரும் மக்களை நேசிக்க வேண்டுமென்றும், மக்களின் குரலை கவனமாகக் காதுகொடுத்து கேட்கவேண்டும் என்றும் அவர் எங்கே சென்றாலும் மக்களுடன் தன்னை ஐக்கியப்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும், அவர்களுக்கு மேலாக தன்னை வைத்துக் கொள்ளாமல் அவர்களில் ஒருவனாக அவர்களுடன் ஒன்று கலந்துவிட வேண்டும் என்றும்; அவர்களது தற்போதைய மட்டத்துக்கு ஏற்ப அவர்களை விழித்தெழச் செய்ய வேண்டும் என்றும்; அல்லது அவர்களது அரசியல் உணர்வை உயர்த்த வேண்டும் என்றும்; சுயமாக தாங்களே முன்வந்து தங்களைத் தாங்களே படிப்படியாக ஸ்தாபனமாக்கிக் கொள்ள அவர்களுக்கு உதவவேண்டும் என்றும்; குறிப்பிட்ட காலம் மற்றும் இடத்தில் உள் மற்றும் வெளி சூழ்நிலைமைகளால் அனுமதிக்கப்படுகின்ற அவசியமான போராட்டங்கள் அனைத்தையும் தொடங்கி வைக்க வேண்டும் என்றும் நமது மாநாடு போதிக்க வேண்டும். எந்த வகையான வேலையிலும் கட்டளைவாதம் தவறானதாகும்; ஏனெனில், வெகுஜனங்களின் அரசியல் உணர்வு மட்டத்தை மீறுவதிலும் மக்களின் சுயமான நடவடிக்கைக் கோட்பாட்டை மீறுவதிலும் அதுஅவசர நோயை பிரதிபலிக்கிறது. நமதுதோழர்கள் தாங்கள் புரிந்துகொள்கின்ற ஒவ்வொன்றும் மக்களால் புரிந்து கொள்ளப்படுகிறது என நினைத்துக் கொள்ளக் கூடாது. வெகுஜனங்கள் இதை புரிந்துகொள்கிறார்களா என்பதையும் நடவடிக்கையில் ஈடுபட தயாராக இருக்கிறார்களா என்பதையும் அவர்கள் மத்தியில் செல்வதன் மூலமும் ஆய்வு செய்வதன் மூலமும்தான் கண்டுபிடிக்கப்பட முடியும். நாம் அவ்வாறு செய்தால் கட்டளைவாதத்தைத் தவிர்க்கமுடியும். எந்த வகையான வேலையிலும் வால்பிடித்தல்வாதம் கூட

படிப்பகம்

www.padippakam.com



தவறானதாகும்; ஏனெனில், வெகுஜனங்களின் அரசியல் உணர்வு மட்டத்துக்குக் கீழே தாழ்ந்துபோவதிலும், வெகுஜனங்களை முன்னோக்கி வழிநடத்திச் செல்லும் கோட்பாட்டை மீறுவதிலும் அது தாமத நோயை பிரதிபலிக்கிறது. நமது தோழர்கள் தாங்கள் இன்னும் புரிந்துகொள்ளாதிருக்கின்ற எதையும் மக்கள் புரிந்து கொள்ளவில்லை என நினைத்துக் கொள்ளக்கூடாது. மக்களின் தலைவர்களாக செயல்படுவதற்குப் பதிலாக குறிப்பிட்ட சில பிற்போக்கு சக்திகளின் பின்னால் இன்னும் வால்பிடித்துச் செல்பவர்களாக நமது தோழர்கள் இருக்கும்போது—இப்படிப்பட்ட தோழர்கள் இந்தப் பிற்போக்கு சக்திகளின் கருத்துக்களைப் பிரதிபலிக்கின்றனர்; மேலும், அவர்களைப் பரந்துபட்ட வெகுஜனங்கள் என்று தவறாகக் கருதுகின்றனர்—நம்மை மக்கள் மீறுவதும் ஒரு படி முன்னேறிச் செல்ல விரும்புவதும் அடிக்கடி நிகழ்கிறது. ஒரே வார்த்தையில் சொன்னால், ஒரு கம்யூனிஸ்ட்டினுடைய சொல் மற்றும் செயலுக்கான உச்சபட்ச சோதனை யாதெனில் மிகப் பெரும்பான்மையான மக்களின் உயர்ந்தபட்ச நலன்களுக்குப் பொருத்தமானதாகவும், மிகப் பெரும்பான்மையான மக்களின் ஆதரவைப் பெற்றதாகவும் இருக்கவேண்டும் என்பதே. மக்களை நாம் சார்ந்திருக்கின்ற வரை, மக்களின் வற்றாத ஆக்கரீதியான சக்தியை உறுதியாக நம்பியிருக்கின்ற வரை, எனவே, மக்களிடம் நம்பிக்கைக் கொண்டு அவர்களுடன் கலந்திருக்கும் வரை, எதிரி யாரும் நம்மை அழிக்க முடியாது என்பதையும், அதேசமயம் நாம் ஒவ்வொரு எதிரியையும் நசுக்கவும் ஒவ்வொரு சிரமத்தையும் கடந்துவரவும் முடியும் என்பதையும் புரிந்துகொள்ள ஒவ்வொரு தோழருக்கும் உதவவேண்டும்.

மனசாட்சிப்படியான சுயவிமர்சன நடைமுறை நமது கட்சியை மற்றெல்லா அரசியல் கட்சியிலிருந்தும் பிரித்துக் காட்டும் முக்கிய அடையாளச் சின்னமாக இன்னமும் திகழ்கிறது. நாம் கூறுவது போல, ஒரு அறை தினம் சுத்தப்



படுத்தப்படவில்லையென்றால் தூசி குவிந்துவிடும்; நமது முகம் தினம் கழுவப்படவில்லையென்றால் அழுக்காகி விடும்; தோழர்களின் மூளையிலும் கட்சிப் பணியிலும் கூட தூசி படிந்துவிடுகிறது; அவற்றையும் கூட பெருக்கிக் கூட்டவும் கழுவவும் வேண்டியுள்ளது. ''ஓடும் நீர் ஊசிப் போகாது, கதவுப் பிணைப்பை செல்லரிக்காது'' என்ற பழமொழியின் அர்த்தம் இடையறாத இயக்கம் கிருமிகள் மற்றும் இதர ஜீவன்கள் எதுவும் உட்புகுவதை தடுக்கிறது என்பதாகும். நமது வேலையை முறையாக சரிபார்ப்பதும் அவ்வாறு செய்வதில் ஒரு ஜனநாயக வேலைப் பாணியை விருத்தி செய்து கொள்வதும் விமர்சனத்திற்கோ சுய விமர்சனத்திற்கோ அஞ்சாதிருப்பதும், ''உனக்கு தெரிந்ததனைத்தும் ஒளிக்காமல் கூறு'' ''பேசுபவரை பழிக்காதே, மாறாக அவரது வார்த்தைகளால் எச்சரிக்கை அடை'' ''தவறுகளைச் செய்திருந்தால் அவற்றைத் திருத்து, செய்யவில்லையென்றால் அவை வராமல் பாதுகாத்துக்கொள்'' என்பன போன்ற பிரபல சீன முதுமொழிகளைக் கடைபிடிப்பதும் ஆகிய இவை மட்டுமே நமது தோழர்களின் மனங்களையும் நமது கட்சியின் உடலையும் எல்லாவிதமான அரசியல் தூசும் அசுத்தப்படுத்தாதபடி தடுப்பதற்கான பயனுள்ள வழி ஆகும். சரி செய்யும் இயக்கம் பெரும் பயனுடையதாக இருந்ததற்குக் காரணம், ''எதிர்கால தவறுகளைத் தவிர்ப்பதற்கு கடந்த கால தவறுகளிலிருந்து படிப்பினையைப் பெறுவது, நோயாளியைக் காப்பதற்கு நோயைக் குணப்படுத்துவது'' என்ற நோக்கம், நாம் கடைபிடித்த விமர்சனம் மற்றும் சுய விமர்சனம் நேர்மையாகவும், மனசாட்சிப்படியும் இருந்தன; ஒப்புக்கானதாகவோ திரிக்கப்பட்டதாகவோ இல்லை என்பதுதான்.

மிகப் பரந்துபட்ட சீன மக்களின் உயர்ந்த நலன்களின் மீது தங்கள் அனைத்து நடவடிக்கைகளையும் அடிப்படையாகக் கொண்டவர்களும், நமது லட்சியத்தின் நியாயத்தை

படிப்பகம்

www.padippakam.com



முழுமையாகப் புரிந்துகொண்டவர்களுமான சீன கம்யூனிஸ்டுகளாகிய நாம் எந்த ஒரு தனிப்பட்ட தியாகத்திற்கும் ஒரு போதும் அஞ்சுவதில்லை; லட்சியத்துக்காக நமது உயிரைக் கொடுக்க எந்த நேரமும் தயாராக இருக்கிறோம்; அப்படிப்பட்ட நாம் மக்களின் தேவைகளுக்கு பொருத்தமல்லாத எந்த ஒரு கருத்தையோ, நோக்கத்தையோ, அபிப்பிராயத்தையோ, அல்லது வழிமுறையையோ வெறுத்து ஒதுக்க தயங்குபவர்களாக இருக்க முடியுமா? அரசியல் தூசும், கிருமிகளும் நமது சுத்தமான முகத்தை அசுத்தப்படுத்தவோ அல்லது நமது ஆரோக்கியமான உடலை தின்று தீர்க்கவோ நாம் அனுமதிக்க விருப்பம் உடையவர்களாக இருக்க முடியுமா? எண்ணற்ற புரட்சிகர தியாகிகள் மக்களின் நலன்களுக்காக தங்கள் உயிர்களை ஈந்துள்ளனர். உயிருடன் உள்ள நாம் அவர்களை எண்ணும்போது நமது இதயங்கள் வேதனையால் நிறைகின்றன—அப்போது, நாம் தியாகம் செய்யமுடியாத தனிப்பட்ட நலன் எதுவுமோ நாம் கைவிட முடியாத தவறு எதுவுமோ இருக்க முடியுமா?

தோழர்களே! இம் மாநாடு முடிந்ததும் போர்முனைக்கு நாம் சென்று, இதன் தீர்மானங்களால் நாம் வழிகாட்டப்பட்டு, ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களை இறுதியாக தோற்கடிப்பதற்கும் புதிய சீனா ஒன்றை உருவாக்குவதற்கும் போராடுவோம். இந்த இலட்சியத்தை அடைவதற்காக நாம் நாட்டு மக்கள் அனைவருடனும் ஒன்றுபடுவோம். மறுபடியும் கூறுகிறேன், ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களை தோற்கடிப்பதற்கும் புதிய சீனாவை கட்டியெழுப்புவதற்கும் ஆதரவாக இருக்கின்ற எந்த ஒரு வர்க்கத்துடனும், எந்த ஒரு கட்சியுடனும், எந்த ஒரு குழுவுடனும் அல்லது எந்த ஒரு தனி நபருடனும் நாம் ஒன்றிணைவோம். இந்த குறிக்கோளை அடைவதற்காக நாம் நமது கட்சியின் சகல சக்திகளையும் ஜனநாயக மத்தியத்துவ ஸ்தாபன மற்றும் கட்டுப்பாடு கோட்பாடுகளின் அடிப்படையில் உறுதியாக ஐக்கியப்படுத்துவோம். கட்சியின் வேலைத்திட்டத்துக்கும் அமைப்பு விதிகளுக்கும் முடிவுகளுக்கும் கட்டுப்பட்டு நடக்கின்ற எந்த ஒரு தோழருடனும் நாம் ஐக்கியப்படுவோம்.



வடக்கு படையெடுப்புக் கால கட்டத்தில் 60,000-க்கும் குறைவான உறுப்பினர்களையே நமது கட்சி கொண்டிருந்தது; பின்னர் அவர்களில் பெரும்பாலானோர் எதிரியால் சிதறடிக்கப்பட்டனர்; விவசாயப் புரட்சிப் போர்க் கால கட்டத்தில் 3,00,000-க்கும் குறைவான உறுப்பினர்களையே நமது கட்சி கொண்டிருந்தது; அவர்களில் பெரும்பாலானோர் அதே போல் எதிரியால் சிதறடிக்கப்பட்டனர். இப்போது நாம் 12, 00,000—க்கும் அதிகமான உறுப்பினர்களை கொண்டிருக்கிறோம்; இந்த நேரத்தில் நாம் எதிரியால் சிதறடிக்கப்படுவற்கு நம்மை நாம் எந்த சூழ்நிலையிலும் அனுமதிக்கக்கூடாது. இந்த மூன்று காலக்கட்டத்தின் அனுபவத்திலிருந்து நாம் பயன் பெறுவோமேயானால், நாம் அடக்கமானவர்களாகவும், கர்வத்துக்கு எதிரான பாதுகாவலர்களாகவும் இருப்போமேயானால் கட்சிக்குள் இருக்கின்ற அனைத்து தோழர்களுக்கிடையிலும் ஐக்கியத்தை பலப்படுத்தக்கூடியவர்களாகவும் கட்சிக்கு வெளியிலுள்ள அனைத்து மக்களுடனுமான ஐக்கியத்தை பலப்படுத்தக்கூடியவர்களாகவும் இருப்போமேயானால் நாம் ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களையும் அவர்களது அடிமைத்தனம் மிக்க ஏவல்நாய்களையும் உறுதியாகவும் முற்றாகவும் அடியோடும் பூரணமாகவும் அழித்தொழித்து அதன் பின்னர் புதிய ஜனநாயக சீனாவை கட்டியெழுப்புவதில் திடமாக இருக்கலாம்.

புரட்சியின் மூன்று கால கட்டங்களின் அனுபவம், குறிப்பாக ஜப்பானிய எதிர்ப்பு யுத்தத்தின் அனுபவம் நம்மையும் சீன மக்கள் அனைவரையும் திடமாக நம்பவைத்துள்ளது என்னவென்னில், சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் முயற்சிகள் இல்லாமல், சீன மக்களின் முக்கிய ஆதாரமாக சீனக் கம்யூனிஸ்ட்கள் இல்லாமல் சீனா ஒரு போதும் சுதந்திரத்தையோ அல்லது விடுதலையையோ அல்லது தொழில் மயத்தையோ தனது விவசாயத்தில் நவீன மயத்தையோ அடைய முடியாது என்பதாகும்.

படிப்பகம்

www.padippakam.com



தோழர்களே! மூன்று புரட்சிகளின் அனுபவத்தை ஆயுதமாகக் கொண்ட சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் துணையுடன் நாம் நமது மாபெரும் அரசியல் பணியை நிறைவேற்ற முடியும் என்று நான் திடமாக நம்புகிறேன்.

ஆயிரமாயிரம் தியாகிகள் தங்களது உயிரை மக்களுக்காக வீரதீரத்துடன் அர்ப்பணித்துள்ளனர்; அவர்களது பதாகையை உயரப் பிடித்து அவர்களது இரத்தம் தோய்ந்த பாதை வழியே பீடு நடை போடுவோமாக!

ஒரு புதிய ஜனநாயக சீனா விரைவில் உதிக்கும். அந்த மகத்தான நாளை நாம் வாழ்த்துவோமாக!



# குறிப்புகள்

1. சீன தேசிய விடுதலை முன்னணிப் படைகள் அல்லது சுருக்கமாகச் சொன்னால், தேசிய முன்னணிப் படைகள் 1935 டிசம்பர் 9—ம் தேதி இயக்கத்தில் கலந்து கொண்ட இளைஞர்களால் 1936, செப்டம்பரில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையின் கீழ் உருவாக்கப்பட்ட ஒரு புரட்சிகர வாலிபர் ஸ்தாபனமாகும். எதிர்ப்புப்போர் வெடித்த பின்னர் அதன் உறுப்பினர்களில் பலர் செயலில் இறங்கி எதிரிப்பகுதிகளுக்குப் பின்புறம் தளப் பகுதிகளை கட்டுவதில் பங்கெடுத்துக் கொண்டனர். கோமிங்டாங் பகுதிகளில் இருந்த தேசிய முன்னணிப் படைகளின் அமைப்புகள் 1938—ல் சியாங்—கே சேக் அரசாங்கத்தினால் பலவந்தமாக கலைக்கப்பட்டன; விடுவிக்கப்பட்ட பகுதிகளில் இருந்தவை பின்னர் இன்னும் பரந்த வாய்ப்புடைய ஒரு ஸ்தாபனமாகி தேசியமீட்பு இளைஞர் சங்கத்தில் ஒன்றிணைந்து விட்டது.

2. 1937 ஜூலை 7-ல் படையெடுத்து வந்த ஜப்பானியப் படைகள் பீகிங்கிற்கு தென் மேற்கில் சுமார் பத்து கிலோ மீட்டர் தொலைவில் இருந்த லூகௌசியாஒவிலிருந்த சீன இராணுவப் படைத்தளத்தை தாக்கின. தீவிரமான, தேசம் தழுவிய ஜப்பானிய எதிர்ப்பு இயக்கத்தின் செல்வாக்கின்கீழ் சீனத் துருப்புகள் எதிர்த்துப் போரிட்டன. எட்டு ஆண்டுகள் நீடித்த சீன மக்களின் தீரமிக்க ஜப்பானிய எதிர்ப்புப் போரின் தொடக்கத்தை இந்த சம்பவம் குறித்தது.

3. மூன்று கம்யூனிச—எதிர்ப்பு தாக்குதல்களின் முழுமையான சித்திரத்தை காண வேண்டுமேயானால் "கோமிங்டாங் மத்திய நிர்வாகக் குழுவினதும் மக்களின் அரசியல் சபையினதும் கூட்டத் தொடர்கள் பற்றிய ஒரு கருத்தறிவிப்பை'' பார்க்கவும்.

படிப்பகம்

www.padippakam.com



4. சீனாவின் வடக்கு—தெற்கிலான இரயில் பாதைகள் வழியே செல்லும் போக்குவரத்திற்கு திறக்க நிர்ப்பந்திப்பதற்கான இந்த நடவடிக்கைகள் 1944-மே-ல் ஜப்பானிய படைகளால் காண்டன் ஹன்கொ இரயில் பாதையின் முழு நீளத்தையும் கைப்பற்றி அதன் மூலம் வடசீனாவிற்கும் தென்சீனாவிற்கும் இடையில் தடைபடாத மார்க்க இணைப்பு ஒன்றை பெற்றுக் கொள்வதற்காக தொடுக்கப்பட்ட தாக்குதலாக அமைந்தன.

5. ஸ்கோபி கிரீஸில் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பு படைகளின் தளகர்த்தராக இருந்தார்.

1944 அக்டோபரில் ஐரோப்பிய கண்டத்தில் தோல்வியடைந்து ஜெர்மன் படையெடுப்பாளர்கள் பின் வாங்கிக் கொண்டிருந்தபோது நாடு கடத்தப்பட்டு லண்டனில் இருந்து வந்த பிற்போக்கு கிரேக்க அரசாங்கத்தை தங்களுடன் அழைத்துக்கொண்டு ஸ்கோபியின் படைகள் நாட்டில் நுழைந்தன. ஜெர்மன் படையெடுப்பாளர்களுக்கு எதிராக ஒரு நீண்ட தீரமிக்க போராட்டத்தை நடத்தியிருந்த கிரேக்க மக்கள் விடுதலைப் படையை தாக்குவதிலும் கிரேக்க தேசபக்தர்களை படுகொலை செய்வதிலும் ஸ்கோபி இந்த அரசாங்கத்துக்கு வழிகாட்டி உதவி செய்தான்; இவ்வாறாக கிரேக்க நாட்டை இரத்த வெள்ளத்தில் மூழ்கடித்தான்.

6. கோமிங்டாங் பிற்போக்கு கும்பல் தனது பாசிச ஆட்சியை அடிமட்டம் வரை அமுல்படுத்துவதற்கு பயன்படுத்திய நிர்வாகமுறைக்குத்தான் **பாவோசியா** என்றுபெயர். 1932 ஆகஸ்ட் 1-ல் சியாங்-கே-சேக் ஹோனான், ஹூபே, ஹன்வை ஆகிய மாகாணங்களை உள்ளடக்கி தனது ''**பாவோசியா** அமைப்பு விதிகள் மற்றும் கௌண்டிகளில் மக்கள் கணக்கெடுப்புக்கான விதிகளை'' பிரகடனம் செய்தான். குடித்தனங்களின் அடிப்படையில் **பாவோவும் சியாவேவும்** அமைக்கப்படுவதற்கு இந்த ''விதிமுறைகள்'' வழிவகை செய்தன; ஒவ்வொரு



குடித்தனத்துக்கும், பத்து குடித்தனங்களைக் கொண்ட ஒவ்வொரு **சியாவுக்கும்** ஒரு தலைவர் உண்டு; பத்து **சியாக்களைக்** கொண்ட ஒவ்வொரு **பாவோவுக்கும்** ஒரு தலைவர் உண்டு. அண்டையிலுள்ள ஒவ்வொருவரின் நடவடிக்கைகளையும் கவனிப்பதும் அவர்களைப் பற்றி ஆட்சியாளர்களுக்கு தெரிவிப்பதும் அவசியம்; ஒருவர் குற்றவாளி என கண்டுபிடிக்கப்பட்டால் அனைவருமே தண்டிக்கப்பட்டனர். நிர்ப்பந்தமாக உழைப்பை பிழிந்தெடுப்பதற்கு எதிர்ப்புரட்சிகர நடவடிக்கைகள் கூட அமுல்படுத்தப்பட்டன. 1934 நவம்பர் 7 அன்று கோமிங்டாங் அரசாங்கம் எல்லா மாவட்டங்களிலும் தனது ஆட்சியின் கீழுள்ள நகராட்சிகளிலும் இந்த பாசிச ஆட்சிமுறை நிறுவப்படப் போவதாக அதிகாரப்பூர்வமாக அறிவித்தது.

7. 1942 நவம்பரில் சீனா, அமெரிக்கா, பிரிட்டன் ஆகியவற்றால் கூட்டப்பட்ட கெய்ரோ மாநாடு கெய்ரோ பிரகடனத்தை வெளியிட்டது. அந்தப் பிரகடனம் தைவானும் மற்றும் சில இதர பிரதேசங்களும் சீனாவுக்கு திருப்பி அளிக்கப்பட வேண்டும் என தெளிவாக வரையறுத்தது. 1950 ஜூனில் அமெரிக்க அரசாங்கம் சீனாவின் அரசியல் சுயாதிபத்தியத்தை பறிக்கும் நோக்கத்துடன் இந்த உடன்பாட்டை வெளிப்படையாகவே மீறி தைவானைக் கட்டுப்படுத்த ஒரு கடற்படையை அனுப்பி வைத்தது.

8. யுவான் ஷிஹ்-காய் சிங் ராஜ வம்சத்தின் கடைசி ஆண்டுகளில் வடக்கத்திய நிலப்பிரபுக்களுடைய தலைவராய் இருந்தார். 1911-ஆம் ஆண்டு புரட்சியின்மூலம் சிங் ராஜ வம்சம் தூக்கியெறியப்பட்ட பின்னர் அவர் குடியரசின் ஜனாதிபதி பதவியை பறித்துக் கொண்டார். பெரும் நிலப்பிரபு மற்றும் பெரும் தரகு வர்க்கங்களை பிரதிநிதித்துவப்படுத்திய வடக்கத்திய நிலப்பிரபுக்களின் முதல் அரசாங்கத்தை அமைத்தார். எதிர்ப்புரட்சிகர ஆயுதப்படைகளை பயன்படுத்தியும் ஏகாதிபத்தியவாதிகளின் ஆதரவுடனும்



படிப்பகம்

www.padippakam.com



முதலாளிகளின் இணக்கமான குணாம்சத்தை சாதகமாக பயன்படுத்திக் கொண்டும் அவர் இதை செய்தார். இந்த முதலாளித்துவ வர்க்கம் அப்போது புரட்சிக்கு தலைமை தாங்கியது. 1915-ல் அவர் தன்னைத் தானே சக்ரவர்த்தியாக அறிவித்துக் கொள்வதற்கும் ஜப்பானிய ஏகாதிபத்திய வாதிகளின் ஆதரவை பெறுவதற்கும் சீனாவை ஜப்பான் பிரத்தியேகமாக கட்டுப்படுத்தக் கூடிய நோக்கத்தை அடைவதற்காக வைத்த 21 அம்ச கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டார். அதே ஆண்டு டிசம்பரில் அவர் சிம்மாசனம் ஏறுவதற்கு எதிரான எழுச்சி ஒன்று யுன்னான் மாகாணத்தில் நடைபெற்று, உடனே தேசம் தழுவிய உதவியையும் ஆதரவையும் பெற்றது. யுவான் சிஹ்ஹை 1916 ஜூனில் பீகிங்கில் இறந்தார்.

9. ஓமெய் செக்குவான் மாகாணத்தின் தென்மேற்கில் உள்ள ஒரு பிரபலமான மலையாகும். ஜப்பானிய—எதிர்ப்பு யுத்தத்தில் சியாங்- கே- ஷேக் ஆளும் கும்பலின் கடைசிப் புகலிடமாயிருந்த செக்குவானின் மலையடர்ந்த பகுதிகளை இது குறிக்கிறது.

10. டாக்டர் சன்- யாட்-சென்னின், 1924-நவம்பர் 10 தேதியிட்ட 'வடக்கிற்கு என் புறப்பாடு' பற்றிய அறிக்கையிலிருந்து எடுக்கப்பட்டது.

11. 18-ம் நூற்றாண்டு முதற்கொண்டு பல பத்தாண்டுகளாக பிரிட்டன் சீனாவுக்கு அபினி ஏற்றுமதியை ஆண்டுக்காண்டு அதிகரித்து வந்துள்ளது, இந்த வியாபாரம் சீன மக்களை போதை பழக்கத்திற்கு அடிமைப்படுத்தியது மட்டுமல்ல; அதன் வெள்ளியையும் சூறையாடியது. சீனாவில் இதற்கு மிகக் கடுமையான எதிர்ப்பு கிளம்பியது. 1840-ல் பிரிட்டன் சீனாவுடனான வர்த்தக உறவை பலப்படுத்துவது என்ற சாக்கில் அதன் மீது ஆயுதந்தாங்கிய ஆக்கிரமிப்பை தொடுத்தது. லின்-சே-சூவின் சீனத் துருப்புகள் எதிர்த்துப் போரிட்டன, சீன மக்கள்



தன்னெழுச்சியாக ஆரம்பித்த ''பிரிட்டிஷ் படைகளை அடக்கு'' என்ற இயக்கம் பிரிட்டிஷ் ஆக்கிரமிப்பு படைகளுக்கு பெரும்அடிகளைக் கொடுத்தன. இருப்பினும், 1842-ல் ஊழல் மலிந்த சிங் அரசாட்சி பிரிட்டனுடன் நான்கிங் உடன்படிக்கையைச் செய்துகொண்டது. இந்த உடன்படிக்கை பிரிட்டனுக்கு உத்தரவாதப் பத்திரங்கள் அளிக்கப்படவும் காண்டன் ஒப்படைக்கப்படவும் வகை செய்து ஷங்காய், ஃபூசோ, அமொய், நிங்போ, காண்டன் ஆகியவை பிரிட்டிஷ் வர்த்தகத்திற்கு திறந்து விடப்படவும் சீனாவுக்குள் இறக்குமதியாகும் பிரிட்டிஷ் சரக்குகளுக்கான சுங்கவரியை சீனா, பிரிட்டிஷ் ஆகிய இரண்டும் சேர்ந்து விதிக்க வேண்டும் எனவும் விதித்தது.

12. 1941- ஆகஸ்டில் அட்லாண்டிக் மாநாட்டின் முடிவில் அமெரிக்காவும் பிரிட்டனும் கூட்டாகச் சேர்ந்து அட்லாண்டிக் சாசனத்தை வெளியிட்டன. சோவியத் யூனியன் அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளின் வெளிவிவகார மந்திரிகளின் மாஸ்கோ மாநாடு 1943, அக்டோபரில் நடைபெற்றது. சோவியத்யூனியன், அமெரிக்கா, பிரிட்டன் ஆகியவற்றின் மாநாடு 1943, நவம்பர் முதல் டிசம்பர் வரை ஈரான் தலைநகரில் நடைபெற்றது. சோவியத் யூனியன், அமெரிக்கா, பிரிட்டிஷ் ஆகியவற்றின் கிரீமியா மாநாடு 1945 பிப்ரவரியில் யெல்டாவில் நடைபெற்றது. அந்தச் சர்வதேச மாநாடுகள் எல்லாவற்றிலும் பங்குபெற்ற நாடுகளின் கூட்டு முயற்சியால் ஜெர்மனியையும் ஜப்பானையும் தோற்கடிப்பது எனவும், யுத்தத்திற்குப் பின்னர் ஆக்கிரமிப்பு சக்திகளுடைய பாசிசத்தின் மிச்ச சொச்சங்களின் புத்துயிர்ப்பைத் தடுப்பதும் உலக சமாதானத்தைப் பேணுவதும், எல்லா நாடுகளின் மக்களுடைய சுதந்திரத்திற்கும் ஜனநாயகத்திற்குமான அவர்களது அபிலாசைகளை அடைய உதவி செய்வதும் என்ற உறுதியை பதிவு செய்தன. ஆனால் போர் முடிந்த உடனே அமெரிக்கா மற்றும் பிரிட்டன் அரசாங்கங்கள் இந்த சர்வதேசிய உடன்பாடுகள் அனைத்தையும் மீறின.

படிப்பகம்

www.padippakam.com



13. 1945, ஏப்ரலிலிருந்து ஜுன் வரை ஸான்பிரான்சிஸ்கோவில் நடைபெற்ற ஐம்பது நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் பங்குபெற்ற சர்வதேச ஸ்தாபனம் மீதான ஐக்கிய நாடுகள் மாநாட்டில் சீனாவின் விடுதலையாக்கப்பட்ட பகுதிகளின் பிரதிநிதியாக தோழர் டுங்-பி-வூ கலந்து கொண்டார். மாஸ்கோ மற்றும் டெஹ்ரான் மாநாடுகளின் முடிவுகளுக்கிணங்க 1944, ஆகஸ்ட் முதல் அக்டோபர் வரை அமெரிக்காவில் உள்ள டும்பார்ட்டன் ஓக்ஸாவில் சோவியத் யூனியன், அமெரிக்கா, பிரிட்டன், சீனா ஆகியவற்றின் பிரதிநிதிகள் சந்தித்தனர்; அங்கே ஐக்கிய நாடுகளின் சபைக்கான நகல்திட்டங்கள் வரையப்பட்டன.

14. சீனாவில் விடுதலையாக்கப்பட்ட பகுதிகளின் மக்களின் மாநாட்டிற்காக தயாரிப்புக் கமிட்டியொன்று சீனக் கம்யூனிஸ்டு கட்சியின் ஏழாவது தேசிய மாநாட்டின் பின்னர் யென்னானில் அமைக்கப்பட்டு, விடுதலையாக்கப்பட்ட பகுதிகள் எல்லாவற்றிலிருந்தும் பிரதிநிதிகள் பங்கு பெற்ற தொடக்கக் கூட்டம் ஒன்றை நடத்தியதென்றாலும் ஜப்பானின் சரணாகதியோடு நிலைமை மாறிவிடவே, திட்டமிடப்பட்டிருந்த அம்மாநாடு கூட்டப்படவில்லை.

—O—

## பதிப்பாளர் குறிப்பு :

மாசேதுங்கின் **கூட்டு அரசாங்கம் பற்றி** என்ற இக்கட்டுரையின் தமிழாக்கம், 1965-செப்டம்பரில் பீகிங் அந்நிய மொழிகள் அச்சகத்தினரால் பிரசுரிக்கப்பட்ட **மாசேதுங்கின் தேர்ந்த** கட்டுரைகள், பாகம் 3, முதலாவது ஆங்கில பதிப்பில் கண்டுள்ள ஆங்கில வாசகத்தினின்றும் செய்யப்பட்டுள்ளது.

படிப்பகம்

www.padippakam.com

இது
சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின்
ஏழாவது தேசிய மாநாட்டிற்குத்
தோழர் மாசேதுங் அவர்களால்
தயாரிக்கப்பட்ட
அரசியல் அறிக்கை

விடியல் பதிப்பக
வெளியீடு

விலை ரூ. 10/-

படிப்பகம்